Koviloor Digital Library

வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்

வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்

11748
Q23

பதிப்பாசிரியர்
திலகவதியார் திருவருள் ஆதீனம்
தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-4

வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்



திருஞான சம்மந்தர் நாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

பதிப்பாசிரியர்:
திலகவதியார் திருவருள் ஆதீனம்
தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 11748
Q23

வெளியீடு:
திலகவதியார் திருவருள் ஆதீனம்

அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி நினைவு நூலகம்,

1120, மச்சுவாடி, புதுக்கோட்டை - 622 001.

Koviloor Digital Library

நூல் விபரம்

நூல் தலைப்பு	:	**வள்ளலார் நோக்கில் நால்வர்பெருமக்கள்** ஆய்வு நூல்
பதிப்பாசிரியர்	:	தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	மார்ச், 2008
பதிப்புரிமை	:	பதிப்பாசிரியருக்கே
தாளின் தன்மை	:	70 GSM
நூலின் அளவு	:	டெம்மி 1/10
அச்சு எழுத்து	:	12 பாய்ன்ட்
மொத்த பக்கங்கள்	:	108
நூல் விலை	:	ரூ. 40/-
அச்சிட்டோர்	:	ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ், தெட்சிணாமூர்த்தி மார்க்கெட், புதுக்கோட்டை. தொலைபேசி : 04322 - 320798
கிடைக்குமிடம்	:	தவத்திரு. தயானந்த சந்திரசேகரன், திலகவதியார் திருவருள் ஆதீனம், 1120, மச்சுவாடி, புதுக்கோட்டை - 622 001. தொலைபேசி : 04322 - 228024 அலைபேசி : 9789182825

Koviloor Digital Library

4-4



திருஞான சம்மந்தர் நாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

Koviloor Digital Library

திலகவதியார் திருவருள் ஆதீன குருமுதல்வர் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அன்னையாரின் 80 ஆம் அகவை நிறைவு விழா வெளியிடு

2008

திலகவதி அம்மையார், அப்பர் பெருமானுக்கு தீருநீறு அளித்து அருள்பாலிக்கின்ற காட்சிக்கு முன், முதல் பெண் ஆதீனம் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அன்னையார் வணங்குகின்ற காட்சி. உள்படத்தில் அன்னையின் அருள்வாரிசு தவத்திரு. தயானந்த சந்திரசேகரன்.

Koviloor Digital Library

4-4

பொருளடக்கம்

❖ அணிந்துரை
அருட்செல்வர் பெருந்தகை
பத்மபூசண் டாக்டர். நா. மகாலிங்கம் vi

❖ வாழ்த்துரை
பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி செட்டியார் ix
ராணியார். சாருபாலா ஆர். தொண்டைமான் x

❖ முகவுரை
பேராசிரியர். கு.ப.கண்ணன் xi

❖ பதிப்பாசிரியர் உரை
தவத்திரு. தயானந்த சந்திரசேகரன் xiv

1. வள்ளலார் நோக்கில் - ஆளுடையபிள்ளையார்
பேராசிரியர். டாக்டர். வை. இரத்தினசபாபதி 1

2. வள்ளலார் நோக்கில் - ஆளுடைய அரசுகள்
பேராசிரியர். முனைவர். சோ. சத்தியசீலன் 19

3. வள்ளலார் நோக்கில் - ஆளுடைய நம்பிகள்
பேராசிரியர். முனைவர். இரா. செல்வகணபதி 24

4. வள்ளலார் நோக்கில் - ஆளுடைய அடிகள்
தவத்திரு. ஊரன் அடிகளார் 47

Koviloor Digital Library

நா. மகாலிங்கம், பி.எஸ்.சி., எப்.ஐ.இ.
தலைவர்
சக்தி நிறுவனங்கள்

74, மவுண்ட் ரோடு,
கிண்டி, சென்னை - 600 032.
✆ (அ) 22350814 (வீ) 24996898
ஃபாக்ஸ் : 22350041

அணிந்துரை

அருட்செல்வர் பெருந்தகை,
டாக்டர். நா.மகாலிங்கம்

உலகம் தழைக்க, உயிர் தழைக்க அன்பு எனும் உணர்வு தழைக்க, உருவம் தழைத்த வள்ளற் பெருமான் தம் வழிகாட்டிகளாக் கொண்ட பெருமக்கள் சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்கள்.

பெருமக்களைச் சமய உலகம் சமய குரவர் என்றும், எம்பெருமக்கள் என்றும் கொண்டாடுகிறது. இச்சமய குரவர் அருளிய தெய்வச் செழுந்தமிழ்ப்பாக்கள் தேவாரம் எனவும், திருவாசகம் எனவும் பன்னிரு சைவத் திருமுறைகளில் முதல் எட்டுத் திருமுறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வள்ளற் பெருமான் சுத்த சன்மார்க்கம் என்று தாம் வெளிப்படுத்திய திருநெறியை இவர்களிடமிருந்து பெற்றதாகவே கருதுகின்றார்.

ஆளுடைய பிள்ளை, ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள் என்று அன்பு பொங்கக் குறிப்பிடும் வள்ளற் பெருமான் தமது கடப்பாட்டை அழகு பொங்கப் பாடுவதைக் கண்டு மகிழலாம்.

அடியன் ஆக்கிப் பிள்ளை ஆக்கி நேயன் ஆக்கியே
அடிகள் ஆக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கியே
படியுளோரும் வானுளோரும் இதனை நோக்கியே
பதியும் ஓரவாரன் என்பர் பரிவு தேக்கியே.

சமய குரவர் நால்வரைப் போலவே, தம்மையும் தாச மார்க்கம், சத்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு நெறியிலும் இறைவன் தம்மைப் பழக்கி ஆண்டு கொண்டான் என்கிறார்.

Koviloor Digital Library

ஆளுடைய பிள்ளை என்பது, சிதம்பரம் இராமலிங்கமாகிய தம்மை ஆளாகக் கொண்ட சீர்காழிப்பிள்ளை என்று பொருள்படும். ஆளாகக் கொள்ளுதல் குருவினது செயல் ஆகையால், இப்பெருமக்கள் நால்வருமே தம் குருநாதர்கள் என்று காட்டுகிறார் வள்ளற் பெருமான்.

நால்வர் பெருமக்கள நின்ற வண்ணம் திருக்கோயில்களில் காட்சி தருபவர்கள். காரணம் அவர்கள் இருக்க நேரமில்லாமல் நாடு முழுவதும் திரிந்து மக்களை நல்வழி காட்டி ஆட்கொண்டார்கள்.

தொண்டு என்பதைப் பிரகாசப்படுத்தினார்கள். பசி நீக்கல், நோய் நீக்கல், அறியாமை நீக்கல், உற்ற இடத்து உதவல், அன்புநெறி போற்றுதல், எளிமை, இனிமை, பணிவு என்னும் தொண்டர் நெறி நால்வர்களால் விளக்கமடைந்தது. வள்ளற் பெருமான் நின்ற வண்ணமே திருக்காட்சி நல்கும் படங்களே, உருவங்களே, அடியவர்களால் வணங்கப் பெறுகின்றன. வள்ளற் பெருமானும் இத்தொண்டு நெறியை மீட்டெடுத்து மேலும் வளர்த்தனர்.

சாதி சமய சழக்குகளைக் கடந்து மனிதருக்குள் பிற எந்தப் பேதங்களும் வாராமல் காத்தல் நால்வர் நெறி. வள்ளல் நெறியும் அதுவேயாகும்.

சந்தான குரவர்கள் மெய்கண்டார் முதலான நால்வர். இவர்கள் இருந்து பணி செய்தவர்கள். இவர்கள் அமர்ந்த நிலையில் காணப்படுவார்கள். இவர்கள் மெய் அறிவுப் பணி மட்டுமே செய்தார்கள். இவர்கள் காலத்திற்குப் பின் இவர்கள் வழியினரால் தமிழகத்தில் திருமடங்கள் தோன்றின.

வள்ளற் பெருமான் சந்தான குரவர் வழியில் மடங்களைத் தோற்றுவிக்காமல், சங்கங்களைத் தோற்றுவித்தார். சங்கம் ஜனநாயக மரபு பேணுவது, எந்த பேதங்களும் அற்ற மனிதர்கள் கூடிநின்று எந்தவித ஆராவாரமும், சடங்கு முதலியவைகளும் இல்லாமலும், நேரிடையாகக் கடவுளை வழிபடும் அமைப்பை உடையது. அந்த வகையில், இது ஆன்மிக உலகின் பெரும் புரட்சி என்று கூறக்கூடிய தகுதி வாய்ந்தது.

நால்வர் பெருமக்கள் சித்தாந்த சைவ சமயத்து மக்கட்கும் தலைவர்கள், வேதாந்த சைவ சமயத்துக்கும், வீர சைவத்துக்கும் இவர்களே தலைவர்கள். இவர்களே வள்ளற் பெருமானின் சுத்த சன்மார்க்கத்துக்கும் வழிகாட்டிகள்.

மணிவாசகப் பெருமானின் 'என்னையும் இருப்பது ஆக்கினன்' என்ற தொடரே வள்ளற் பெருமானை மிகவும் கவர்ந்து ஊக்கிய தொடர். சுத்த சன்மார்க்க விதை.

இந்த நால்வரும் தங்கள் உடம்பு நிலத்தில் விழாமல் இறை ஒளியில் கலந்தவர்கள் சாகாக் கலைக்கும் நித்திய தேகத்துக்கும் இலக்கியமா விளங்குபவர்கள்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசர் நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் எய்தினார் என்று சேக்கிழார் பாடுவது வள்ளலார் கூறிய ஞானதேக விளக்கமே என்று அறிய வேண்டும்.

இவ்வகையில், நால்வர் பெருமக்களைத் தனித்தனியே அருண்மாலைகளால் துதித்துப் போற்றினார் வடலூர் வள்ளல். அப்பாடல்கள் மிக இனியவை. கல்நெஞ்சத்தையும் கனிவிப்பவை. கருத்தாழம் மிக்கவை. அவைகளை ஒரு தொகுப்பாக கற்றறிந்த சான்றோர் நால்வரைக் கொண்டு விளக்கம் வரையச் செய்திருக்கிறார் திலகவதியார் ஆதீனம் தவத்திரு தயானந்த சந்திரசேகரனார் அவர்கள்.

இந்த நூல் ஆதீன குரு முதல்வர் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அன்னையின் எண்தாம் ஆண்டு நிறைவு விழா வெளியீடாக மலர்கிறது.

ஸ்ரீ அன்னையார் காலத்தை வென்றவர். குறையாத வயதுடையவர். இலக்கியச் செல்வர். இன்னுரையாளர் ஆன்மீகத் தொண்டில் தம்மை முழுதும் அர்ப்பணித்துக்கொண்ட அருளாளர்.

அவர் நிறுவிய ஆதீனத் தொண்டுகளைக் குறைவின்றி நடத்தி வருவதோடு புதிய புதிய பணிகளை மேற்கொண்டு அழகுறச் செய்து வருகின்றார், தவத்திரு தயானந்த சந்திரசேகரனார். அவர்களது சிவத்தொண்டும், தவத்தொண்டும் நீடு ஓங்கிச் சிறக்க வாழ்த்துகிறேன்.

இந்த நூலில் பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி, முனைவர் இரா. செல்வகணபதி, முனைவர் சோ. சத்தியசீலன், தவத்திரு ஊரன் அடிகளார் ஆகியோர் வரைந்த நால்வர் பெருந்தகைகள். வள்ளற்பெருமான் ஆகியோரின் அரிய ஆய்வுக் கருத்துக்கள் அடங்கிய கட்டுரைகள் மிளிர்கின்றன. இவ்வாசிரியர் நால்வருமே சன்மார்க்கிகள். சன்மார்க்க சிந்தனையாளர்கள். அவர்களைத் தேர்ந்தெடுத்து வள்ளற் பெருமானின் நால்வர் துதிகளை விளக்கம் செய்ய வழிசெய்த தவத்திரு தயானந்த சந்திரசேகரனார் அவர்களைப் பாராட்டுகிறேன்.

திலகவதியார் திருவருள் ஆதீனத்தை வாழ்த்திப் பொன் விழாவும், நூற்றாண்டு விழாக்களும் பொழிய பல்லூழி வாழ்க என அருட்பெருஞ்சோதி ஆண்டவரை நினைந்து வாழ்த்துகிறேன்.

(signature)

நா. மகாலிங்கம்

Koviloor Digital Library

Kalaimamani

Dr. Nalli Kuppuswami Chetti

Recipient of Padma Shri Award from Govt. Of India

President	Vice-President	Patron	Executive Committee Member
Sri Parthasarathy Swami Sabha Sri Krishna Gana Sabha Nungambakkam Cultural Academy Brahma Gana Sabha Sri Bhairavi Gana Sabha Mudhra	The Madras Film Society Mylapore Fine Arts Club *Member* Central Board of Film Certification	Sri Lalith Kala Akademi Foundation, Mysore *Trustee* Sri Thyagaraja Sangeetha Vidwath Samajam	Bharathiya Vidhya Bhavan, Chennai Branch

19. 3. 2008

வாழ்த்துரை

பத்மஸ்ரீ. நல்லி குப்புசாமி செட்டியார்

விஞ்ஞானம் வெகு வேகமக வளர்ந்து வரும் இந்த யுகத்தில் மனித சமுதாயத்தின் மேன்மைக்காக மெய்ஞானத்தையும் விட்டுவிடாமல் கூடவே அழைத்துச் செல்லும் பணியைச் செய்யும் ஆன்மிக நிறுவனங்களில் ஒன்றான புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம் இந்தத் தலைமுறையினரின் பாராட்டை மட்டுமல்லாமல் எதிர்காலத் தலைமுறைகளின் நன்றிக்கும் உரியதாகிறது.

இப்படிப்பட்ட அமைப்புகள் இல்லையென்றால் பாரதம் தன் பழம்பெருமையை இழந்துவிடும். இந்த வகையில் அரிய பண்பாட்டினைக் கட்டிக்காத்து வரும் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் குறிப்பாக தவத்திரு. தயானந்த சந்திரசேகரன் அவர்களையும் ஆத்மார்த்தமாக பாராட்டுகிறேன்.

வள்ளலார் மீது எனக்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. சுவாமி விவேகானந்தரைப் போல அவர் சமயத்தையும், தத்துவத்தையும் இணைத்தவர். சமயக்குரவர்களின் வழியில் வந்து அவர்களின் பக்தியுடன் சன்மார்க்க தத்துவத்தையும் இணைத்து சமயத்தில் தோய்ந்து, சமயத்திலிருந்து எழுந்து தத்துவத்திற்குள் ஐக்கியமானார்.

தமிழர்களின் இறைவழிபாடு, சமய தத்துவச் சிந்தனைகள் என்றால் நால்வரும் பன்னிரு ஆழ்வார்களும் என்பதுபோல, இந்திய தத்துவம் என்றால் விவேகானந்தர். சைவ சித்தாந்தம் என்றால் வள்ளலார் என்று இந்திய சமய, தத்துவஞான வரலாறு தழைத்து வந்துள்ளதை *வள்ளலார் நோக்கில் நால்வர்* என்ற இந்த நூல் மூலம் உணர்த்துவது போற்றி மகிழத்தக்க முனைவு. இது தமிழர்களின் தோத்திர, சாத்திர இலக்கிய வகைக்கு முக்கியமான பங்களிப்பு. இதற்குக் காரணமானவர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன். இதைப் படித்து அன்பர்கள் யாவரும் பயன்பெறுவார்களாக.

அன்பன்,

நல்லி குப்புசாமி செட்டி.

Koviloor Digital Library

திருமதி சாருபாலா. ஆர். தொண்டைமான்,
எம்.ஏ., எம்.பில்.,

மேயர்,

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

(P) 0431 - 2415177
(O) 0431 - 2415393
(R) 0431 - 2411587

திருச்சிராப்பள்ளி

நாள் : 24.3.2008

வாழ்த்து மடல்

புதுக்கோட்டை மண்ணிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த முதல் பெண் ஆதீனம் திலகவதியார் திருவருள் ஆதீனம் அருள்மிகு சாயிமாதா சிவ பிருந்தாதேவி அன்னையாரின் 80 -வது அகவை நிறைவை முன்னிட்டு, திலகவதியார் ஆதீனம் தவத்திரு தயானந்த சந்திரசேகரன் பதிப்பாசிரியராக இருந்து தொகுத்துள்ள **வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்** என்ற ஆய்வு நூல் வெளியிடுவது சாலப் பொருத்தமாகும்.

இத்திருநூல் சைவ, சன்மார்க்க அன்பர்களுக்கு மட்டுமின்றி, தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் என்பது நிச்சயம்.

சைவப்பணியும், தமிழ்ப்பணியும் இணைத்து பணியாற்றி வருகின்ற இத்திருமடத்தின் பணிகள் சிறக்கவும், ஆதீனம் மேலும் வளரவும் எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர்,

சாருபாலா. ஆர். தொண்டைமான்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

Koviloor Digital Library

முகவுரை

பேராசிரியர். கு.ப. கண்ணன், சென்னை

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் வெளியீடாக ஆதீன முதல்வர் தவத்திரு தயானந்த சந்திரசேகரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும் **வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்** என்னும் திருநூல் தமிழர் நெஞ்சங்களையெல்லலாம் மிகழ்விக்கும் ஒருநூல் எனலாம்.

'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்' என்று அறிவித்து தமிழகம் செய்த தவதப்பயனால் வந்து தோன்றியவர் வள்ளலார். அவர் மிகச்சிறந்த புலவர்; செந்தமிழ்க் கவிதை பாடும் ஆற்றல்மிக்க கவிஞர்; உரைநடை வல்லாளர்; பன்னூலாசிரியர்; கேட்டார் பிணிக்கும் தகையவாய்க்கேளாரும் வேட்ப மொழியும் சொற்பொழிவாளர்; மிகச்சிறந்த உரையாசிரியர்; இன்னும் தூய துறவியாகவும், ஞானியாகவும், சித்தராகவும் வாழ்ந்து தூய தொண்டாற்றியவர்; அருட்பெரும் சோதியம் தனிப்பெரும் கருணையே இந்த உலகத்தை வாழவைக்கிறது என்று கண்டு தெளிந்தவர். அவரது தெய்வமணம் கமழும் திருப்பாடல்களின் தொகுப்பே திருவருட்பா எனப்படும். திருவருட்பா வரலாற்றுமுறைப் பதிப்பில் ஐந்தாம் திருமுறையின் ஈற்றில் அமைந்து இன்பம் பயப்பன சைவ சமய குரவர்கள் நால்வர் பெருமக்களைப் பற்றிப் பாடியுள்ள நான்கு அருண்மாலைகள். ஆம். இவை துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய 'நால்வர் நான்மணிமாலை'யோடு இணையாக வைத்து மதிப்பிடத்தக்கனவாம் என்பர் அறிஞர்.

இந்த நூலில் முதற்கட்டுரை, 'வள்ளலார் நோக்கில் ஆளுடைய பிள்ளையார்' என்பதாகும். இக்கட்டுரையின் ஆசிரியர், திருமுறைகளைத் தொகுத்தவராகிய நம்பியாண்டார் நம்பிகளே முதன்முதலில் 'ஆளுடைய பிள்ளையார்' எனும் தொடரை எடுத்தாளுகிறார் என்றும் திருஞானசம்பந்தரைத் தவிர வேறு எவர்க்கும் நம்பிகள் எனும் அத்தொடரைப் பயன்படுத்தவில்லை என்றும் 'ஆளுடைய' என்னும் திருமொழியை நால்வருக்கும் வழங்கி நிறைவு செய்வதவர் வள்ளலாரே என்றும் காட்டும் திறன் சைவ அன்பர்களின் சிந்தனைக்குரியதாகும். மேலும் உயிரனுபவம், அருளனுவம், சிவானுபவம் என்னும் மூவகை அனுபவங்களை மிக நுட்பமாக ஆசிரியர் உணர்த்தும் திறன் படிப்பவர் நெஞ்சைப் பரவசப்படுத்துகிறது.

இரண்டாவது கட்டுரை 'வள்ளலார் நோக்கில் ஆளுடைய அரசுகள்' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. அதன் ஆசிரியர் அப்பர் பெருமானை, 'திருத்தகுசீர் அதிகை

Koviloor Digital Library

அருள் தலத்தில் ஓங்கும் சிவக்கொழுந்து' என்று வள்ளலார் போற்றும் திறனை நம் சிந்தனையெலாம் மகிழ விளக்கும் திறன் பெரிதும் வியப்புக்குரியது. அப்பரடிகள் பற்றி வள்ளலார் பயன்படுத்தும் சொற்றொடர்க்கு எத்துணை பொருள் பொதிந்தன என்பதை அறிந்து மகிழ்கிறோம்.

மூன்றாவது கட்டுரை 'வள்ளலார் நோக்கில் ஆளுடைய நம்பிகள்' என்னும் தலைப்பில் உள்ளது. ஆளுடைய நம்பிகள் அருண்மாலையில் வள்ளலார், சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஏழுமுறை 'பெருந்தகையே' என விளிக்கிறார். திருக்குறள் 'ஒப்புரவறிதல்' அதிகாரத்தில் திருவள்ளுவர் மருந்துமரத்தைப் போல்வாரைப் 'பெருந்தகையான்' என்று குறித்துள்ளார். மருந்துமரம் தன் இலைமுதல் வேர்வரை அனைத்தையும் மக்கள் பயன்பெற வழங்கும் தன்மையை உடையது. ஆதலின் சுந்தரர் வாழ்வும், வாக்கும் முழுவதுமாய்த் தமிழ்நெறி காக்கப் பயன்பட்டவை என்று ஆசிரியர் விதந்து விளக்கும் முறை நம் சிந்தனையைத் தூண்டுகிறது. சிவநெறிக்கு சுந்தரர் தந்த அருட்கொடைகளையும் அவர்தம் வாழ்வில் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களையும் பாடல் பாடலாக விளக்கும் திறன் வியப்பூட்டுகிறது. சுந்தரரும் சிவபெருமானும் கொண்டிருந்த நட்பின் திறன் வள்ளலார் நோக்கில் பெரிதும் இடம் பெற்றுள்ளமை ஆசிரியரின் ஆய்வில் உறுதிப்படுகிறது.

நான்காவது கட்டுரை, 'வள்ளலார் நோக்கில் ஆளுடையடிகள்' என்னும் தலைப்பில் இடம்பெறுகிறது. வள்ளலார் கொண்ட வழிபடு நூல் திருவாசகம். ஆளுடைய அடிகள் அருண்மாலையின் முதல் பாடலிலேயே திருவாசகத்தைத் தமிழ் மாமறை என்றும் திருவாசக அனுபவத்தைத் தாம் அனுபவிக்க மாணிக்கவாசகர் அருள வேண்டும் என்றும் வள்ளலார் வேண்டுகிறார் என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டும் திறன் நம் நெஞ்சை நெகிழ்விக்கிறது. மாணிக்கவாசகர் முதலில் அன்புருவம் பெற்று அதன்பின் அருளுருவம் அடைந்து பின்பு இன்புருவம் ஆயினார் என்பதை ஆசிரியர் மிகநுட்பமாக விளக்குகிறார். திருவாசகத்தில் மூன்றாவது பதிகமாகத் திகழும் திருவண்டப்பகுதி மெய்ஞ்ஞான, விஞ்ஞான நுட்பங்களை விளக்கும் பகுதியாகும். அதில் 'என்னையும் இருப்பதாக்கினன்' என்று மணிவாசகர் கூறுவதில் பேருண்மை அடங்கியிருப்பதாகக் கருதும் வள்ளலார், அந்த 'இரு' என்ற தனி அகவலின் எண்ணம் என்ன? அதனை எனக்கு இயம்புக என்று மணிவாசகரையே வேண்டுகிறார் என்று ஆசிரியர் குறிப்பிடுவது இன்பம் பயப்பதாகும். 'வான்கலந்த மாணிக்கவாசக' என்னும் தொடரில் அடங்கியுள்ள தத்துவ அனுபவத்தை ஆசிரியர் விளக்குவது சிந்தனைக்குரியதாகும். இறைவன் நரிகளைப் பரிகள் ஆக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது ஆகிய இரு அற்புதங்களை நயம்பட உரைக்கும் ஆசிரியரின் திறன் நம்மை மகிழ்விக்கிறது. மணிவாசகர் விளக்கி அருளிய சன்மார்க்கத்தைச் சமரச சுத்த

Koviloor Digital Library

சன்மார்க்கமாக விளக்கியருளியவர் சமரச சன்மார்க்க குரவராகிய வள்ளலார் என்று ஆசிரியர் கட்டுரையை நிறைவு செய்யும் அருமை போற்றற்பாலது.

இவ்வாறு இந்த நூலிலுள் கட்டுரைகள திருநெறித் தமிழின் சிறப்பு வள்ளலார் வாக்கில் ஒளிவெள்ளம் பெறுவதை உணர்த்துகின்றன. இது தொடர்பாகத் தமிழில் வெளிவந்துளள படைப்புகளுள் இந்த நூல் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. இந்த அரிய நூலைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு தந்து உதவியதற்காக இதன் பதிப்பாசிரியரை உளமார பாராட்டுகிறேன். இன்னும் இதுபோன்று பலநூல்கள் வெளிவர வேண்டும் என்றும் அவற்றிற்குத் தமிழன்பர்கள் நல்லாதரவு நல்கவேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளைச் சிந்தித்துப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை – 18. பேராசிரியர். கு.ப.கண்ணன்

Koviloor Digital Library

பதிப்பாசிரியரின் உரை

எல்லாம் திருவருள் செயல்.

முதல் பெண் ஆதீனமாக, திலகவதியார் ஆதீனத்தில் அருள்பாலித்து வந்த அன்னையாருக்கு பின்னர், நாம் பொறுப்பேற்று வெளியிடப்படும் **வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்** எனும் நூல் ஐந்தாம் திருநூலாக வெளிவருகிறது என்பதை எண்ணுகின்ற பொழுது, நமக்கு இறையருளும், அன்னையின் குருவருளும் துணையிருக்கிறது என்பதை முழுமையாக உணர முடிகிறது.

அருட்பிரகாச வள்ளலார் நோக்கில், ஞானசம்பந்த பெருமான், நாவுக்கரசு பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மணிவாசக பெருமான் ஆகியோரைப்பற்றி திருவருட்பாவில் பாடியருளிய பாமாலையின் கருத்துக்களை ஆய்வுக்கட்டுரைகளாக வெளியிட எண்ணினோம்.

ஆய்வுக்கட்டுரைகளை, சைவ சித்தாந்தத்திலும், திருவருட்பாவிலும் ஆய்ந்து தோய்ந்த அறிஞர் பெருமக்கள், ஞானத்தந்தை தவத்திரு. ஊரன் அடிகள், சித்தாந்த சரபம், பேராசிரியர். டாக்டர். வை. இரத்தினசபாபதி, நாவுக்கரசர் முனைவர். சோ. சத்தியசீலன், கலைமாமணி, பேராசிரியர். முனைவர். இரா. செல்வகணபதி ஆகியோரிடம் தொடர்பு கொண்டு இக்கருத்தினை வெளியிட்டோம். நமது அன்பிற்கிணங்க, கருத்தினை உடன் ஏற்று, பல்வேறு பணிகளுக்கிடைய ஆய்வுக்கட்டுரைகளை வழங்கி இத்திருப்பணிக்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நம் உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கி மகிழ்வதுடன், அவர்கள் பணி மேலும் சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பணிகிறோம்.

இத்திருநூலிற்கு அணிந்துரையுடன் வாழ்த்துரையும் தந்தும், மகுடம் சேர்த்தும் பெருமைபடுத்திய அருட்செல்வர் பெருந்தகை பத்மபூசண் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா அவர்களுக்கு நமது உளம்

Koviloor Digital Library

நிறைந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கிறோம். நாம் வெளியிட்ட அனைத்து நூலிற்கும் அணிந்துரை தந்து சிறப்பு சேர்த்தவர்கள் அருட்செல்வர் பெருந்தகை என்பதை பெருமிதத்தோடு தெரிவிக்கிறோம்.

வாழ்த்துரை நல்கிய, நமது அன்னையின் அன்பினையும், ஆசியினை பெற்றவரும், புதுக்கோட்டை ராணியாரும், திருச்சி மேயருமான உயர்திருமதி. சாருபாலா ஆர். தொண்டைமான் அவர்கட்கு நன்றியினை உரித்தாக்கி மகிழ்கிறோம். இத்திருநூலிற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் இனிய வாழ்த்துரை வழங்கிய பண்பாட்டுக் காவலர் பத்மஸ்ரீ டாக்டர். நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கட்கும், திருநூலிற்கு நல்லதொரு முகவுரையை வழங்கிய அன்னையின் அன்புக்குரியவரும். அன்னையாரிடம் கொண்ட தூய அன்பு போல, நம் மீதும் செலுத்தி, செய்கின்ற அறப் பணிகளை ஏற்றி, போற்றி வருகின்ற பேராசிரியர் கு.ப. கண்ணன் அவர்கட்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பரம் தந்து ஊக்கப்படுத்திய நிறுவனத்தார்கள் அனைவருக்கும், பிழைத்திருத்தம் செய்து உதவிய, பண்பாளர், பேராசிரிர் டாக்டர். அய்க்கண் அவர்கட்கும், புலவர் நாகூர் அவர்கட்கும், நன்முறையில் அச்சடித்து தந்த ஜெயம் ஆப்செட் பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும், முன் அட்டையினை அழகுற தந்த சிவகாசி சூர்யா பிரிண்டர்ஸ் உரிமையாளருக்கும் நமது நன்றியினை தெரிவித்து மகிழ்கிறோம்.

நம் ஆதீனம் சைவத்தினையும், தமிழையும் இரு கண்களாக போற்றி பணியாற்றி வருகின்றது. அந்த வகையில், நூல் பதிப்புப் பணியினையும் இணைத்து வெளியிட்டு வருகிறது என்பதை அகமகிழ தெரிவிக்கிறோம். வள்ளல் பெருமானின் அருளோடு, உங்கள் அனைவரின் நல்வாழ்த்துக்களோடு இந்நூலினை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்குவதில் பெருமை அடைகிறோம்.

என்றும் சமய சமூக சேவையில்,
பதிப்பாசிரியர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

I. வள்ளலார் நோக்கில் ஆளுடைய பிள்ளையார்

சித்தாந்த சரபம். முனைவர். வை. இரத்தினசபாபதி, சென்னை.

முன்னுரை

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க பிள்ளை என அவர்தம் சீடர்களால் போற்றி அழைக்கப் பெறுகின்ற வள்ளற் பெருமானார் தாம் அருளிய திருவருட்பாக்களில் ஐந்தாம் திருமுறையில் ஒன்பதாந் தலைப்பாக அமைந்தது ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை என்பது.

ஆளுடைய பிள்ளையார் என்றாற் போலவே ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் என நால்வருக்கும் முறைப்படுத்தி, திறனுறு நிலையில் தலைப்புகளை அமைத்து, அவர்களைப் போற்றிப் பாடியவர் வள்ளற்பெருமானாரே.

திருநாவுக்கரசர் தம்முடைய ஆறாந்திருமுறையில், திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் ஆளுடைய அடிகள் என்ற தொடரை எடுத்தாளுகின்றார். அது சிவபரம் பொருளைக் குறிப்பதாக அமைகிறது.

திருஞான சம்பந்தர் தம்முடைய திருமுறைத் திருப்பதிகங்களுள் யாண்டும் 'ஆளுடைய' என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்களிலும் 'ஆளுடைய' என்ற சொல்லாட்சி யாண்டும் காணப் பெறவில்லை.

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்திலும் 'ஆளுடைய' என்ற சொல்லாட்சியானது அமையப் பெறவில்லை.

திருமுறைப் பதிகப்பெருவழியைத் தோற்றுவித்தவர் எனப்பெறும் காரைக்காலம்மையாரும் 'ஆள்' என்ற சொல்லையும், 'ஆளானோம்' என்ற தொடரையும் எடுத்தாளுகிறாரே யொழிய ஆளுடைய என்ற சொல்லாட்சியை அமைத்துக் காட்டவில்லை.

திருமுறைகளைத் தொகுத்தவராகிய நம்பியாண்டார் நம்பிகளே முதன்முதலில் 'ஆளுடைய பிள்ளையார்' என்ற தொடரை எடுத்தாளுகின்றார். திருஞானசம்பந்தரைத் தவிர வேறு யாருக்கும் நம்பிகள் அத்தொடரைப் பயன்படுத்தவில்லை.

'ஆளுடைய' என்ற தொடரை அடியவர்களுக்குப் பயன்படுத்தும் முறை நம்பியாண்டார் நம்பிகள் காலத்துக்குப் பின்னரே தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

'ஆளுடைய' என்பதன் தோற்றமும் பொருளும்

திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களை ஊன்றி நோக்கினால் 'தமிழ்' என்ற ஒரு மொழியின் மூலம் தம்முடைய அருளியலனுபவங்களைத் திருநெறிய தமிழ் என அமைத்துக் கூறினாலும் அவர் ஐவகை மொழிகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அவைகளை நாம் வழிமொழி, பிணை மொழி, இருக்கு மொழி, இறைவனைச் செயற்படுத்தும் மொழி, நிறைமொழி எனப் பிரித்துக் காணலாம். அவ்வகை மொழிகளின் மூலம் வெளிப்படுத்தப் பெற்ற ஆணை மொழிகளில் ஒன்றாக வெளிப்பட்டுத் தோன்றியதே 'ஆளுடைய' என்ற தொடர் மொழி எனக் கொள்ளலாம்.

திருமறைக் காட்டு நிகழ்வில் கதவு திறக்கப் பாடியதும், பின்னர் ஞானசம்பந்தப் பெருமானால் அடைக்கவும், திறக்கவும் பாடியதும் ஆகிய நிகழ்வுகளுக்குப் பின்னர் திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் சிறிதே வாட்டம் தோன்றுகிறது.

அரிதில் திறக்கத் தாம்பாட, அடைக்க அவர் பாடிய எளிமை கருதி, நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன் எனக்கவன்று அப்பரடிகள் பெரிதும் அஞ்சினார். வாய்மை திறம்பா வாகீசர் அங்கே திருமடத்தின் ஒருபால் படுத்துத் துயில் கொண்டார். அப்போது சைவ வேடத்துடன் அப்பரடிகள் கனவில் தோன்றிய இறைவன், 'வாய்மூரில் இருப்போம் தொடர வா' என்றருளினார். அப்பரடிகளும் பின் தொடர்ந்தார். வாய்மூர்த் திருக்கோயிலை அணைந்த இறைவன் மறைந்து விட்டார். இச்செய்தி யறிந்து திருஞானசம்பந்தர் 'தளிரிளவளர்' எனத் தொடங்கும் வாய்மூர்ப் பதிகத்தை அருளுகின்றார். (இரண்டாந் திருமுறை, 111 ஆம் திருப்பதிகம்)

Koviloor Digital Library

வாய்மூர்ப் பதிகத்தில் திருக்கடைக்காப்பு எனப்பெறும் பதினொன்றாம் பாடல் தவிர ஏனைய பத்துப் பாடல்களிலும் 'இவராணீர்' என்ற மறைமொழியைப் படைத்தருளுகின்றார் திருஞானசம்பந்தர். பின்னர் வாய்மூர்ப் பெருமான் ஆடற்காட்சியுடன் வெளிப்படுகின்றார். திருப்புகலி மன்னருக்கு அக்காட்சி முதன்முதல் அனுபவப்படுகிறது. ஆடல் கண்டு பணிந்தேத்திய காழியர்கோன் அரசுங்காணக் காட்டுதலும், அப்பரடிகளுங் கண்டு, பாட அடியார் என்றெடுத்துப் பதிகம் பாடிச் சிறப்பிக்கின்றார். (இந்நிகழ்ச்சியில் 'அரசுங்காணக்காட்டுதலும்' என்ற தொடரைப் பற்றி எழுந்த சர்ச்சை ஒன்று சைவ உலகம் அறிந்ததே. சேக்கிழார் அருளியதை யான் அப்படியே எழுதியுள்ளேன்)

இங்கே நாம் சிந்திக்க வேண்டியது 'இவராணீர்' என்பதன் பொருளே. அருளியலனுபவத்தைத் துய்த்துத் தழைத்திருந்த நிலையில் ஞானசம்பந்தப் பெருமான் வெளிப்படுத்தியருளிய ஆணை மொழியே 'இவராணீர்' என்பது எனக் கொள்ளுதல் வேண்டும்.

இவராணீர் என்ற தொடர் இவர் + ஆள்+நீர் என்ற மூன்று சொற்களைக் கொண்ட ஆணைமொழி. இதனை வள்ளற்பெருமானார் பரநாத வயிந்தவத்துவந்துவ மொழி என்பார். விரிக்கிற் பெருகும்.

இவராணீர் என்ற மும்மொழிகளால் அமைந்த ஒரு தொடரின் பொருளை மாயையை உள்ளீடாகக் கொண்ட நம்முடைய மொழியால் விளக்க முற்படும் போது மூன்று வேற்றுமைகளை மூலமாகக் கொண்டு விளங்கிக் கொள்ளுதலும், விளக்க முற்படுதலும் வேண்டும்.

இவர் - இச் சொல் பொதுவாக அடியவரைக் குறித்தாலும். இங்கே அப்பரடிகளைக் குறித்தது.

ஆள் - ஆளாகக் கொள்ளுதல், ஆள் என நிற்றல்.

நீர் - இச்சொல் இறைவனைக் குறித்தது.

அடியவர்களை (அ) அப்பரடிகளை ஆளாகக் கொண்ட நீர் (இறைவன்) என்பது இரண்டாம் வேற்றுமைப் பொருள்.

அடியவர்களால் ஆளாகக் கொள்ளப் பெறும் 'நீர்' என்பது மூன்றாம் வேற்றுமைப் பொருள்.

Koviloor Digital Library

அடியவர்களால் வாழ்விடமாகக் கொண்டு- அவரை இடமாகக் கொண்டு நின்று உலகத்துயிர்களை அருளால் ஆளவைக்கும் நீர் என்பது ஏழாம் வேற்றுமைப் பொருள்.

அடியவர்களால் ஆளாகக் கொள்ளப் பெறும் நீர் அடியவர்களுக்கே உன்னைக் காட்டாது மறைக்கக் கூடாது; உடனே வெளிப்படுதல் வேண்டும் எனற் ஆணையை எடுத்துக் கூறிச் செயற்படுத்தினார் ஞானசம்பந்தர். ஆதலின் 'இவராணீர்' என்பது தழைத்த மொழி அனுபவத்தால் வெளிப்பட்ட மறைமொழி என்று கொள்ளுதல் வேண்டும். மேலும் விளக்கம் வேண்டுமாயின் திரு இலம்பையங் கோட்டூர்த்திருப்பதிகம் கண்டு உணரலாம். இவர் காணீர் என இருந்திருத்தல் வேண்டும் என்பது தொண்டை மண்டல ஆதீனக் குருமகா சந்நிதானம் 229 அவர்களின் குறிப்புரை. அது பொருந்துமாறில்லை.

'இவராணீர்' என்ற தழைத்த மொழியின் விளக்கமே 'ஆளுடைய' என்ற தொடராக அமைந்து சிவனடியவர்கள் அனைவருக்கும் அடைமொழியாக அமைந்தது என்று கொள்ளுதல் வேண்டும்.

'ஆளுடைய' என்ற முன்னொட்டு மொழியை ஞானசம்பந்தருக்கு மட்டுமே வழங்கினார் நம்பியாண்டார் நம்பிகள். ஞானசம்பந்தரின் தழைத்த மொழியின் வெளிப்பாடாக அமைந்த மறைமொழியாகிய 'ஆளுடைய' என்பதை நால்வருக்கும் வழங்கி நிறைவு செய்கிறார் வள்ளற் பெருமானார்.

இனி, வள்ளற் பெருமானார் ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையிற் பதிவு செய்யும் அருளியற் கொள்கை விளக்கங்களைக் காணலாம்.

குருவாகக் கொள்ளும் கருத்து

ஆளுடைய பிள்ளையார் எனப்பெறும் ஞானசம்பந்தப் பெருமானாரை வள்ளற் பெருமானார் குருவாகக் கொண்டு அருள் நெறியில் நடந்தவர் என்ற கருத்தானது, பொதுவாக அனைவராலும்

Koviloor Digital Library

ஏற்றுக் கொள்ளப் பெற்ற ஒன்று. இக்கருத்துடன் இணைந்துள்ள திருவருள் திருமுறைச் செய்தி ஒன்றையும் இங்கே நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

திருநெறிய தமிழ் எனப்பெறும் திருப்பதிகப் பெருவழியைத் தொடங்கி வைத்தவர் பேயார் என்று போற்றப் பெறும் காரைக்கால் அம்மையாரே. திருமுறைத் தொகுப்புப் பணி நடைபெற்ற காலத்தில் காரைக்கால் அம்மையாருடைய திருப்பதிகங்களைத்தான் முதலில் அமைத்திருக்க வேண்டும். காஞ்சி நாகலிங்க முனிவர் திருமுறைகளைத் தொகுத்து அடங்கல் முறை என வெளியிட்டபோது அப்படித்தான் செய்தார்.

நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் மேல் ஆறு நூல்கள் அருளியுள்ளார்கள். அவற்றுள் ஒன்றாகிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

"பதிகப் பெருவழி காட்டப்
பருப்பதக் கோன் பயந்த
மதியத் திருநுதல் பங்கன்"

என்று இரண்டாஞ் செய்யுளிலும்,

"ஆறது ஏறும் சடையான் அருள்மேவ
வீறது ஏறும் தமிழால் வழிகண்டவன்"

என்று ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தத்தின் ஐந்தாஞ் செய்யுளிலும் எடுத்துக் காட்டியுள்ளார்.

திருநெறிய தமிழ் எனப்பெறும் பதிகப் பெருவழியைத் தொடங்கியவர் காரைக்காலம்மையாராக இருக்கலாம். ஆயினும் பதிகப் பெருவழியைத் தலைமை தாங்கி நடத்தியவர் திருஞானசம்பந்தரே என்ற கொள்கையானது சைவர்களிடையே பெரிதும் பரவலாகப் பேசப்பெறும் செய்தியாகும். என்னதான் சமாதானம் கூறினாலும் காரைக்காலம்மையாரை முதன்மைப்படுத்தாதது ஒரு குறைதான் என்று கருதுவோர் உளர். இச்சிக்கலுக்குரிய தீர்திறனை மிகத் துல்லியமாக விளக்கிக் காட்டுகின்றார் வள்ளற் பெருமானார்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப் பெருமானார்க்கு இறைவன் திருநெல்வாயில் அறத்துறையில் முத்துச்சிவிகை முதலியனவற்றை அளிக்கிறான். திருஞான சம்பந்தப் பெருமான் இறைவனிடம் எதையும் கேட்டுப் பெற்றதில்லை. சீகாழி குளக்கரையில் அம்மே அப்பா என்று கூறி அழுதது உலகத்து உயிர்களுக்காக. ஆவடுதுறையில் பொன் பெற்றது தந்தைக்காக. அதனால் அப்பதிகத்தை 'விலையுடை அருந்தமிழ்' என்றார். ஒரு வேளை சிவிகை அளித்தால் மறுத்து விடலாம் என்ற காரணத்தால்தான் முதல்நாள் இரவில் கனவில், அரத்துறை வள்ளலார்,

"நாம் மகிழ்ந்து அளிக்கும் அவை
கொள்ளல் ஆகும் கொண்டு உய்த்தல் செய்வாய்"

என்று அருளுகின்றார். நடை வருத்தம் தீரச் சிவிகை ஒன்று கொடுத்தால் போதுமே! ஏறுதற்குச் சிவிகை, இடக்குடை, கூறி ஊதக் குலவு பொற்சின்னங்கள் ஆகிய அனைத்தையும் மொத்தமாக அளிக்கின்றான்.

வள்ளற் பெருமானார் இந்நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி, திருஞானசம்பந்தப் பெருமானரை உலகத்துயிர்களுக்கெல்லாம் முதற்குருவாக இறைவனே அறிமுகப் படுத்துகின்றான் என்று விளக்கிக் கூறி குருமொழியை முதன்மொழியாகக் கொள்ள வேண்டும் என்ற வகையில் திருஞானசம்பந்தரின் திருவாக்குகள் திருநெறிய தமிழ் வரிசையில் முதன்மை பெறத் தொகுக்கப் பெற்றன என்று நாம் உணர்ந்து கொள்ளும் வகையில் விளக்குகின்றார்.

இக்கருத்தை வள்ளற் பெருமானார், 'முத்தியற் சிவிகை இவர்ந்து அருள்நெறியின் முதல் அரசு இயற்றிய துறையே' என்ற வரியின் மூலம் எடுத்துக் காட்டினார். (ஆறாவது பாடலின் இறுதிவரி)

அருள்நெறியில் உலகத்து உயிர்களுக்கெல்லாம் முதற்குருவாக அமர்ந்து அருளரசுக் கட்டிலில் இவர்ந்து அருட் செங்கோல் ஆட்சி நடத்தியவர் திருஞானசம்பந்தர் என எடுத்துக் காட்டினார். அதே பாடலில்தான் தனிப்பெருங்கருணை என்ற மகாமந்திரத்தையும் எடுத்தாள்கின்றார்.

Koviloor Digital Library

வள்ளற் பெருமானார்க்கு அருட்பெருஞ்சோதி ஆண்டவரே முதன்மையும் முழுமையும் வாய்மையும் வழுவிலாச் சத்தியமும் ஆகி நின்ற 'குரு' என்று கொள்ளுதல் வேண்டும்.

அருட்பெருஞ்சோதி ஆண்டவர் திருநெறி மெய்த்தமிழ்மறையாம் திருக்கடைக்காப்பதனால் திருவுளங்காட்டிய நாளில், அருட்பெருஞ்சோதி ஆண்டவர் திருஞானசம்பந்தராக அனுபவப்படுகிறார். அவ்வாறே பெருநெறி இது எனவும் ஒரு நெறியை மனம் வைத்து உணரும் முறை இது எனவும் உணர்த்திய போதெல்லாம் அவ்வக் கருத்துக்களைத் தமக்கு விளக்கிய வகையில் ஞானசம்பந்தரே உணர்த்தியதாகவும் அவ்வகையில் குருவாக நின்றவர் ஞானசம்பந்தரே எனவும் உள்ளத்துள் கொண்டு வணங்குகிறார் வள்ளற் பெருமானார்.

அவ்வாறே மாணிக்க வாசகப் பெருமானையும் அவர்தம் திருவாசகத்தையும் குருவாகவும் குருமொழியாகவும் கொள்ளுகின்றார். திருஞானசம்பந்தரையும், மாணிக்கவாசகரையும் சிவத்துடன் இயைபுபடுத்திக் கூறுகின்றவைகளையெல்லாம் நாம் தெளிந்து உணர்தல் வேண்டும்.

வள்ளற் பெருமானார் ஐந்து மாதக் குழந்தைப் பருவத்தினராக இருந்தபோது, அருட்பெருஞ்சோதி ஆண்டவரால் திரைத்தூக்கத் தரிசனம் காட்டியதன் அனுபவத்தைப் பேசுகின்றார். 'எல்லாம் வெளியாக காட்டிய மெய் உறவு' என வள்ளற்பெருமனார் அருளுவதையும் உளங்கொள வேண்டும்.

அவ்வகையில் ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் வள்ளற்பெருமானார் எடுத்துக் காட்டிய செய்தியை விளக்கமுறுத்திக் கொள்ளுதல் நம் கடமை.

ஆன்ம வளர்ச்சிப் படிநிலைகளில் உலகியல், அருளியல், கருணையியல் அல்லது தயவியல் என மூன்று படி நிலைகள் உண்டு.

உலகியலிலிருந்து அருள்நிலைப் படியில் ஏறுதல் வேண்டும். பின்னர் அருளினுபவம் பெற வேண்டும். அதன்மேல் தயவியல் படியேறித் தயவியல் அனுபவம் பெற வேண்டும்.

Koviloor Digital Library

உலகியற் படியிலிருந்து அருள்நிலைப்படியில் ஏற்றி நிலைபெற வைப்பதற்குரிய ஞான வழிகளையெல்லாம் எடுத்துக் கூறி நிலை நிறுத்தும் பணிகளையெல்லாம் திருஞானசம்பந்தர் மூலமாகப் பெறுகிறார் வள்ளற்பெருமானார்.

அருள்நிலைப் படியில் நின்று அருளனுபவப் பேறுகளையெல்லாம் மணிவாசகப் பெருமானார் வழிநின்று திருவாசக - மணிவாசகப் பேறு என்ற அனுபவத்தைப் பெறுகிறார், வள்ளற்பெருமானார்.

மேலே குறிப்பிட்டப் பெற்ற இரண்டையும் முறையே தகரவித்தை எனவும் வகரவித்தை எனவுப் வேறுபடுத்திக் காட்டுவார் வள்ளற் பெருமானார். முன்னது ஞானநிலை; பின்னது ஒளிநிலை, இரண்டையும் இணைத்துப் பெறுகிறார் வள்ளற் பெருமானார்.

உலகியல் உணர்வும் அருள்நெறியும்

உலகியல் உணர்வு என்பதற்கு உலகியல் அறிவு என விளக்கம் கூறப் பெற்றுள்ளது. அனைத்தையும் வெட்ட வெளியாகக் கண்டவர் வள்ளற் பெருமானார். அதுவும் ஐந்து திங்கட் குழந்தைகயாக இருந்தபோது,

'உலகெலாம்' என்ற பெரியபுராணத் தொடருக்கு எண்ணிலடங்கா உலகுகளை எடுத்துக்கூறியவர் அவர்.

'உலகியல் உணர்வு' என்றால் என்ன? நிலமும் காலமும் முதன்மைப் பொருள். SPACE & TIME என வகுத்துரைப்பர் விஞ்ஞான ஆய்வாளர்கள்.

நிலமும் காலமும் ஒன்றோடொன்று இணைந்தும் வேறுபட்டும் உலவுவதை இயற்கையாகக் கொண்டது உலகியல். நிலத்தை உருவமாகக் கொண்டாலும் காலத்தை அருவமாகக் கொள்ளுவர் அந்நெறி வல்லாளர். உருவமும் அருவமும் இணையும் வரையறையையும் அவைகளின் இடைநின்று இயக்கும் நடுநிலையையும் வரையறுத்து உணர்வதே உலகியல் உணர்வு. வள்ளற் பெருமானார் அருட்பெருஞ்சோதி அகவலில் நடுவினுள் நடு என்று கூறுவார். அகம், புறம், அகப்புறம், புறப்புறம் ஆகியவைகளை வேறுபடுத்தியும் இணைத்தும் நடுநின்று இயங்கும் நடுவை உணர்வதே உலகியல் உணர்வு.

Koviloor Digital Library

உலகியல் உணர்வு வந்தால் அருள்நெறி அனுபவம் வரும். இதனைக் காரைக்காலம்மையார் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

'அருளே உலகெலாம் ஆள்விப்பது; ஈசன்
அருளே பிறப்பு அறுப்பது ஆனால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு'

என்பது அற்புதத் திருவந்தாதியின் ஒன்பதாம் பாடல்.

உலகியல் என்ற தலைப்பில் பேசுகிற, எழுதுகிற அனைவரும் உலகை அறிவால் பார்க்கின்றார்கள். அருளால் பார்க்க, படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மெய்ப்பொருளை அருளால் நோக்கினார் காரைக்கால் அம்மையார். வள்ளற்பெருமானார் உலகை அருளாற் பார்க்கவும் அருளால் அனைத்தையும் படிக்கவும், அருளால் உணரவும் கற்றுக் கொண்டார். அதற்குத் துணை செய்தவை திருமுறைகள். திருநெறிய தமிழ் எனப்பெறும் ஞானசம்பந்தப் பெருமானாரின் திருமுறைகள் தனிமனிதனை அருளாற் பார்க்கத் துணைசெய்யும். சுருங்கக்கூறின் தனி மனிதனின் அருட்கண்ணை விழிப்பிக்கச் செய்யும். இம்முதற்பாடலுள் 'அலகிலா உணர்ச்சி அளித்தனை' என்ற தொடர் நீக்கப் பெற்று விட்டது. அதுவே அருள்நெறி. அருள் நெறியில் நிற்பதே மெய்ந்நெறி எனப்பெறும் சத்திய நெறி. அருள் நெறி எனப்பெறும் பயிரைத் தழைக்க வைத்தவர் திருஞானசம்பந்தர் என்பது இரண்டாம் பாடலில் வள்ளற்பெருமானார் அருளிய வாக்கு.

அருட்கண் விழிப்பிக்கப் பெற்ற காரணத்தாலும் அருள்நெறியில் நிலைபெற நிற்கப் பெறுவித்த காரணத்தாலும் வள்ளற்பெருமானார். திருமுறைகளில் இன்னின்ன செய்திகள் இருக்கின்றன என்று கூறும் போது, அறிவால் படிக்கின்ற நம் போலியர்களுக்கு இவை இவை திருமுறைகளில் எங்கே இருக்கின்றன என்ற அறியாமையும் அச்சமும் தோன்றுவனவாயின.

இனி வள்ளற்பெருமானார் ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையிற் குறிப்பிடும் சில அனுபவங்களை முறைப்படுத்திக் காணலாம்.

Koviloor Digital Library

ஒத்துச் செல்லும் உபாயம்

வள்ளற் பெருமானார் தாம் அருளிய ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் உயிர் அனுபவம். அருள் அனுபவம் சிவ அனுபவம் என்ற மூவகை அனுபவங்களைப் பொதுவாக எடுத்துக்கூறி, பின்னர் மூவகை அனுபவங்களையும் விளக்கிக் கூறியருளுகின்றார். அனுபவ நிலைகளை, விளங்கிக் கொள்வதற்கு முன்னர், அவர் அருளும் 'ஒத்துச் செல்லும் உபாயம்' என்ற தொடரின் விளக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். வள்ளற் பெருமானாரும் மாணிக்கவாசகரும் இத்தொடரை அதிகம் எடுத்தாளுகின்றார்கள். ஒத்துச் செல்லுதல் என்றால் என்ன என்பதைத் தெளிவு பெறத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒரு தந்தையானவர் தன்னுடைய மகனின் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார். மகனானவன் முரண்டு பிடிக்காமல், ஏதும் சொல்லாமல், தந்தையின் வழியிலேயே சென்று கொண்டிருத்தல். ஒத்துச் செல்லுதல் என்பதற்கு மணிவாசகர் இத்தகைய பொருளைக் கொள்ளுகின்றார். திருவாசகம் அதிசயப்பத்து 4 ஆம் பாடலைப் பார்க்க. மகனுக்குத் தான் ஒரு தனிப்பொருள் என்பதும் தந்தையின் வழியில் செல்ல வேண்டும் என்ற ஞானமும் மட்டுமே இருக்கும். இங்கே மகன் தந்தையை ஒத்துச் சென்றாலும் மகனிடம் தற்சுதந்திரம், தனித்து நிற்கும் வல்லமை ஆகியன இல்லை.

ஆன்மாவானது தத்துவநிலைகளைத் தனித்தனி ஏறி, அல்லது தவிர்த்து அல்லது கடந்து (இம்மூன்றற்கும் வெவ்வேறு பொருள் உண்டு) தத்துவநிலைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்ற போது ஆன்மாவானது ஒரு சத்தியத் தனிப்பொருள் என்பதுபட நிற்கும். ஆன்மாவானது 'சத்' அல்லது சத்துவம் என்ற ஒரே நிலையில் தனித்து நிற்கும். அது ஞானம் முதலிய குணங்கள் இருப்பினும், அவைகளை வெளிப்படுத்தாமல் தான் சத்தியம் எனவே நிற்கும். ஆயினும் அதனிடம் ஒரு நடுக்கம் இருக்கும். திருஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில் பனிச்சுரம் நீங்கப் பாடிய பதிகம் இத்தகைய நடுக்கத்தைத் தீர்க்கத்தான். பாம்பன் சுவாமிகள் 'குமாரஸ்தலம்' பாடியதும் இதற்காகத்தான். வள்ளற் பெருமானார் அருள்மாலையின் ஐந்தாம் பாடலில் பனிப்பிலதாய் என்று

Koviloor Digital Library

இந்நிலையைக் குறிப்பிடுகின்றார்) அப்போது பரம்பொருளும் சத்தியமயமாய் நிற்கும்.

ஆன்மாவானது சத்தியம் என்ற தனிநிலையில் நிற்கும்போது அருட்பெருஞ்சோதி ஆண்டவர் தன்னையும் சத்திய நிலையினர் என்பதாக மட்டுமே நிறுத்திக் கொள்வார். அப்போது இருவர் நிலையும் ஒத்ததாக அமையும். இதுவே ஒத்த நிலை.

வள்ளற் பெருமானார் எந்தநிலையில், தன்னை நிறுத்தியிருக்கிறாரோ அந்நிலையில் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் தன்னை நிறுத்தி ஒத்தநிலை அமையச் செய்வர். பின்னர், அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வள்ளற்பெருமானாருடன் உள்கலந்து உயர்த்துவர்.

உயர்ந்தவர் ஒருவர் தாழ்ந்தவரை உயர்த்த வேண்டுமானால் முதலில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு, இருவரும் ஒப்பநின்று, பின்னர் தாழ்ந்தவரை உயர்த்த வேண்டும் என்ற கருத்தில் வள்ளலார் 'ஒத்து' என்பதற்குப் பொருள் கொள்ளுகின்றார். 'ஒத்து' என்பதற்கு மணிவாசகர் கொள்ளும் பொருளும் செயற்பாடும் வேறு. 4031, 4649 அருட்பாக்களைப் பார்க்க.

மூவகை அநுபவங்கள்

திருஞானசம்பந்தப் பெருமான் தமக்கு உபதேசம் வழியாகத் தெரிவித்த மூவகை அனுபவங்களையும் பற்றி ஒரு பாடலில் பொதுவாக எடுத்துக் காட்டுகின்றார். அவை முறையே உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் என்பன. அருள்மாலையில் 2 முதல் 6 வரை உள்ள நான்கு அருட்பாடல்களில் வள்ளற் பெருமானார் இச்செய்திகளை விளக்குகின்றார்.

ஆன்மாவுக்கு ஒரு பெரும் பிணி உண்டு. அப்பிணியினால் பிறந்து இறந்து உழல்கின்றது. மூலமலம் எனப்பெறும் ஆணவமானது ஆன்மாவைப் பொத்தித் தன்னகப்படுத்தியிருப்பதால் அப்பிணி அமைகிறது. அப்பிணி நீக்கத்துக்கு ஞானசம்பந்தர் கொல்லி மழவன் மகளுக்கு அமைந்த முயலக நோய் நீக்கத்துக்காக ஒரு பதிகம்

Koviloor Digital Library

அருளுகின்றார். அதனை அடிப்படையாகக் கொண்ட செய்திகளையும் இந்த அருள்மாலையில் காணப் பெற முடிகிறது. உயிரில்தான் அனுபவம் அமைய வேண்டும். உயிரானது இறைவன் மூலம் நேர் அனுபவம் பெற்று விடுமேயானால் அதனிடம் படிப்படியாக அருளனுபவம். சிவ அனுபவம் ஆகியவைகளை இறைவன் உண்டாக்கி விடுவான் என்பது வள்ளற்பெருமானார் பொதுவாக அனுபவங்களைப் பற்றிக் கூறும் கருத்து. ஆன்மா அல்லது உயிர் அல்லது சீவன் என்பது ஒரு தனிப் பொருள்தான். அனுபவம் பெறுகின்ற இடம், அனுபவ வேறுபாடு காரணமாகப் பெயர் வேறுபாடுகளை அமைத்தருளுகின்றார்.

உயிரனுபவம்

உயிரனுபவம் என்பது மூன்று நிலைகளை உடையது.

1. தத்துவங்கள் அனைத்தையும் தனித்தனியே ஏறுதல். தத்துவங்களைக் கடத்தலும் தவிர்த்தலும் இங்கே இயலாது.

2. தனிப்பர நாதமாம் தலத்தே ஒத்தல் உயிர் வெளி 3, ஆன்மவெளி 2 ஆகிய ஐந்தையும் நீங்கி பரவெளியில் இருத்தல். அருள் வெளியானது நான்கு வகைப்படும். பர பரம்பர, பராபர, பெருவெளிகள். அவற்றுள் முதல் வெளியில் நிற்றல்.

3. தன்மயமாய்த் தன்னைத் தான் இன்றி உற்றிடல்.

தனிப்பரநாதமாம் தலத்தே ஆன்மாக்களிடம் தத்துவஞானம், தத்துவ அனுபவம் ஆகிய அனைத்தும் கழன்று போகும். இந்த இடத்தில் ஆன்மாவானது சத்தியத்தன்மையாய் நிற்கும். அப்போது அதனிடம் சத்தியத்தன்மையோடு, நான் என்ற ஞானமும் இருக்கும். அப்போது பரம்பொருள் சத்தியத்தன்மை என்ற வகையில் ஆன்மாவுடன் ஒத்து நிற்கும். சத்தியத் தன்மை என்ற வகையில் ஒத்த ஆன்மாவை, நான் என்ற ஞானத்தை நீக்கி அதனுடன் இறைவன் ஒன்றுவான். இதனை, தன்மயமாம் நின்னை (ஆன்மாவை) நீ இன்றி (நான் என்ற ஞானத்தை நீக்கி) உற்றிடல் உயிரனுபவம் என விளக்கினார். 'தன்மயம்' என்பதை அருள்மயம் என்று உரை கண்டவர்கள் உண்டு. அது பொருந்தவில்லை.

Koviloor Digital Library

பரநாதத் தலத்தில் ஆன்மாவுக்கு சத்திய அனுபவம் மட்டுமே கிடைக்கும். இதனை மணிவாசகப் பெருமான் சிவபுராணத்தில் போற்றி, புணர்ந்து (புகழ்ந்து என்று இருக்கும் பாடம் தவறு) இருந்து, பொய்கெட்டு, மெய்ஆனார் என்று கூறியுள்ளார்.

நின்னை நீ இன்றி உற்றிடல்
என்னை என்னிடத்தே இருந்தவாறு அளித்தனை

என்ற இருதொடர்களையும் இணைத்து உயிரனுபவத்தை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நின்னை, என்னை என்பவை வள்ளற் பெருமானாரையே குறித்தன.

அருளனுபவம்

உயிரனுபவத்தில் அதன் இயற்கை இயல்பாகிய சத்தியத்தன்மையைத் துய்த்த ஆன்மாவுக்கு, அப்போது ஏற்படும் பனிப்பு-நடுக்கம் நீங்கும். பனிப்பிலாது சத்தியத்தன்மையை உணர்ந்து உள்ளதாய் நின்ற ஆன்மாவானது விளக்கப் பெறுதலும் ஓங்குதலும் அருளனுபவத்தால் பெறும்.

பரவெளி, பரம்பரவெளி, பராபரவெளி, பெருவெளி என நான்கு வெளிகளாக நின்று அருள் வெளியானது அருளனுபவத்தை உயிரினுள் பதிய வைக்கும். பரவெளி என்ற முதற்படியிலேயே உயிரனுபவம் முன் சொன்ன இயல்புகளைப் பெற்றுவிடும். மேலும் உள்ள பரம்பர வெளி முதலாக உள்ள மூன்று வெளிகளில் ஆன்மாவானது பரம் பொருளுடன் புறப்புறப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி, அகப்புறப்புணர்ச்சி, அகப்புணர்ச்சி என்ற நால்வகைப் புணர்ச்சியும் பெற்று முறையே விளக்கம் பெறுதல், உத்தமனாகுதல், ஓங்குதல், துங்கமுறுதல் ஆகிய வளர்ச்சிப்படிகளில் ஏறி அந்த அந்த இன்பம் பெற்றுச் சிறக்கும்.

இங்கே ஆன்மாவின் தன்மயமாகிய அன்பானது இறைவனின் தன்மயமாகிய அருளாக மாற்றப்பெறும்.

அந்நிலையில் ஆன்மவானது பனிப்பு (நடுக்கம்) இலாது என்றும் உள்ளதாய் விளங்கும். பரம்பரம் பராபரம் முதலிய படிகளில்

Koviloor Digital Library

அகம், புறம் முதலிய புணர்ச்சிகளைப் பெற்று, சொல்லால் சொல்ல முடியாத இன்பத்தில் திளைத்திருக்கும். ஆன்மாவின் இத்தகைய நிலையையே அருளனுபவ நிலை என்றார். (விரிவஞ்சி விடுத்தேன்)

சிவானுபவம்

அருளனுபவத்தில் திளைத்து நிற்கும் ஆன்மாவிடத்தில் சுத்தசிவ அனுபவம் உறும். அருள் வெளிகள் நான்கு என்று முன்னே குறிப்பிடப் பெற்றுள்ளது. அதில் இறுதியானது பெருவெளி. பெருவெளியின் நின்று பெறுகின்ற அனுபவமே *சிவானுபவம்*. பெருவெளியைச் சிவவெளி என்றும், வெறுவெளி என்றும் வள்ளற் பெருமானார் அருட்பெருஞ்சோதி அகவலிலும் பிற இடங்களிலும் விளக்கி கூறுகிறார்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய மரணமிலாப் பெருவாழ்வின்பமானது பெருஞ்சுக வெளியில்தான் அனுபவம் பெறும். அருட்பெருஞ்சோதி அகவலில் (553-570) பெருஞ்சுகவெளியை இணைத்துக் கூறியதால் அதையும் சிவவெளியாகவே கொள்வர் ஒரு சிலர். அது பொருந்தாது.

வள்ளற்பெருமானார் தில்லையில் ஐந்து திங்கட் குழந்தையா யிருந்தபோதே பெருவெளி அனுபவம் எனப்பெறும் சிவானுபவம் வரை பெற்று விட்டதோடு பெருஞ்சுக வெளியிலும் நின்று விட்டார் என்று கொள்ளுதல் வேண்டும். சிவானுபவம் வேறு; சுத்த சன்மார்க்கத்துக்குரிய சுத்த சிவானுபவம் வேறு எனக் கொள்ளுதல் வேண்டும்.

உயிரனுபவத்தில்தான் இறங்குமுகம் வர வாய்ப்பு உண்டு. அருளனுபவத்திலும் சிவானுபவத்திலும் இறங்கு முகத்துக்கு வாய்ப்பே இல்லை. சுத்த சிவானுபவத்தில்தான் 'ஐக்கியம்' என்ற நிலை சித்திக்கும்.

உள்ளதாய் விளங்கும் ஒரு பெருவெளிமேல் உள்ளது. முழுமையாக உள்ளது; நடுநிலை அனுபவத்தை நல்குவது; (இதுவே நள்ளிருளில் நட்டம் எனப்பெறுவது) எனது, தனது (இறைவனது) என வேறு பிரித்துச்சொல்ல இயலாதது; என்ன என்ன நிலையினது என்று விளக்க முற்பட்டாலும் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்று சிவ

Koviloor Digital Library

அனுபவத்தை விளக்குகிறார் வள்ளற்பெருமானார். இதுவரை உள்ள செய்திகள் அருள்மாலையில் முதல் ஆறுபாடற் செய்திகள். அடுத்துள்ள நான்கு பாடல்களில் சில வினாவிடைகள் அமைத்துள்ளார்.

அடியும் முடியும்

வள்ளற்பெருமானார் சத்திய அனுபவமாகிய உயிரனுபவம் பெற்று, அதில் அருள் அனுபவம் உற்று, அதில் சிவவெளி அனுபவம் பெற்று நின்ற காலத்தில் அருட்சிவத்துக்கு உரிய அடிமுடி அனுபவம் எது, என வினவுகிறார்.

திருஞானசம்பந்தப் பெருமான் எல்லாப் பதிகங்களிலும், எந்தத்தலப்பதிகமானாலும், திருவண்ணாமலைத் தலநிகழ்வைப் பாடும் மரபினர். வள்ளலாரின் சொற்பொருளகராதியில் சிவம், சதாசிவம், அருட்சிவம், சுத்தசிவம் என்பவை வெவ்வெறு அனுபவத்துக்குரியன. அருட்சிவத்துக்கு அடியும் முடியும் உன்னுள்ளே என்று ஒரு நாள் எழுந்தருளி, கடைக்கணித்து அடிமுடி உன்னுள் விளங்குவன என்றார். பெருவெளியின் மேல் நின்ற ஆன்மாவின் உள்ளூறு சோதியாய் நின்று கருணை வான்தேன் கலக்கச் செய்து கெண்டேயிருக்கும் என்பதே விடை.

அடிமுடி அனுபவத்தைத்தான் சோதியும் கருணையும் எனக்கொண்டு, பின்னர் மகாமந்திரமாக எடுத்துக் கொள்ளுகின்றார். அடி என்பது சோதியாக, முடி என்பது கருணையாக அருட்சிவ அனுபவம் ஆன்மாவில் நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

செவ்வகை ஒருகால்

அடி இரண்டாயினமையின் சோதியும் இருபகுதிப்பட்டது. இருவகைச் சோதி அனுபவப்பட்டபின் இடையில் ஒரு சோதி தோன்றி அனுபவப்பட்டது. அதுவே செவ்வகை ஒருகால் சோதி செவ்வகைச் சோதி அனுபவம் உற்றிடில் உனக்கு எவ்வகை நிலையும் தோன்றும். நீ எண்ணியபடியெல்லாம் எய்தும், இதுதான் அனைத்து இருளையும் முற்றாக அழிக்கவல்லது. அதுவே வருத்தம் இல்லாத வகை. இந்த அனுபவம் ஆன்மாவுக்குரிய அனைத்து மென்மைகளையும் நீக்கி

Koviloor Digital Library

வன்மையாக்க வல்லது. நடுச்சோதி அனுபவம் பெற்றால் அணுவும் ஐந்தொழில் புரியும். வள்ளற்பெருமானார் அடிக்கடி எடுத்துக் கூறும் ஐந்தொழில் மெய்ப்பொருளியலார் கூறும் ஐந்தொழிலின் வேறுபட்டது. இதனாலேயே வள்ளற்பெருமானார், தம்முடைய மகாமந்திரத்தில் மூவகைச் சோதியை அமைத்தார். நடுச்சோதியில் கருணையும் சோதியும் தம்முள் தாம் கலந்தும் நிறைந்தும் நிற்கும்.

முன்புறுநிலையும் பின்புறுநிலையும்

திருஞானசம்பந்தர் தம்முடைய முன்னைப் பிறவியின் நிலை, பின்னே வருகின்ற நிலை பற்றிப் பல இடங்களில் பேசுகின்றார். இதற்கு விடையாக ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் திருநெறிய தமிழ் என்ற முதற்பதிகத் தொடர்களாலேயே விளக்கம் கூறியுள்ளார் என அறிஞர்கள் கருதுவது மரபு.

தெய்வச் சேக்கிழார் பெருமானும், திருஞானசம்பந்தரை மதுரை மக்கள் வரவேற்கும் நிகழ்வினில், மதுரை மக்கள் பெற்ற அனுபவமாக ஒரு செய்தியைக் கூறுகிறார்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
நின்று எழுந்தருளப் பெற்ற பேறு இதனால்
என்றைக்குந் திருவருள் உடையேம்".

என்று விளக்கமளித்துக் காட்டுகின்றார். அனைத்து ஆன்மாக்களுக்கும் திருவருட் பின்னணி உண்டு. திருவருளுடன் இணையாது விலகுறுங்காலத்துப் பிறப்பும் துன்பமும் தொடர்கின்றன. இது முன்னுறு நிலை. திருவருளுடன் நெருங்க, நெருங்க, இறைவனைச் சேரும் நிலை சாத்தியமாகிறது. இதனை இன்றுள்ள நிலையில் ஆன்மாக்கள் அருளை உணர்வதன் மூலம் தம்முடைய முன்னுறு நிலையையும் பின்னுறுநிலையையும் உணர்கிறார்கள் என்பதை விடையாகக் கொள்கிறார். எலும்பு பெண்ணானது அருட்பிறப்பு. அன்புருநிலையில் தொடங்கி, அருளுறு நிலை வளர்ந்து, கருணையுரு நிலையில் நிற்பதே முடிவு. அன்பு உடம்பாய் நின்ற எலும்புருவானது இறை நடம் கண்டதும்

Koviloor Digital Library

மயிலாப்பூரில் எலும்பு அருளுருவாய் எழுந்ததும் இணைத்துக் காண வேண்டிய பகுதிகள்.

திருநெறித் தமிழ் கொண்டு ஐயம் நீக்கினர், என்று வள்ளலார் குறிப்பிடுவது 'திரு எழுகூற்றிருக்கை' என்ற பதிகத்தை அடிப்படையாகக் கொண்டது.

பரம்பொருளின் முன்னுறுநிலையும் பின்னுறு நிலையும் பற்றிய ஐயமே இது. அதைத் திருஞானசம்பந்தர், **'இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்'** என்ற மகாவாக்கியத்தின் மூலமாக விளக்கம் தருகிறார்.

சிவானுபவச் செயற்பாடு

வருபகற் கற்பம், ஒரு பகற்பொழுது என்பன அருள்மாலை இறுதிப்பாடலில் வரும் தொடர்கள். வருபகற் கற்பம் என்ற தொடருக்கு யாரும் விளக்கம் அமைக்கவில்லை. 'கற்பம்' என்பது ஒரு கால அளவு. தொடர்ந்து வருகின்ற காலத்தைப் பகுக்கும் முறையில் கற்பங்கள் பேசப் பெறுகின்றன. நான்கு யுகம் என்று சொல்வது போல ஆறு கற்பங்கள் அமைத்துள்ளார்கள். அவை சுழற்சியாக வந்து கொண்டேயிருக்கும். பகல் - பகுக்கப் பெற்ற என்பது பொருள். பகுக்கப் பெற்ற கற்பங்கள் பல முயன்றாலும் பெற முடியாத அருட்சிவ அனுபவத்தை (திறன் - அனுபவத்தால் செயலாற்றுவது) ஒரு பகற் பொழுதில் (பகு + அல்பொழுது) நாள் ஒன்று, இரவு பகல் இரண்டு, 24 மணி, மணிக்கு 60 மணித்துளிகள், துளிக்கு 60 நொடி எனப் பகுத்துக் கொண்டே சென்றால் பகுக்க முடியாத நிலையில் உள்ள சிறிய கால அளவையில் எனக்கு உணர்த்தினார் என்பது வள்ளற்பெருமானாரின் விளக்கம். ஒரு பகற்பொழுதில் உணர்த்தினார் என்றே பொருள் கொண்டுள்ளார்கள். எனினும் இதன் விளக்கத்தை, திருத்துருத்திப்பதிகம், துறக்குமாசொலபடாய் என்ற பாடலில் விரிவாகக் காணலாம். (1-98.5)

இனி, சிவானுபவச் செயற்பாட்டினை (திறனை) விளக்கு முகத்தால் பெருமண நல்லூர்த் திருமணங் காண வந்தவர்களுக் கெல்லாம் ஞானவடிவம் பெற்று ஓங்குமாறு செய்த கருணைத் திறத்தை எடுத்துக் காட்டினார்.

Koviloor Digital Library

முடிப்புரை

வள்ளாற் நோக்கில் ஆளுடைய பிள்ளையார் என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் ஆளுடைய பிள்ளையார் அருண்மாலைப் பாடல்களில் வள்ளற் பெருமானார் குறிப்பிட்டுள்ள செய்திகள் விளக்கப் பெற்றன. இலை மறை காயாக அமைந்த சில செய்திகளும் விளக்கத்துக்காக இணைக்கப் பெற்றுள்ளன என்று கொள்ளுதல் வேண்டும்.

Koviloor Digital Library

2. வள்ளலார் நோக்கில் ஆளுடைய அரசுகள்

நாவுக்கரசர் முனைவர். சோ. சத்தியசீலன், திருச்சிராப்பள்ளி.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்", என்று புரட்சிக்குரல் எழுப்பி ஏழாம் நூற்றாண்டிலேயே ஆன்மிகத்திற்கு வலிமை சேர்த்தவர்தான் திருநாவுக்கரசர் பெருமான்.

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்தான் 19 ஆம் நூற்றாண்டில் அவதரித்த வள்ளற்பெருமான்.

திருமூலர் திருமந்திரத்தைத் தன்னுடைய சாத்திர நூலாகவும், மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தைத் தன் தோத்திர நூலாகவும் கொண்டவர்தான் வள்ளலார்.

திருஞானசம்பந்தப் பெருமானைத் தம் குருவாகக் கொண்ட வள்ளலார், வாகீசரைப் போற்றிப் பாடி, அவர் அருளையும் வேண்டி நிற்கின்றார்.

"ஆளுடைய அரசுகள் அருள்மாலை" என்னும் பதிகத்தில் அப்பரடிகளைப் பற்றி அவர் பாடுவது நம் உள்ளத்தை உருக்குகின்றது.

திருஅருட்பாவில் பல இடங்களில் அப்பரடிகளின் பெருமையை வியந்து பாடியுள்ளார். ஆயினும் இக்கட்டுரையில், ஆளுடைய அரசுகள் அருள் மாலையில் உள்ள செய்திகளை மட்டும் காண்போம்.

திருத்தகுசீர் அதிகை அருள் திருத்தலத்தில் ஓங்கும் சிவக்கொழுந்து என்று அப்பர் பெருமானை அடிகள் போற்றுகின்றார்.

மெய்ஞ்ஞான உணர்ச்சிவடிவாக விளங்கித் திருநாவுக்கரசு என்னும் திருநாமம் பெற்றுத் திகழ்கின்றார். அவரால் சைவஒளி விளங்கிற்று.

தொண்டிற்குப் பொருத்தமான உழவாரப்படையைக் கைக் கொண்டுள்ளார். அவர் என் கருத்தில் அமர்ந்த புண்ணியன், புனிதன்,

Koviloor Digital Library

கலைமதி, கருணை ஞானக்கடல்! அவருடைய திருவடியைக் கருதி வணங்கிட அவரே அருள் செய்ய வேண்டும்.

திருத்தகுசீர் அதிகை அருள் தலத்தில் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத் திறத்தால் வாய்மை
உருத்தகு மெய்யுணர்ச்சி வடிவாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசு என்று ஒரு பேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப்படை கைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனிதனே என்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலே நின் கழல்கருதக் கருதுவாயே.

திருநாவுக்கரசு என்னும் தேவா! வாய்மை சிறிதும் இல்லாத சமணர்கள் செய்த வஞ்சனையை யெல்லாம் இறைவனுடைய திருவருள் வலிமையால் நீந்திக் கடந்தாய்! தூய்மை மிகுந்த சைவ நெறியை ஒளிவீசச் செய்யும் ஒளி விளக்காய் ஆனாய்!

எம்மைத் தூரத்தே நிறுத்தி விடாமல் உன்னருகே இருக்கும் வண்ணம் ஆட்கொண்டாய்! எங்களை ஆளவந்த செல்வம்நீ!

அப்பர் பெருமானே நீ இறைவனுடைய பாதமாகிய திருவடி மலரைச் சூடியுள்ளாய்!

உன்னை நான்முகனும் விரும்புகின்றான். ஏன் தெரியுமா? அவனுடைய படைப்புகள் புண்ணிய வடிவம் பெற வேண்டும் என்பதற்காக,

பெருமானே, நான் யார் தெரியுமா? எது விதி, எது விதி விலக்கு, என்று அறியாது வாழ்கின்றவன். இருந்தாலும என்னை விரும்பி என் உள்ளத்தில் வந்து அமர்ந்து கொண்ட அருளாளன் நீ!

என்னுள் ஞானம் என்னும் விளக்கை ஏற்றிய அருட்குரு நீ! பாவமெல்லாம் அகற்றி விடும் பண்பாளன் நீ. அடியார்களுக்கு அன்புத் தொண்டு செய்யும் ஆற்றலை நீ வழங்குவாயாக!

Koviloor Digital Library

என் கண்ணுக்குள் மணியாக விளங்குகின்றாய்! சைவ நற்கனியாகத் திகழ்கின்றாய்! செங்கரும்பு போன்றவன் நீ!

வேதமாகிய பண்களுக்குள்ளே விளையும் அருட்பயனாக விளங்குபவன் நீ!

ஐயனே! தேவருலகத்துப் போகங்களை யான் விரும்பவில்லை! என்னை நீ ஆட்கொள்ள வேண்டும். ஒண்ணுளே ஒன்பது வாய் வைத்தாய் என்று பாடி உலகத்து மக்களெல்லாம் உடல் படைத்த பயனை அறிந்து கொள்ள உதவிய அருளாளன் அல்லவா நீ.

யான் ஓங்காரமாம் ஒப்பற்ற மந்திரத்தின் பொருளை உணர்ந்து மகிழும் ஆற்றல் அற்றவன். அகங்காரங்கொண்டு திரிகின்ற யானையைப் போல இந்த உலகத்தில் திரிகின்றேன்.

எனக்கு உய்தியைத் தரும் உயர்ந்த அடியார்களைச் சேரும் உள்ளமும் எனக்கு இல்லை! உலகில் எல்லா வகைத் தீமைகளையும் செய்யும் பாவியாகி வாழ்கின்றேன்! எனக்கு உன்னருள் வேண்டும். தீமைகளில் இருந்து நான் விடுதலை பெற வேண்டும்!

இந்தப் பொய்யனுக்கு உய்தியடையும் வழியை நீதான் வழங்கியருள வேண்டும்.

பெருமானே! வேதத்தின் உச்சிப் பொருளாக விளங்கும் இறைவனை உன் உள்ளத்தில் சுமந்தாய்! அதன் துணையோடு கடல் கடந்து கரை சேர்ந்தாய்!

உலகத்திற்கு உன்னைத் தந்து அருள் வழங்கிய அன்னையாம் திலகவதியம்மையார் பின் தோன்றினாய்! என்னை இருள் சூழும் இவ்வுலகத்துத் துன்பத்திலிருந்து எடுத்து ஆண்டு கொள்வாயாக!

உன்னையே உறுதுணையாக எண்ணுகின்றேன்! சொல்வேந்தராக விளங்கும் தூயவனே! என் உயிர்த்துணையாக என்னை ஆண்டு அருள்வாயாக!

Koviloor Digital Library

நீ என் உள்ளத்தில் தித்திக்கும் தேனாக இருக்கின்றாய்! அப்பூதி அடிகளுக்கு அருள் புரிந்த பெருந்தகையாக விளங்குகின்றாய். கூர்த்த மதியை எனக்கு அருள்வாயாக!

பத்துப் பாடல்களில், திருவருட்பாவில் வள்ளலார் அப்பரடிகள் யாரென்று அறிமுகப்படுத்துகிறார். அந்த சொற்றொடர்களே அப்பர் அடிகளுடைய முழுப் பெருமையையும் நமக்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றவை.

1. உழவாரப்படை கைக்கொண்ட புண்ணியனே!

2. சிவநெறியே விளங்க ஓங்கும் சோதிமணி விளக்கே!

3. நான்முகனும் விரும்பும் ஞான நாயகனே!

4. பாவமெலாம் அகற்றி அருட்பான்மை நல்கும் பண்புடைய பெருமானே!

5. கதிதரு கற்பகமே! முக்கனியே! ஞானக்கடலே!

6. என்உயிர்த் துணையாய் விளங்கும் கோவே!

7. வளங்கெழும் ஆகமநெறியை வளர்க்க வந்த வள்ளலே!

8. சிவநெறியை விளக்க வந்த செஞ்சுடர் மாமணி விளக்கே!

9. தேர்ந்த உளத்திடை மிகவும் தித்தித்து உண்ணும் செழுந்தேனே!

10. என் குருவே! என் குலதெய்வமே!

மேற்கண்ட சொற்றொடர்கள் வெறும் பாராட்டுரைகள் மட்டுமல்ல. அவையனைத்தும் பொருள் பொதிந்த சத்தியவார்த்தைகள்.

அப்பரடிகளை வழிபட்டு என்ன வரம் வேண்டுமென்று கேட்க வேண்டியவைகளையும் வள்ளலார் நமக்கு உணர்த்துகிறார்.

1. நின்கழல் கருதக் கருதுவாயே!

2. எம் பாவமெலாம் அகற்றி அருள்!

3. என்னுள் மதிவிளக்கை ஏற்றியருள்!

Koviloor Digital Library

4. உய்வகை எவ்வகை யாது செய்வேன் நீயே உறுதுணை

5. என்மெய் வகையில் செலுத்த நினைத்திடு

6. சிறியேனை இருள்வழங்கும் உலகியல் நின்று எடுத்து ஞான இன்னருள் தந்து ஆண்டருள்வாய்!

மேற்கண்ட விண்ணப்பங்களைச் செய்து அப்பரடிகளின் அருள்முகத்தை உன்னி அருட்பிரகாச வள்ளலார் நமக்கு வழிகாட்டுகின்றார்.

நாவுக்கரசு பெருமானின் அருட்பெருமையினையும், அவரை வணங்கி நாம் பெற வேண்டிய உறுதிப் பொருள்களையும் வள்ளற் பெருமானைப் போல ஆன்மிக உலகில் வழங்கியோர் வேறு யாருமிலர்!

வள்ளல் மலரடி வாழ்க!

Koviloor Digital Library

3. வள்ளலார் நோக்கில் ஆளுடைய நம்பிகள்

கலைமாமணி முனைவர் இரா. செல்வகணபதி, சென்னை.

சன்மார்க்க உலகில் வள்ளல் பெருமான் என்ற தொடர் வடலூர் இராமலிங்க சுவாமிகளைக் குறிப்பதாகும். திருவருட்பிரகாச வள்ளலார் என்பதன் சுருங்கிய வடிவமே வள்ளல் பெருமான் என்பது. வள்ளல் பெருமான் அருளிய அருட்பனுவல்களின் தொகுதி திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. அருட்பனுவல்களோடு, உரைநடை இலக்கியங்கள் சிலவும் வள்ளல் பெருமானால் படைத்தளிக்கப் பெற்றன. வள்ளல் பெருமான் சிவனையும், சைவ அடியார்களையும் போற்றிப் பல அருட்பனுவல்கள் யாத்துள்ளார். சைவ சமயக் குரவர்களுள் மூன்றாமவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவரை ஆளுடைய நம்பி என்றும் குறித்தல் சைவ மரபு. வள்ளல் பெருமான் அருளிய அருட்பனுவல்களில் ஆளுடையநம்பி குறித்த அரிய பல பதிவுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றை எல்லாம் திரட்டி ஒப்பவைத்து ஆயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

ஆளுடைய நம்பி குறித்த விரிவான பதிவுகள் வள்ளல் பெருமான் அருளிய திருவருட்பா ஐந்தாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ளன. சைவ சமயக்குரவர்கள் எனப் போற்றப்பெறும் நால்வர் பெருமக்கள் மீதும் வள்ளல் பெருமான் தனித்தனியே அருள்மாலை என்ற தலைப்பிட்டு நான்கு மாலை இலக்கியங்கள் அருளியுள்ளார். இதில் மூன்றாவதாக அமைவது ஆளுடைய நம்பிகள் அருள்மாலை என்பது. இந்நூல் பத்துக் கொச்சகக் கலிப்பாக்களால் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. இவ்வருட்பனுவல்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருமைகளையும், அவர் வாழ்வில் சிவனருளால் நிகழ்ந்த அற்புத நிகழ்வுகளையும், சைவ சமய வளர்ச்சியில் அவர் ஆற்றியுள்ள பங்கு பணிகளையும் வள்ளல் பெருமான் மிகுந்த ஈடுபாட்டுடன் பதிவு செய்துள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள் வரலாற்றை நன்கு படித்தறிந்துகொண்ட பின், ஆளுடைய நம்பிகள் அருள்மாலையைப் பயின்றால் இம்மாலை இலக்கியத்தின் பெருமை விளங்கித்தோன்றும். இந்நூல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறித்த போற்றி நூல்களுள் ஒன்றாகக் கருதிப் போற்றத்தக்கது.

Koviloor Digital Library

ஆளுடைய நம்பிகள் அருள்மாலையில், வள்ளல் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளை முன்னிலைப்படுத்திக்கொண்டு, விளித்துப் பாடும் போக்கில் அமைந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆசிரியர் இம்மாலை இலக்கியத்தில் ஏழு அரிய தொடர்களால் முன்னிலைப்படுத்தி வரைகிறார்.

1. 'வன்தொண்டப் பெருந்தகையே' (3247,49,50)
2. 'அருட்டலைமைப் பெருந்தகையே' (3248)
3. 'உயர் கருணைப் பெருந்தகையே' (3251)
4. 'நாவலூர்ப் பெருந்தகையே' (3252)
5. 'தனிக்கருணைப் பெருந்தகையே' (3253)
6. 'அருட்பாட்டுப் பெருந்தகையே' (3254)
7. 'தனித்தலைமைப் பெருந்தகையே' (3255)

கோவிலூர் ஆ... A. No. 11748 Q23 ...லகம், கோ...

மேற்குறித்த ஏழு தொடர்களிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வள்ளல் பெருமான் பெருந்தகை என்ற தொடரால் குறிப்பது பெரிதும் சிந்திக்க வேண்டும்.

திருவள்ளுவர் – அறத்துப்பாலில் ஒப்புரவறிதல் என்ற அதிகாரம் ஒன்றை இடம்பெறச் செய்துள்ளார். அவ்வதிகாரத்தில் உலக நடை அறிந்து பிறர்க்கு வழங்கும் உள்ளம் கொண்ட அருளாளர்களை அவர், பேரறிவாளன், நயனுடையான், பெருந்தகையான் என வேறுவேறு மூன்று தொடர்களால் அடையாளப் படுத்துகிறார். திருவள்ளுவர் நீர் வழங்கும் ஊற்றுப் போல்வாரைப் பேரறிவாளன் என்றும், கனிவழங்கும் நல்ல மரம் போல்வாரை நயனுடையான் என்றும், தன் இலைமுதல் ஆணிவேர் வரை அனைத்தையும் வழங்கும் மருந்து மரத்தைப் போல்வாரைப் பெருந்தகையான் என்றும் குறித்துள்ளார். மேற்குறித்த மூன்று அடைமொழிகளுள் பெருந்தகை என்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறித்த வரிகளில் வள்ளல் பெருமான் இணைத்திருப்பதன் வழி, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்வும் வாக்கும் முழுவதுமாய்ச்

Koviloor Digital Library

சைவநெறியைக் காத்தெடுக்கப் பயன்பட்டவை என்பதை ஆசிரியர் நுட்பமுறக் குறித்தருளுவதாகவே தோன்றுகிறது. இந்நிலைக்களம் மேலும் ஆராய்வதற்கு உரியதாகும்.

ஆளுடையநம்பிகள் அருள்மாலையின் பத்துப்பாடல்களுள் ஒவ்வொன்றும் அவர் சைவ சமயத்துக்குத் தந்த அருட்கொடைகளையும், வாழ்வில் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களையும், அவற்றால் சைவத் தமிழ் உலகம் பெற்ற பெருவாழ்வையும் குறிப்பனவாகவே அமைகின்றன. முதற்பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைச் சிற்றம்பலவனாகிய சிவன் குறித்த சொன்மாலைகளைத் தொகுத்தளித்த பெருமையைப் பேசி நிற்கிறது. சுந்தரர் தேவாரத்தை வள்ளல் பெருமான்,

துதியணிசெஞ் சுவைப்பொருளில்

அமைந்த சொன்மாலை என்று குறிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சொன்மாலை,

விதியணிமா மறைநெறியும்
மெய்ந்நிலை ஆகமநெறியும்
வதியணிந்து விளங்கவைத்த

பெருஞ்சிறப்புடையது என்று அறிந்துரைக்கிறார். ஆதிசைவர் என்று கூறப்படும் சிவாசாரியர் திருமரபில் வந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். திருஞானசம்பந்தர் வருகையால் வேதநெறி தழைத்தோங்கிற்று என்பார் சேக்கிழார். வள்ளல் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகையால் வேதமொடு ஆகமநெறியும் உயர்ச்சி பெற்ற திறத்தை நுட்பமுற எடுத்துக் காட்டுகிறார். ஆகமநெறி குறித்த அரிய பதிவுகள் பல சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பனுவல்களில் இடம் பெற்றிருப்பதை நுணுகி அறிந்து இந்தப் பதிவை வள்ளல் பெருமான் இடம் பெறச் செய்திருப்பதை உணர முடிகிறது.

'மதியணிசெஞ் சடை' என்று தொடங்கும் முதற்பாடலில் வள்ளல் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வன்தொண்டப் பெருந்தகை என்று குறிக்கிறார். திருமண நாளில் மணம் வந்த புத்தூரிலும், தொடர்ந்து திருவெண்ணெய் நல்லூரிலும் சிவனோடு வல் வழக்கிட்டவர் சுந்தரமூர்த்தி

Koviloor Digital Library

சுவாமிகள். அதுபற்றிச் சிவன் அவரை வன்தொண்டன் என்று குறித்தருளினார். தெய்வச் சேக்கிழார் இதனை,

'மற்றுநீ வன்மைபேசி வன்தொண்டன்
என்னும் நாமம் பெற்றனை' (பெ.பு.216)

எனக்குறித்தருளினார். இத்தொடரை விரும்பிப் போற்றும் வள்ளல் பெருமானும், அருள்மாலையின் மூன்று பாடல்களிலும் (3247-49-50) சுந்தரமூர்த்தி சுவாமிகளை வன்தொண்டர் என்றே பதிவு செய்து மகிழ்கிறார். ஏன் எனின், இத் திருநாமம் சிவனால் சூட்டப் பெற்றமை என்று அறியமுடிகிறது.

எஞ்சிய ஒன்பது பாடல்களில் ஆறுபாடல்களில் வள்ளல் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றில் முன் நிகழ்த்திய அற்புதச் செயல்களைப் பதிவு செய்கிறார்.

1. திருமுதுகுன்றத்தில் (விருத்தாசலம்) சிவன் தந்த பன்னீராயிரம் பொன்னைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள். மணிமுத்தா நதியில் இட்டு, திருவாரூர் (கமலாலயக்) குளத்தில் எடுத்துக் கொண்டமை (3248)

2. கொங்கு நாட்டுத் திருப்புக்கொளியூரில் (அவிநாசி) முதலைவாய் புகுந்த இளம் பிள்ளை ஒருவனைப் பல ஆண்டுகள் கழித்து, உரிய பருவ வளர்ச்சி பெற்றவனாய், முதலை வாயிலிருந்து மீட்டது. (3249)

3. திருநாவுக்கரசர் சூலை நோய் நீங்கப்பெற்ற திருவதிகை வீராட்டானத்தின் எல்லையில் அமைந்திருந்த சித்தவட மடத்தில், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டாதிருக்கவும், சிவன் அவருக்குத் திருவடி தீட்சை செய்வித்தருளிய பெரும் பேறு. (3250)

4. திரு அஞ்சைக் களஞ்சியத்திற்குச் சிவன் வெள்ளானை அனுப்பித் தர, அதன்மீது இவர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலை சென்று சேர்ந்தது. (3252)

5. திரு ஆரூர்ப் பெருமான் தான் உளம் மகிழ்ந்து தன்னைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தோழமை உரிமை தந்தருளிய கருணை (3255)

Koviloor Digital Library

6. ஊடல் கொண்டிருந்த பரவை நாச்சியாரின் ஊடல் தணிக்க, நட்புக்காக, திரு ஆரூரில் சிவன், திருவடிகள் நிலம் தோய இரண்டு முறை தூது நடந்து வந்து செய்வித்த அருமைப்பாடு. (3256)

ஆளுடைய நம்பிகள் அருள் மாலையில், வள்ளல் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்டு அருளிய சிவனின் மேலாந்தன்மைகள் பலவற்றை மிக அழகான தொடர்களால் பதிவு செய்துள்ளார். சிவனை அவர்,

'மதியணி செஞ்சடைக் கனி'
'மன்றுள் நடம்புரி மருந்து' (3247)

'வேத முதற்கலைகள் எல்லாம்
விரைந்து விரைந்து அனந்தமுறை
ஓத அவைக்கு அணுத்துணையும்
உணர்வரிதாம் எம்பெருமான்' (3250)

'அன்பு ஆட்டு தொழில் பொதுவாய்
இயற்றுகின்ற எம்பெருமான்' (3254)

'பரம்பரமாம் துரியமெனும்
பதத்திருந்த பரம்பொருள்' (3255)

என அழகிய ஐந்து தொடர்களால் வணங்கிப் போற்றுகின்றார். 'பெருந்தகை' என்ற பதிவை ஒப்ப வைத்து நோக்கும்போது, 'கனி', 'மருந்து' என்ற பதிவுகள் திருக்குறள் தந்த கொடைகளாம் என எண்ணத் தோன்றுகின்றது. சிவனை ஏனைய அவன் திருவுருவங்கள் பலவற்றுள் (மூர்த்தங்கள்) வைத்துப் போற்றுவதை விட அவனை, ஆடல் வல்லானாகக் காண்பதில் பெரிதும் மகிழ்ந்தவர் வள்ளல்பெருமான் என்பதை, மேற்குறித்த சிவன்குறித்த இரு பதிவுகள் மெய்ப்பிக்கின்றன.

ஆளுடைய நம்பிகள் அருள்மாலையின் இரண்டாவது பனுவல், திருமுதுகுன்றத்திலும், திருவாரூரிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றில் சிவன் நிகழ்த்திய அருளாடலை விளக்கி நிறைகிறது. திருவருட்பா பாடல் பெற்ற திருத்தலங்கள் ஒன்பது. அவற்றுள் ஒன்று

Koviloor Digital Library

திருமுதுகுன்றம். இத்தலத்திறைவன் மீது வள்ளல்பெருமான் பழமலைப்பதிகம் (மூன்றாம் திருமுறை - பதிக எண் 13) எனப் பத்துப்பாடல்களும், பழமலையோ கிழமலையோ (மேற்படி -14) மூன்று பாடல்களும் அருளிச் செய்துள்ளார். மேற்குறித்த பதின்மூன்று பனுவல்களிலும், ஓர் இடத்தில் கூட, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொன்பெற்று ஆற்றிலிட்ட அற்புதத்தைப் பதிவு செய்திலர். மாறாகச் சாக்கியநாயனார் கல் எறிந்து வழிபட்ட நிகழ்வு பதிவாகியுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்வியல் அற்புதங்களில் குறிக்கத்தக்க ஒன்றான இதனை வள்ளலார். இத்தலத்துப் பனுவல்களிலும் குறிக்காதது ஏன் என்று அறிய முடியவில்லை. ஒன்று பின்னே அருள்மாலையில் இதனைக் குறிப்பிட வேண்டியிருந்திருக்கலாம். அல்லது, சிவன் கருணைத் திறத்தை அடியவர்கள் வரலாற்றில் வைத்து பேசுவதே சிறப்பென்று அவர் கருதியிருக்கலாம். அக்குறை அருள்மாலையின் இரண்டாம் பாடலில் நீக்கப்பட்டுள்ளது.

ஆளுடைய நம்பிகள் அருள்மாலையின் இரண்டாம் பனுவலுள் வரும் ஒரு தொடர் பெரிதும் சிந்தனைக்கு உரியதாகிறது.

'நீற்றிலிட்ட நிலையாப்புன்
நெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத்
தியங்குற்றேன் தனைஆளாய்
ஏற்றிலிட்ட திருவடி'

இத்தொடருக்கு, ஔவை சு. துரைசாமி பிள்ளை 'சுண்ணாம்பு நீற்றால் வெந்தழித்து கெடும் பொருள் போன்று, நிலையாத தீ நெறியைக் கடைப் பிடிப்பவர்களோடு கூடிச் சேற்றில் நிறுவிய கம்பம் போல் நில்லாது சாய்ந்துவிழும் என்னை ஆண்டருள்வாயாக'. என உரை கண்டுள்ளார் (திருவருட்பா மூலமும் உரையும் - தொகு-8, பக்கம் 116) இவ்வுரை வள்ளல் பெருமான் தன்னிலை இரக்கமாகக் கொண்டு பாடியதாக உரைகாரர் குறிக்கிறார். எனக்கென்னவோ, திருநாவுக்கரசர் பெருமானை நீற்றறையிலிருந்து மீட்டெடுத்த கருணையை வியப்பதாக இருக்கலாமோ என்று தோன்றுகின்றது. ஏற்றாய் அடிக்கே என்ற நாவரசர் தேவாரத் தொடர், ஏற்றிலிட்ட திருவடி என வந்திருக்கலாம். சேற்றிலிட்ட கம்பமெனத்

Koviloor Digital Library

தியங்குற்றோன் எனப்பாடமோதின் என் கருத்து வலிமை பெறும். புன்னெறி சென்றவர் நாவரசரே அன்றி, வள்ளல்பெருமான் அல்லர். அறிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

வள்ளல் பெருமான், அருள்மாலையின் மூன்றாம் திருப்பாடலுள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலைவாய்ப் பாலனை மீட்டெடுத்த அற்புதத்தைப் பேசுகிறார். தேவார மூவர் வாழ்வியல் அற்புதங்களை ஒப்பிட்டு ஒரு சிற்றாய்வு நிகழ்த்திய, நால்வர் நான்மணிமாலை ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், போதமுண்ட பிள்ளை என்று தொடங்கும் பனுவல் ஒன்றால் முதலைவாய்ப்பாலனை மீட்ட அற்புதமே தலையாயது என்று மறைமுகமாகக் குறித்துள்ளார். சிதம்பரம் ஈசானிய மடத்து இராமலிங்கத் தம்பிரான் வரைந்த உரையில் சிவப்பிரகாச சுவாமிகளின் பதிவின் உள்நோக்கம் நன்கு விரித்துரைக்கப்பட்டுள்ளது. எலும்பைப் பெண்ணாக்க - ஞானசம்பந்தருக்கு எலும்பு ஒரு பொருள் இருந்தது. நாவரசருக்குக் கடலில் மிதக்க கல் என ஒன்றிருந்தது. ஒன்றை ஒன்றாக மாற்றிய அற்புதத்தை விட ஒன்றுமே இல்லாததிலிருந்து, புதிதாக ஒன்றைப் படைத்த அற்புதம் சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்தது. முதலை வாய்ப்பாலனை மீட்ட சுந்தரர் தமிழ் எத்துணை உயர்வானது என்பதை வள்ளல் பெருமான் இப்பனுவலில் ஐயமறப் பாடியுள்ளார்.

நீர் வற்றிப்போன குளத்தில் நீரை வரவழைத்த தமிழ். பின் நீர் நிறைந்த குளத்தில் முதலையை வரவழைத்தது தமிழ். மூன்றாவதாக முதலை வாய்ப்புகுந்த தலைமகனை உரிய பருவ வளர்ச்சியுடன் உயிர்ப்பித்து வரச்செய்தது தமிழ். இத்தகு ஆற்றல் மிக்க சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தெய்வத்தமிழ்க்கலை ஆற்றல், வடமொழியில் உள்ள எந்தக்கலை ஆற்றலுக்கும் இணையானதன்று. அதனினும் மேம்பட்டது.

ஒரு கணக்கீடு நிகழ்த்தி ஒப்பாய்வு செய்தால் சுந்தரத் செந்தமிழ் பொன்மலை போல் பெரிது. வடமொழிக்கலைகளோ- ஒப்பிடுகையில் ஓர் அணுவுக்கு மட்டுமே நிகராவது. மலை எங்கே? அணு எங்கே?

'நின் கலைக்கும் வடகலையின் முதற்கலைக்கும்
உறுகணக்கு உயர்பொன் மலைக்கும் அணுநிலைக்கும் உறா'.

Koviloor Digital Library

சிவனருள் பெற்று, மூவர் திருவாய் வழி வெளிப்பட்ட செந்தமிழ், படைத்தல் முதலிய ஐந்தொழிலையும் நிகழ்த்தும் வீறுமிக்கது என்பது வள்ளல் பெருமான் திருவுள்ளம் எனத் தெரிகிறது.

சிவன் தன் அடியார்களுக்கு அருளும் திறம் குறித்து நாம் ஆராய்ந்து அறிதல் இயலாது என்பதைத் திருஞானசம்பந்தர் அப்பாலர்க்கு அருளும் வண்ணம் என்ற தம் தேவாரத்துள் குறித்துக் காட்டுவார். திருவிழீமிழலையில் படிக்காசு வழங்கியமை. திருமறைக்காட்டுக் கதவு திறந்தருளியமை; திருவாய்மூரில் திருக்காட்சி நல்கியமை என்பனவெல்லாம் நம் சிற்றறிவுக்கு எட்டாத சிவனருள் ஆடல்கள். காரைக்கால் அம்மையார் எளிதிற் கண்ட கயிலைக் காட்சி, திருநாவுக்கரசருக்கு எட்டாக் கனியாயிற்று. இவைபோல் நாவரசர் வேண்டிப் பெற்ற சிவன் திருவடி தீட்சை, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு வேண்டாதபோதும், சிவனருளால் தாமே வாய்த்தது. இவ்வுற்புதத்தை ஆசிரியர்,

'வேதமுதற் கலைகளெலாம்
விரைந்து விரைந்து அனந்தமுறை
ஓத அவைக்கு அணுத் துணையும்
உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப்பணி முடிமேல் படப்புரிந்த மாதவம்யா'

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளையே முன்னிலைப்படுத்தி பாடுகிறார். 'யாது நம்பி அரிது நன்கு எனக்கியம்பு' என்று சிவப்பிரகாச சுவாமிகள் வினைவியதும் நினைவிற்கு வருகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பெரிதும் ஈடுபாடு மிக்க சிவத்தல திருஆரூர். பூங்கோயில் சிவனை அவர் எட்டுப் பதிகங்களால் போற்றித் துதித்துள்ளார். அவற்றுள் ஒன்று 'பத்திமையும் அடிமையும்' என்று தொடங்கும் பழம்பஞ்சுரம் என்ற பண்ணில் அமைந்த திருப்பதிகம். இப்பதிகம் பன்னிரண்டு பாடல்கள் கொண்டது. இப்பதிகத்தின் பத்தாம் பாட்டு,

Koviloor Digital Library

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு குடனாகி
மாமழை ஒண்கண் பரவையைத்தந்து
ஆண்டானை, மதியில்லா
ஏழையேன் பிறந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே (7-51-10)

என்பது இப்பதிகம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்து வாழ்ந்திருந்த நாள்களில், இளவேனில் பருவம்வர, அக்காலைத் திருவாரூரில் நடைபெறும் வசந்த விழாவைக் காண வேண்டும் என்ற ஆவல் மீதூரப்பாடிய பதிகம் என்பர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த இத்திருப்பாட்டு சிவனை இசை வடிவமாகக் காணும் பெருஞ்சிறப்புடையது. சமணர்கள் தமிழகத்தில் ஆட்சி கொண்டு, அரச அதிகாரங்களையும் பெற்ற காலை, தமிழ் மொழியும், தமிழிசையும் பெரிதும் சிதைந்து போயின. மொழியோடு இணைந்த மரபுகளையும், இசையோடு இணைந்த வாழ்வினையும் மேற்கொண்டு பெருவாழ்வு வாழ்ந்திருந்த தமிழினம் சமணர்களின் வரவால் நலம் குன்றியது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமணர்களுக்கு எதிரான போராட்டங்களுக்குத் தலைமை ஏற்றுப் பெரு வெற்றி பெற்றனர். இப்போராட்டங்களை இரண்டு சமயங்களுக்கு இடையே நிகழ்ந்த போராட்டங்கள் என்பதைவிட வேறுபட்ட இரண்டு கலாச்சாரங்களுக்கு இடையே நிகழ்ந்த போராட்டங்கள் என்பதே முறையாகும். இப்போராட்ட முடிவில் தமிழ் தளிர்த்தது! பெண்மை மதிக்கப்பட்டது; தமிழர் முருகியல் கலைகளாகிய இசையும் கூத்தும் புத்துயிர் பெற்றன. வைதிக சமயம் - தமிழர் சமயத்துடன் இணைந்து புது வீறு பெற்றது.

தேவார மூவர்கள் சிவனை- இசையாகவே கண்டு போற்றினர். பண்ணொடு பயின்ற தேவாரப் பனுவல்கள் சிவாலயங்களில் பாடப்பெற்றன. அன்பும் சிவமும் ஒன்றே என்று கண்டு தெளிந்த தமிழினம், சிவனும் - இசையும் ஒன்றே என உண்மை கண்டு தெளிந்தது.

Koviloor Digital Library

'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்', 'நாவினுக்கு அரையன்', என்று தம்முன்னோரை சுந்தரர் போற்றி மகிழ்ந்தார். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று அவரே தெளிந்து உரைத்து மகிழ்ந்தார். சிவன் இசைக்கு உருகும் பண்பினன் எனக் கண்டு காட்டினார். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் இசை ஆற்றலும், ஆனாயரின் குழலிசையும தமிழ்ச்சமூகத்தை ஆட்சி கொண்டன. சிவன் இசையாக நின்றதோடு, இசை தரும் பயனாகிய இன்பமாகவும் கண்டு தெளியப் பெற்றான். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இசையில் மயங்கிய சிவன் அவரைத் தோழமை கொண்டான். அவ்வன்பு மீதூர அவர் செய்த சிறு பிழைகளுக்கும் நட்புரிமையோடு துணைநின்று நட்புத்தடத்தை புதுக்கினான். ஆரூர்ப் பெருமான் தானே முன்னின்று பரவையாரை - நம்பியாரூரருக்கு மணம் செய்வித்து ஒரு கலப்புத் திருமணத்திற்கு ஏற்பளித்தான். இவற்றையெல்லாம் நினைவு கூற வைத்த பாடல் ஏழிசையாய் என்று தொடங்குவது, இப்பனுவல் வள்ளல்பெருமானைப் பெரிதும் ஈர்க்கின்றது. அந்த ஈடுபாட்டில் அருள்மணிமாலையின் ஐந்தாம் பாட்டு மலர்கிறது.

'ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுநீ
சொன்ன பெரும் சொற்பொருளை
ஆழநினைந்திடில் அடியேன்
அருங் கரணம் கரைந்து கரைந்து
ஊழியல் இன்புறுவதுகாண்
உயர்கருணைப் பெருந்தகையே' (3251)

இப்பாடல் ஒன்றன்பின் ஒன்றாக வள்ளல்பெருமானின் அகக்கருவிகளாகிய மனம் முதலியவற்றைக் கரைந்துருக வைத்துள்ளது என்பது தெளிவாகிறது.

திருவஞ்சைக்களத்தில் சேரமான்பெருமாள் நாயானருடன் விருந்தினராகச் சுந்தரர் தங்கியிருந்த காலத்தில், அவருக்கு உலகியியல் வாழ்வில் உவர்ப்புத் தோன்றிற்று. தலைக்குத்தலைமாலை என்ற பதிகம்

Koviloor Digital Library

அருளச்செய்தார். அப்பதிகப்பொருளை உள்வாங்கிய சேக்கிழார் பெருமான்.

'எடுத்த அத்திருப்பதிகத்தின் உட்குறிப்பு
இவ்வுலகினில்பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும்' (பெ.பு. 4263)

என்ற குறிப்பு அதில் இழையோடுவதை இனங்காட்டியுள்ளார். சிவன் மகிழ்ந்து அயன் முதலிய தேவர்களைப் பணித்து,

'ஒன்று சிந்தைநம் ஊரனை உம்பர்
வெள்ளானை யுடன் ஏற்றிச்
சென்று கொண்டிங்கு வாரும்' (பெ.பு. 4264)

எனக் கட்டளையிட்டான். தேவர்கள் வெள்ளானையுடன் திருவஞ்சைக்களம் சேர்ந்து சிவன் அழைப்பைச் சுந்தரமூர்த்திகளுக்குத் தெரிவிக்க, சிறிதும் தாமதியாது வெள்ளானை மீது ஏறி அவர் கயிலை புறப்பட்டார். அவரைக் கயிலாயத்தில் இந்திரன் மால் பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம் வந்து எதிர்கொண்டனர். உபமன்யு முனிவரும் அவர் மாணாக்கர்களுக்கும் சுந்தரர் கயிலை சென்ற காட்சி வாய்த்தது.

வள்ளல் பெருமான், தேவர்களுக்கெல்லாம் அன்று கிடைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கயிலை சென்றதைக் காணும் பேறு தமக்கு வாய்த்திலதே என்று பாடுகிறார். ஆனைமா உடலோடு கயிலை செல்லும பெரும் பேறு சுந்தரருக்கு மட்டுமே வாய்த்தது. எத்துணை அரிய காட்சி அது. சிந்தைகளடங்கிய வள்ளல்பெருமான்,

வான் காண இந்திரனும்
மாலயனும் மாதவரும்
தான் காண இறையருளால்
தனித் தவள யானையின் மேல்
கோன் காண எழுந்தருளிக்
குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே
நாவலூர்ப் பெருந்தகையே (3252)

Koviloor Digital Library

என்று பாடி நெகிழ்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கிடைத்த சிவனருள் வேறு ஒருவருக்கும் வாய்க்காத மேன்மைமிக்கது. நட்புக்கு மேலான உறவு உலகில் வேறு இல்லை. திருவஞ்சைக்களத்தில் அன்று தாம் வாழ்ந்திருந்தால் சுந்தரர் கயிலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்திருக்க முடியும். அப்பேறு வாய்த்திலதே என்ற ஏக்கம் இப்பனுவலில் இழையோடுவதைக் காண முடிகிறது.

திருவாசகத்தை வள்ளல்பெருமான் தன் நெஞ்சு கலந்து பாடிய போது, அது தந்த இனிமையை 'வான் கலந்த மாணிக்கவாசக' என்று தொடங்கும் (3263) ஆளுடைய அடிகள் அருள்மாலையில் பதிவு செய்திருப்பதைக் திருவாசகத்தில் பற்றுக் கொண்டார் அனைவரும் அறிவர். ஆளுடைய நம்பிகள் அருள்மாலைகளிலும் இடம் பெற்றிருப்பது கண்டு மகிழ வேண்டியவை.

மூவர் தேவாரத்திற்குப் பொதுக் குறியீடு, தேவாரம் என்பதே. மிகப் பிற்காலத்தார் திருஞானசம்பந்தர் அருட்பனுவல்களைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசர் அருளிச் செயல்களைத் தேவாரம் என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இசைப்பாடல்களைத் திருப்பாட்டு என்றும் வேறு பிரித்து உரைத்ததாகத் தெரிகிறது.. இன்று அவ்வழக்கு இல்லை. அப்பகுப்பு நேரிதாகவும் அமைந்திலது. சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணிமாலையில், படிமாலா நின்பாட்டில் என்று குறித்ததும், வள்ளல்பெருமான் அருள்மாலையில் அமுதாம் உன் திருப்பாட்டை என்றும் குறித்ததும், பொதுக்குறியீடாகக் கொள்ளத்தக்கதாகும். நின் பனுவல், கவிதை என்பதே அவற்றின் பொருளாதல் வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பனுவல்களை வள்ளலார் இசையொடு ஓதி மகிழ்ந்த காலை, தான் பெற்ற அனுபவத்தை,

தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத் தினம்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நானறியேன்! நா ஒன்றோ
ஊன் படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்

Koviloor Digital Library

தான் படிக்கும்! அனுபவம்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே (3253)

வள்ளல்பெருமான் வழங்கிய தமிழ் பாமரர்க்கும் உள்வாங்கும் எளிவந்த தன்மையுடையது. ஒருமுறை படிக்கும்போதே பொருள் விளங்கக்கூடிய காதைகளுக்கு விரிவுரை வழங்குவது, அனுபவத்திற்கு இடையூறு செய்வதாகும். வாசகர்களுக்கு நானும் வழிவிட விரும்புகிறேன். தம் முன்னோரைப் பாராட்டிப் போற்ற ஒரு பெரிய மனம் வேண்டும். இத்தகு பதிவுகளில் வள்ளல் பெருமான் நம் நெஞ்சங்களில் பெருமிதத்துடன் அரியணையிட்டு அமர்ந்து கொள்கிறார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் கழறிற்றறிவார் என்ற பெயருடைய சேரமான்பெருமான் நாயனார். நாள்தோறும் அவர் நிகழ்த்தும் சிவபூசைக்கு மகிழும் தில்லையம்பலவன், தன் கால் சிலம்போசையை அவர் கேட்குமாறு வழங்குவார். தம் பூசையைச் சிவன் ஏற்றருளினான் எனச் சேரர்கோன் மனம் மகிழ்ந்து பூசையை நிறைவிப்பார். ஒரு நாள் சிவபூசை நிறைவில் சிலம்பொலி கேட்டக க்காலம் தாழ்ந்தது. சேரனார் மனம் நொந்து அரற்ற, சிறிது நேரத்திற்குப் பின் தில்லையம்பலவன் சிலம்போசை கேட்பித்தான். தாமதத்திற்கான காரணத்தைச் சேரனார் கோன் கேட்டபோது, சிவன்,

'மன்றினிடை நாங்கூத்தாடல் வந்து வணங்கி
வன்தொண்டன்
ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர்
பதிகம் பாடுதலால்
நின்று கேட்டு வரத் தாழ்ந்தோம்' (பெ.பு. 3796)

என அசரீரியாக உரைத்ததாகச் சேக்கிழார் குறித்தருளுகின்றார். இக்கால தாமதம் சேரமான், சுந்தரமூர்த்தி சுவாமிகளை அடுத்து நட்புப்பூண ஒரு வாய்ப்பாக அம்பலவன் நிகழ்த்திய ஆடலாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இசைப்பாடல்களில் தில்லையம்பலவனுக்குப் பெருவிருப்பமுண்டு என்பது இதனால் விளங்கக் காணலாம். சிவன் அவரிடம், 'நம்மைச் சொற்றமிழ் பாடுக' எனக் கேட்டுப் பெற்றவன்.

Koviloor Digital Library

மேற்குறித்த வரலாற்றை உளங்கொண்டு வள்ளல்பெருமான்,

இன்பு ஆட்டுத் தொழில் பொதுவில்
இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக்கு உவப்புறல்போல்
ஊர்பாட்டுக்கு உவந்திலர் என்று
என்பாட்டுக்கு இசைப்பினும் என்
இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக்கு இசைவதுகாண்
அரும்பாட்டுப் பெருந்தகையே (3254)

என, சுந்தரமூர்த்தி சுவாமிகள் பனுவல்களில் சிவன் கொண்டிருந்த அளப்பரிய இன்பத்தை நயமுறப் பதிவு செய்துள்ள பாடலின் பன்னிரண்டு அடிகளில் வள்ளல் பெருமான் சிவன் பாதமலர்களில் கொண்டிருந்த பேரீடுபாடு புலனாகிறது.

சாக்கிரத்திலிருந்து கீழ்நோக்கி செல்வது கீழாவத்தை, அதீதத்திலிருந்து மேல் நோக்குவது மேலாவத்தை. அதீதத்திலிருந்து காணுங்கால், துரியத்தில் அகனமாய் விளங்கும் பரசிவத்தைச் சகள வடிவில் தோழமை கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெரும் பேற்றை அருள்மாலையின் ஒன்பதாவதாக வள்ளல் பெருமான் பதிவு செய்கிறார். சிவனைத் தோழமை கொண்ட சுந்தரமூர்த்திகளை வணங்கி வரம்பெறத் தெய்வங்கள் பலவும் முந்துகின்றன. இந்நிலையில் நின்னை வழிபட்டு, நின் அருள்பெற விழையும் என் நிலைமை பற்றி நான் என்ன உரைக்க இயலும் என்று வள்ளல் பெருமான் தன்னிரக்கப்படப் பாடும் பாடலாக இப்பாடல் அமைகிறது.

பரம்பரமாம் துரியமெனும்
பதத்திருந்து பரம்பொருளை
உரம் பெறத் தோழமை கொண்ட
உன் பெருமை தனை மதித்து
வரம் பெற நற்றெய்வ மெலாம்
வந்திக்கும் என்றால் என்
தரம் பெற என் புகல்வேன் நான்
தனித்தலைமைப் பெருந்தகையே.

Koviloor Digital Library

சுந்தரரை வணங்கி வரம் பெறத் தெய்வங்கள் எல்லாம் முந்துகின்றன என்ற வள்ளல் பெருமானின் பதிவை நம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை. எது கருதி இப்பதிவை அமைத்தார் என்பது புதிராக உள்ளது.

சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் மாக்கதையின் மூன்றாவது சருக்கம் இலைமலிந்த சருக்கம் என வழங்கப்பெறும். இச்சருக்க நிறைவில் சேக்கிழார், ஆரூர் இறைவன், பரவை நாச்சியார் இல்லத்திற்குத் தன் நண்பர் சுந்தரர் பொருட்டாகத் தூது நடந்த அருமைப்பாட்டை வியந்து போற்றும் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

தீவகோன் விளைக்கு வாரோம்
செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசும்
கதிர்நிலவு இருள்கரல் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க
மனையிடை இருகால்செல்லத்
தூது கொண்டவராம் நம்மைத்
தொழும்பு கொண்டு உரிமை கொள்வார். (பெ.பு.972)

தம் அடியவர்கள் பொருட்டுச் சிவன் நிகழ்த்திய அளப்பரிய கருணை ஆடல்களுள் ஒன்று அவன், ஆரூரில் பரவையிடம் தூது சென்றது. இந்த அளப்பரிய ஆற்றலைப் பெற்றவர் சுந்தரமூர்த்தி தவிர வேறு ஒருவர் இல்லை என்று சாதிக்கிறார் வள்ளல் பெருமான்.

ஆளுடைய நம்பிகளின் அருண்மாலையை நிறைவாக்கும் வகையில் பத்தாவது பனுவலில் வள்ளல் பெருமான் மேற்குறித்த செய்திகள் பிணைந்த பாடல் ஒன்றை வழங்கியுள்ளார்.

'ஆரூர் நின்பெருமை
அயன்மாலும் அளப்பரிதே'

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியாக நீண்ட அண்ணாமலையான் அடிமுடிகளைப் பலகால் முயன்றும் திருமாலோ, பிரமனோ கண்டார்கள் இல்லை. அத்தகு, வேதங்களாலும் எட்ட மாட்டாத

Koviloor Digital Library

சிவன் திருவடிகள் சித்தவடமடத்தில் சுந்தரமூர்த்திகளுக்கு எளிதாய் வாய்த்தது. திருவாரூர் திருவீதிகளுக்கும் சிவன் திருவடி தோயும் பேறு வாய்த்தது. அவ்வாறு இருவர் காணாத் திருவடி சுந்தரமூர்த்திகளுக்கு எளிதாய்க் கிடைத்தமை பற்றியே ஆரூரர் பெருமை அயன் மற்றும் திருமாலாலும் அளவிடற்கரியது என்று வள்ளல் பெருமான் பதிவில் அமைக்கிறார்.

பேரூரும் பரவைமனைப்
பிணக்கற எம்பெருமானை
ஊரூரும் பலபுகல
ஓரிரவில் தூதனெனத்
தேரூரும் திருவாரூர்த்
தெருவு தொறும் நடப்பித்தாய்

என்ற தொடர்கள் சிந்தனைகள் பலவற்றை நம்முள் தோற்றுவிக்க வல்லன.

ஆளுடைய நம்பிகள் அருண்மாலை அல்லாது திருவருட்பாவில் சுந்தரமூர்த்திகள் அருள் வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட வேறு சில பாடல்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் முழுப்பாடல்கள் எட்டு, திருவருட்பாவில் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் திருமுறையுள் திருவொற்றியூர் குறித்த திருவருள் வழக்க விளக்கம் என்ற தலைப்பமைந்த பதிகத்தின் ஆறாம் பாட்டில், சுந்தரமூர்த்திகளுக்குச் சிவன் திருக்கச்சூர் வீதிகளில் சோறிரந்து கொண்டு வந்து ஊட்டி மகிழ்வித்த வரலாறு பேசப்பட்டுள்ளது. (829) சென்னை, செங்கற்பட்டு நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள் கோயில் என்ற ஊர் உள்ளது. அங்கிருந்து திருப்பெரும்புதூருக்குப் பிரியும் சாலையில் வடமேற்குத் திசையில் 3 கி.மீ. தூரத்தில் திருக்கச்சூர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகம் பெற்ற திருத்தலம் ஒன்று இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது. பண்டைக்காலத்தில் சிவாலயங்கள் பலவாறாக அமைந்திருந்தன. திருக்கச்சூர் சிவாலயம் 'ஆலக்கோயில்' என்று கூறப்படுகிறது. சிவன் ஆல மர நிழலில் அமர்ந்து அருள்பாலித்த தலம் என்று கருத இடமுண்டு. திருமால் ஆமை வடிவம் பூண்டு இத்தலத்துச் சிவனது அமுதம் கிடைக்க வேண்டி வழிபட்ட தலம் (கச்சபம் – ஆமை) இது

Koviloor Digital Library

என்பர். அது பற்றியே தலம் கச்சூர் என வழங்கலாயிற்று என்பது புராண வழக்கு. கச்சாலீசர் என்ற பெயரில் காஞ்சியிலும், சென்னையிலும், தனித்தனியே சிவாலயங்கள் உள்ளன. சுந்தரர் வரலாற்றுக்குப் பொருந்துமாறு இத்தலத்துச்சிவன் நாமம் 'விருந்திட்டநாதர்' என்று அமைந்துள்ளது. அம்மை திருநாமம் 'இருள்நீக்கித்தாயார்' என்பது, சோறு இரந்து சுந்தரருக்கு அமுதளித்த சிவன் 'விருந்திட்டநாதர்' என்ற திருநாமம் பூண்டு திருச்சுற்றில் தனிக்கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். நான்கு முகம் கொண்ட சண்டேசுவரார் சந்நிதி இத்தலச் சிறப்புக்களுள் ஒன்று. இத்தலத்திற்கு மேற்கே 1 கி.மீ. தொலைவில் 'மலைமருந்தீசர்' கோயில் உள்ளது. சிவன் பிச்சை ஏற்றுச் சுந்தரமூர்த்திகளுக்கு உணவிட்ட ஐதிகத்திருவிழா தற்போதும் மாசித் திங்களில் நடைபெற்று வருகிறது. திருக்குருகாவூரிலும் இவ்வாறே சிவன் சுந்தரமூர்த்திகளுக்கு உணவளித்த வரலாறு பேசப்படுகிறது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் மேற்கொண்ட தொண்டை நாட்டுத் தலயாத்திரையில் திருக்கழுக்குன்றம் வணங்கிப்பின் கச்சனூர் ஆலக்கோயில் வழிபடவருகிறார். உச்சிவேளை, வழிபாடு முடித்து திருக்கோயில் மதில்புறத்தில் பசியொடு வந்து அமர்ந்தார். உணவு சமைத்து இடும் பரிசனத்தார் அதுவரை கச்சனூர் வந்து சேரவில்லை. கச்சனூருக்குப் பக்கத்தில் கோயில் கொண்டிருந்த மலைமருந்தீசர் ஓர் அந்தணர் வடிவில் கச்சனூர் வந்து, கையில் ஒரு திருவோடு ஏந்தியவாறு சுந்தரரைக் கண்டு நீர் மிகவும் பசித்துள்ளீர். நான் 'போய் சோறு இரந்து வருகிறேன். சிறிது பொழுது இங்கேயே இரும்' என்று கூறி, கச்சனூர் இல்லங்கள் தோறும் சென்று சோறு இரந்து கொண்டு வந்து, சுந்தரருக்கு வழங்கி உண்ணச் செய்து, பின் மறைந்தருளினார். சுந்தரர் திகைத்து,

'பெருநாதச் சிலம்பணிசேவடி
வருந்தப் பெரும் பகற்கண்
உருநாடி எழுந்தருளிற்று
என்பொருட்டாம்' (பெ. பு. 3340)

என உருகி, 'முதுவாயோர்' என்றெடுத்துப் பதிகம் பாடினார்.

Koviloor Digital Library

'கொல்லிக் கௌவாணம்' என்ற பழம்பண்ணில் திருக்கச்சூரில் சுந்தரமூர்த்திகள் அருளிச்செய்த திருப்பதிகத்தின் முதற் பாடலில் இறைவா நீதான் இவ்வாறு தெருதொறும் வந்து பிச்சை ஏற்றவன் என்று இவ்வூர் மக்கள் பெரிதும் கவலை அடையமாட்டார்களோ என்று வருந்திய வருத்தம் பாடலில் இடம் பெற்றுள்ளது.

முதுவாய் ஓரி கதறமுதுகாட்டு
எரிகொண்டு ஆடல் முயல்வோனே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாள
கதுவாய் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவோ ஆமாறு இதுவோ கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே (7-11-1)

என்பது பதிகப்பாடல், நினைத்த மாத்திரத்தில் சோறு தருவித்து வழங்க வல்ல சிவன், சுந்தரர் பால் தான் கொண்ட அன்பினை வெளிப்படுத்தவும், சிவனுக்கும் - சிவனடியாருக்கும் அமுது படைத்த புண்ணியபேறு கச்சூர் வாழ் மக்களுக்கு அமையவும் வேண்டியே சிவன் இரந்திருத்தல் வேண்டும். இரந்து பெற்ற உணவைச் சுந்தரருக்கு வழங்கி உண்பித்ததோடு சிவன் தானும் அவரொடு அதனை உடன் உண்டான் என்று சேக்கிழார் பதிவு செய்துள்ளார். கருணை வெளிப்பாடுகளுள் ஒன்று இது எனத் தெரிகிறது.

மேற்குறித்த இந்த கருணைச் செய்கை வள்ளல் பெருமானை நெகிழ வைத்திருக்க வேண்டும். பிறர் பசித்திருக்கக் கண்டு பொறாத வள்ளலாரின் அருள்நெஞ்சம் பசித்தாருக்குச் சோறிட்டாரை எண்ணிய போது நிறைகிறது. சிவன் கருணை நினைந்து திருஒற்றியூர்ப் பதிகத்தில் இந்த கருணைச் செயலைப் பதிவு செய்து அவர் மகிழ்கிறார்.

பைச்சூர் அரவப்பட நடந்தான்
அயன் பற்பல நான்
எய்ச்சூர் தவம் செய்யினும் கிடையா
பதம் ஏய்ந்து மண்மேல்

Koviloor Digital Library

வைச்சூர் அரன் வன்தொண்டன்
சுந்தரன் என்னும் நம்வள்ளலுக்குக்
கச்சூரில் சோறுஇரந்து
ஊட்டினாரால் எம் கடவுளரே.

அடுத்து வள்ளல் பெருமானின் திருஒற்றியூர்ப் பதிகத்தில் சிவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஓலைகாட்டி ஆட்கொண்ட வரலாறு பதிவாகியிருப்பதைக் காண்கிறோம். சிவனே நீ அன்று ஓலைகாட்டிச் சுந்தரரை ஆட்கொண்டது போல் என்னை ஆட்கொள் என்று நான் வேண்டவில்லை. அன்று நீ அவரை என் அடிமை என உரைத்ததுபோல், என்னையும் இவன் என் தொண்டன் என்று மட்டும் அழைத்தால் போதும். நான் செய்து வரும் ஒன்றல்ல; பலப்பல பணிகளையும் சிறிதும் வெறுப்புக் கொள்ளாது, மனம் மகிழ்ந்து இன்னும் விரைவாக என் பணிகளை நான் செய்வேன். ஒரு சொல் கூற மாட்டாயா என்று வள்ளல் பெருமான் கசிந்துருகின்றார்.

மாலை ஒன்று தோற் சுந்தரபெருமான்
மணத்தில் சென்று வல்வழக்கிட்ட தெனவே
ஓலை ஒன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
உவந்து தொண்டனென்று உரைப்பிரேல் என்னை
வேலை ஒன்றல மிகப்பல எனினும்
வெறுப்பிலா துளம் வியந்துசெய்குவன்காண்
சோலை ஒன்றுசீர் ஒற்றலர் உடையீர்
தூய மால் விடை துவசத்தி னீரே (1182)

திருஒற்றியூரில் சிவன் பரவை - சுந்தரர் திருமணத்தை முன்னின்று நிகழ்த்திய அருளிப்பாட்டை - அத்தலத்தில் பாடாது, திருக்கச்சூரில் நிகழ்ந்த அருளிப்பாட்டை இங்கே பாடிப்பரவியது பெரிதும் சிந்திக்கத்தக்கது.

திருவருட்பா - மூன்றாம் திருமுறையுள் இடம் பெற்றிருக்கும் சிவநேசவெண்பா சிவனருள் பேசும் மிகச்சிறந்த பதிவுகளுள் ஒன்று. 102 நேரிசை வெண்பாக்கள் கொண்ட அரிய பகுதி இது. சிவநேச வெண்பாலில் ஒரு பாடலில் வடலூர் வள்ளல் பெருமான், ஆரூர்ப் பெருமான் பரவையார் இல்லத்திற்கு நள்ளிரவில் தூது நடந்த போது,

Koviloor Digital Library

அவன் திருவடி தோய்ந்த பரவையார் இல்லத்து வாயில் படிக்கற்களில் ஒன்றாக வடிவெடுக்கும் பேறு மாலவனுக்கு வாய்த்திலதே என்று பாடுகிறார்.

எம்பர வையோ மண்ணிடந் தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய் - வெம்பனையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப் பெயர்நீண்ட மால் (2011)

சிவன் திருவடி காண வேண்டி, பன்றியுருக் கொண்டு பூமியை அகழ்ந்து துன்புற்ற திருமாலுக்கு, பரவை இல்லத்துப் படியாய்க் கிடந்து சிவன் திருவடி காணும் வாய்ப்பு இல்லாது போயிற்றே என வள்ளலார் நயம்பட உரைக்கிறார்.

திருமணம் கொண்ட போதும் மணவாழ்வில் ஈடுபடாது வாழ்ந்திருந்தவர் வள்ளல் பெருமான். சிவனே நீ அன்று சுந்தரனார் திருமண நாளில் தடுத்து ஆட்கொண்டு அருளினீர். அது போல் என்னைத் தடுத்தாட் கொள்ள நீவிர் வந்திருக்க வேண்டாம். உம் கணத்தாருள் ஒருவரை அனுப்பி வைத்திருத்தல் கூடாதா? ஏன் நீ அதைச் செய்யாது போயினாய்? ஒரு மணத்தைத் தடுத்துப்பின் சுந்தரருக்கு திருமணத்தைக் கூட்டியவன் நீ. நீ மட்டும் அவ்வாறு நின் கணங்களுள் ஒன்றை அனுப்பித் தடுத்தாட் கொண்டிருந்தால் நானும் மேலும் ஒரு மணம் செய்து கொண்டிருப்பேன். எவ்வளவு அழகான பரிவு இது என்று நம் நெஞ்சம் மகிழ்கிறது.

முன்மணத்தில் சுந்தரரை முன்வலுவில் கொண்டதுபோல்
என் மணத்தில் நீ வந்திடாவிடினும் - நின்கணத்தில்
ஒன்றும் ஒருகணம் வந்து உற்றழைக்கில் செய்ததன்றி
இன்றும் ஒருமணம் செய்வேன். (2019)

திருவருட்பாவின் மூன்றாம் திருமுறையுள் இடம் பெற்றுள்ள 232 கட்டளைக் கலித்துறைப்பாக்களால் அமைந்த ஒரு சிற்றிலக்கிய வடிவம் திருவருள் முறையீடு என்பது. சைவப் பெருமிதம் பேசும் மிக நல்ல பதிவுகளுள் ஒன்று திருவருள் முறையீடு. இப்பகுதியில் இடம் பெற்றுள்ள

Koviloor Digital Library

133 ஆம் பாடலில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு வள்ளல் பெருமான் நன்றி செலுத்துகின்றார். அடியார் திறத்துச் சிவன் எத்தகைய அன்பு கொண்டவன் என்பதை அன்று உன்னைச் சுந்தரர் தூதாக நடக்கச் செய்திலரேல் நாங்கள் எவ்வாறு நின் கருணையை அறிய முடிந்திருக்கும். ஒரு வகையில் நின்னைத் தூதாக நடத்தியது சிவனடியார்களுள் சிலருக்கு வருத்தத்தைத் தந்துள்ளது உண்மையே. சிவனே இருந்த போதும், சுந்தரர் இதனைச் செய்திலரேல் நின் அருட்கருணை எத்தகையது என்பது எப்படி உலகுக்குத் தெரிய வந்திருக்கும்? அது குறித்து நான் சுந்தரமூர்த்திகளுக்கு நன்றி கூறும் கடமை உடையவனாக இருக்கின்றேன் என்கிறார் வள்ளலார்.

சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினும்
கடையவனேன் செய்யும் கைமா றறிந்திலன் கால்வருந்தி
நடையுற நின்னை பரவைதன் பாங்கர் நடத்தி அன்பர்
இடைவரும் உன்றன் இரக்கத்தைத்தான் வெளியிட்டதற்கே (2303)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றில், தலை வைத்து அவர் படுத்திருந்த சுட்ட செங்கற்களை எல்லாம் திருப்புகலூரில் பொன்னாக்கி வழங்கினார் சிவபெருமான். அக்காலை கவிபுனையும் ஆற்றல் பெற்ற புலவர்களை எல்லாம் அழைத்துச் சுந்தரர் அற்ப மனிதர்களை இனி நீர் பாடவேண்டா. புகலூர் இறைவன் புகழ் இனிப் பாடுங்கள். சிவனருள் இம்மைக்குச் சோறும் – கூறையும் தரும். மறுமை இன்பத்தையும் அது நல்கும். நம்பிக்கை ஊட்டிச் சுந்தரர் பாடிய பதிகப்பாடல் ஒன்று நம்மை நீளச் சிந்திக்க வைக்கிறது.

'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்பினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையுமே
ஏத்தலாம் இடர்கெடனுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயற வில்லையே' (7 -18-1)

Koviloor Digital Library

மேற்குறித்த பாடலில் உளம் நெகிழ்ந்த வள்ளல் பெருமான் சுந்தரர் காட்டிய நெறி நின்றுச் சிவனைப்பாடாது களவாளார்கள் பலர். பொருளை வைத்துக்கொண்டே இல்லை என்று உரைக்கும் களவாளர்களை ஏன் பாடித் துன்புறுகின்றனர் என வினவுகிறார்.

'வில்லைப் பொன்னாக் கரம் கொண்டோய்
வன்தொண்டர் விரும்புறச் செங்
கல்லைப் பொன்னாக்கிக் கொடுத்தோய்
நின் பாதங் கருத்தில் வையார்
புல்லைப் பொன்னாக் கொளும் புல்லர்கள்
பாற்சென்று பொன்னளிக்க
வல்லைப் பொன்னார் புய என்பர்
இஃது என்சொல் வாணர்களே' (2316)

தேவாரப்பனுவல்கள் முழுவதும் தேடினும், தம்மை ஆதரித்த செல்வர்கள் சிலர் இருந்தபோதும், மூவர் பெருமக்கள், அவர்களைச் சிறப்பித்துத் தனியே ஒரு பாடல் பாடியதாகக் குறிப்பில்லை. ஒரு வேளை அன்னார் செல்வர்களைப் பாராட்ட நினைத்தாலும் சிவன் புகழ்ப்பாக்களில் அவர்கள் பெயரை நினைவு கூர்ந்தனரே அன்றி வெற்றுப் புகழ்ச்சியில் ஈடுபட்டிலர் என்பது கருதத்தக்கது.

மேற்குறித்த அதே திருவருள் முறையீட்டுப் பகுதியில் ஒரு பாடலில் (2322) சித்த வடமடத்தில் சிவன் சுந்தரருக்கு அவர் வேண்டாத போதும் பலமுறை திருவடி சூட்டிய கருணையை வியந்து போற்றுகிறார். நின் திருவடிக்குச் சுந்தரர் திருமுடி மீது அப்படி என்ன ஆசை வந்தது என்று வினவுகிறார். நிறைவாக, நான்காம் திருமுறையில் இடம் பெற்றுள்ள பொறுத்தனித்திருவெண்பா என்ற (13) மூன்று பாடல் கொண்ட பகுதியில், இரண்டாம் பாடலில் சுந்தரர் பற்றிய குறிப்பொன்று காணப்படுகிறது. ஒரு முறை, ஆரூர் பெருமானைப் பரவை பால் தூது நடத்தியமை குறித்துச் சுந்தரருக்கும், ஏயர்கோன் கலிக்காமருக்கும் இடையே கருத்து வேறுபாடு வளர்ந்து அது பகையாக முற்றியது. அக்காலை சுந்தரர் தம் பிழை உணர்ந்து வேண்ட ஆரூர்ப் பெருமானே இருவருக்குமிடையே நிலவிய பகை நீக்கிச் சந்துசெய்வித்தருளினார். இதனை வள்ளல் பெருமானார்,

Koviloor Digital Library

'சங்கரா முக்கட் சயம்புவே தாழ்சடைமேல்
பொங்காரத் திங்கள் பொலிந்தானே வெங்கார
வாய்நின்று பிள்ளை வரப்பாடும் வன்தொண்டர்க்கு
ஆய் நின்று சந்துரைத்த தார்' (2717)

என அழகுறப் பதிவு செய்கிறார். அடியவர்கள் தம்முள் கருத்து வேறுபாடு கொண்டு பகைத்திடாது - நட்புடன் வாழ வேண்டும் என்பதிலும் சிவன் கருத்துடையவன் என்பது குறிப்பு.

இவ்வாறு ஆளுடைய நம்பிகளைப் போற்றி வள்ளல் பெருமான் பாடிய பதிவுகள் பலவும் திருவருட்பாவில் இடம் பெற்றுள்ளன. வள்ளலார் நோக்கில் ஆளுடைய நம்பிகள் பேரிடம் பெற்று நிற்கிறார். சுந்தரரும், சிவனும் கொண்டிருந்த நட்புத் தடமே வள்ளலாரால் பெரிதெடுத்துப் பேசப்பட்டுள்ளது. வள்ளல் பெருமான் தன் முன்னோர்பால் கொண்டிருந்த அளவற்ற ஈடுபாட்டை விளக்கி இக்கட்டுரை நிறைவு பெறுகிறது.

Koviloor Digital Library

4. வள்ளலார் நோக்கில் ஆளுடையடிகள்

ஒளிநெறிப்பிழம்பு தவத்திரு. ஊரன் அடிகள், வடலூர்.

திருவாசகம் வள்ளலாரின் வழிபடுநூல்

வள்ளலார் ஒன்பதாம் ஆண்டில் முருகப்பெருமானால் ஆடகொள்ளப் பெற்றார். பன்னிரண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார். அவ்விளம்பருவத்திலேயே,

தனக்கென ஒரு வழிபடு கடவுள் (உபாசனாமூர்த்தி)
தனக்கென ஒரு வழிபடு குரு (உபாசனா குரு)
தனக்கென ஒரு வழிபடு நூல் (உபாசனா நூல்)

என்று ஒரு அருமையான அமைப்பை வள்ளலார் ஏற்படுத்திக் கொண்டார்.

வள்ளலார் கொண்ட வழிபடு கடவுள் யார்? வழிபடு குரு யார்? வழிபடு நூல் யாது?

வழிபடு கடவுள் – முருகன்
வழிபடு குரு – ஞானசம்பந்தர்
வழிபடு நூல் – திருவாசகம்

இம்மூன்றும் வள்ளலாரை உருவாக்கின, ஆளாக்கின, பின்னாளில் வள்ளற்பெருமான் பெற்ற பெரும் பேறுகளுக்கெல்லாம் இம்மூன்றுமே அடிநாள் முயற்சிகளாய் அமைந்தன.

வழிபடு குருவாக ஞானசம்பந்தரைக் கொண்டவர் அவரது தேவாரத்தை வழிபடு நூலாகக் கொள்ளாமல், மாணிக்கவாசகரின் திருவாசகத்தை வழிபடு நூலாகக் கொண்டதேன் என்ற ஐயம் பலருக்கு எழலாம். தோத்திரத் திறத்தில் மூவர் தேவாரம் பொது, மணிவாசகரின் திருவாசகம் சிறப்பு. சம்பந்தர் மட்டுமின்றி மற்ற இருவரான அப்பரும் சுந்தரும்கூடத் தேவாரம் பாடியுள்ளனர். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் பல்வேறு வகையில் தனித்தன்மை வாய்ந்தது.

Koviloor Digital Library

தேவாரத்தில் பிழிசாறு பக்தி.

திருவாசகத்தில் பிழிசாறு உருக்கம்.

திருஅருட்பாவின் பிழிசாறு இரக்கம்.

"திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்ற ஒரு பழமொழியே ஏற்பட்டுவிட்டது. "தோத்திரத்திற்குத் திருவாசகம்" "சாத்திரத்திற்குத் திருமந்திரம்" என்றும் ஒரு பழமொழி ஏற்பட்டுவிட்டது.

தேவாரம் தமிழ்வேதம் என்றால் திருவாசகம் தமிழ் உபநிடதம். இப்படி இன்னும் பற்பல நுண்ணிய வேறுபாடுகள் உண்டு. மாணிக்கவாசகரும் வள்ளலாரும் என்ற எமது நூலில் அவற்றையெல்லாம் விரிவாகக் காணலாம்.

தேவாரத்தின் பிழிசாறு பக்தி என்றோம். பக்தி என்பது கடவுள் பக்தி. திருவாசகத்தின் பிழிசாறாகிய உருக்கம் என்பது ஆன்ம உருக்கம் (தன் உருக்கம்). திருவருட்பாவின் பிழிசாறாகிய இரக்கம் என்பது உயிர் இரக்கம்; எல்லா உயிர்களிடத்தும் இரக்கங் கொள்ளல்; ஜீவகாருண்யம்; ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை.

பக்தி இயக்கத் தலைவர் சம்பந்தரையும், ஆன்ம உருக்க நூல் திருவாசகத்தையும் பற்றிக் கொண்ட (பிடித்துக்கொண்ட) வள்ளலார், உயிர் இரக்கமாகிய சீவகாருண்யத்தை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை காண்பவரானார். பரப்புவரானார்.

தேவாரம் - திருவாசகம் - திருவருட்பா என்ற வரிசையில் இடையில் நிற்பது திருவாசகம். திருவருட்பாவுக்கு முன்னோடி திருவாசகம்.

ஆதலாற்றான் திருவாசகம் வள்ளற்பெருமானது வழிபடு நூலாக அமைந்தது.

திருவாசகம் வள்ளலாரின் வழிகாட்டி நூல்களுள் ஒன்று

வள்ளலார் கண்ட பிரஸ்தானத் திரயத்துள் ஒன்று

வேதாந்த உலகில் 'பிரஸ்தானத்திரயம்' என்றொரு பெயர் வழங்குவதைப் பலரும் அறிவர். பிரதானமான(முக்கியமான) மூன்று என்பது அதன் பொருள். உபநிடதங்கள், பிரம்மசூத்திரம், பகவத்கீதை

Koviloor Digital Library

ஆகிய மூன்றுமே வேதாந்த உலகில் பிரஸ்தானத்திரயம் என வழங்கப் பெறுபவை. சங்கரர், இராமானுஜர், மத்வர் ஆகிய மூவருமே இம்மூன்றுக்கும் பாஷ்யம் (வியாக்கியானம் - பேருரை) இயற்றியுள்ளனர்.

தமிழ் உலகில் (சைவ உலகில்) வள்ளலாரும் இப்படி ஒரு பிரஸ்தானத் திரயத்தைக் கண்டார். வள்ளலார் கண்ட பிரஸ்தானத்திரயம் 1. திருக்குறள், 2. திருமந்திரம், 3. திருவாசகம் ஆகிய மூன்றுமாம்.

திருக்குறள் வள்ளலாரால் வகுப்பு நடத்தப் பெற்ற நூல். திருவருட்பாவில் எடுத்தாளப் பெற்ற நூல். ஏழு குறட்பாக்களை அப்படியே முழு முழுக் குறட்பாக்களாக வள்ளலார் எடுத்தாண்டுள்ளார். குறட்டொடர்களும் குறட்கருத்துக்களும் எடுத்தாளப் பெற்ற இடங்கள் மிகப்பல.

திருமந்திரம் வள்ளலாருக்கு இறைவனாலேயே உபதேசிக்கப் பெற்ற நூல். இந்த மார்க்கத்தின் (சன்மார்க்கத்தின்) உண்மை திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும் என்று வள்ளற்பெருமானது உபதேசக் குறிப்புகளில் காணப்பெறுகிறது.

திருவாசகம் வள்ளலாரின் வழிபடு நூல். வழிகாட்டி நூல், வாழ்க்கை நூல், அனுபவ நூல்.

தோத்திரத்துக்குத் திருவாசகம், சாத்திரத்திரத்திற்கு திருமந்திரம் என்பது வள்ளலார் கொள்கை. இதை வள்ளற்பெருமான் அடிக்கடிச் சொல்லுவார்.

> திருக்குறள், நீதி(அற)நூல்களுள் சிறந்தது, தலையானது.
> திருமந்திரம், சாத்திரநூல்களுள் சிறந்தது, தலையானது.
> திருவாசகம், தோத்திரநூல்களுள் சிறந்தது, தலையானது.

> அறத்துக்கு திருக்குறள்,
> சாத்திரத்துக்குத் திருமந்திரம்,
> தோத்திரத்துக்குத் திருவாசகம்

என்று இம்மூன்று நூல்களையும் வழிகாட்டி நூல்களாக வள்ளலார் கொண்டார். திருவாசகம் வழிகாட்டி நூலோடு வழிபடு நூலும் ஆயிற்று.

Koviloor Digital Library

திருவுடைய இம்மூன்று நூல்களும் வள்ளலாரைத் திருவுடையராக்கின. இம்மூன்றின் பிழிசாரமாகவே வள்ளலார் திருவருட்பாவை அருளினார். சீவகாருண்யச் சர்க்கரையும் கலந்தார்.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு மூலமும் முதலும் கருவும் ஆன பல பொருள்கள் திருக்குறள், திருமந்திரம், திருவாசகம் ஆகிய மூன்றிலும் உண்டு.

திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருவருட்பா ஆகிய நான்கும் நமது நால்வேதங்களாம்.

வள்ளலாருக்குத் தமிழ்ப் பிரஸ்தானத்திரயங்கள் மூன்று. அவற்றோடு திருவருட்பாவையும் சேர்த்து நமக்குத் தமிழ் வேதங்கள் நான்கு.

வள்ளலார் திருவாசகத்தில் ஊரம் வாய்ந்தவர்

கந்தகோட்ட வழிபாட்டுக் காலத்திலேயே, ஒன்பதாம் ஆண்டளவிலேயே வள்ளலார் கவிபாடும் ஆற்றலைப் பெற்றுவிட்டார். பன்னிரண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கிய வள்ளலார் சென்னையிலிருந்து திருஒற்றியூருக்குச் சென்று வழிபடத் தொடங்கினார். ஒற்றியப்பரின் மீதும் வடிவுடையம்மையின் மீதும் பற்பல பாமாலைகளைப் பாடிப் பரவினார். அவ்வாறு சொந்தமாகப் பாடி வழிபடும் காலத்தில் ஒற்றியப்பர் சந்நிதியில் திருவாசகப் பாசுரங்களையும் பாடி வழிபடுவதுண்டாம்.

ஒற்றியூரில் வள்ளலார் திருவாசகம் பாடி வழிபட்ட அனுபவத்தை பூசை அட்டாவதானம் கலியாணசுந்தர முதலியார் (பிற்காலத்தில் யதீந்திரர்) சொல்லக் கேட்ட அவருடைய மாணவர் மணி. திருநாவுக்கரசு முதலியார் பின்வருமாறு எழுதுகிறார்.

"நம் இராமலிங்கம் பெரும்பான்மையும் திருவாசகத்திலே ஊரம் வாய்ந்தவர் என்று என் ஆசிரியர் கூறுவர். அவர் பல காலங்களிலும் தியாகப் பெருமான் சந்நிதியிலேயே நின்று, கீழ்வரும் தித்திக்கும் திருவாசகத்தைத் தாம் பாடிக் கானமழை பொழிந்து, மயிர்முனை நிறுத்தி, நாத்தழுதழுத்துச் சோர்ந்துவிடுவது வழக்கம் என்பர்."

Koviloor Digital Library

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி வாயே.

வாழாப்பத்து-1

இத்திருப்பாட்டிலும் 'ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன் ஆண்ட நீ அருளிலை ஆனால் வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' என்றும் உயிரை உருக்கும் இனிய அடிகளை அவர் கூறும்பொழுது கண்களில் உவகைக் கண்ணீர் ஊற்றெடுத் தொழுகுமாமம்.

இராமலிங்க அடிகள் திருக்கோயில் வழிபாடு.
சித்தாந்தம், மலர் 1, இதழ் 6 (1928)

வள்ளலார் திருவாசகத்தில் ஓரம் வாய்ந்தவர் என்று சமகாலச் சான்றோராகிய பூவை அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

ஓரம் என்பதன் பொருள் என்ன?

ஓரம் – பட்ச பாதம்; பாரபட்சம்; ஒருதலைப்பட்சம்; ஒரு புடைச்சார்பு; ஓரவஞ்சனை; Partiality.

வள்ளலார் ஓரம் வாய்ந்தவராக இருக்கலாமோ? வள்ளலாருக்குப் பட்சபாதம் இருக்கலாமோ? பாரபட்சம் இருக்கலாமோ? 'பார்சியாலிடி' இருக்கலாமோ? இருந்தது. எதில்? திருவாசகத்தில், ஏன்? திருவாசகம் அப்படிப்பட்டது. திருவாசகம் ஏனைய நூல்கள் போன்றதன்று. மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல இறைவனே கேட்டு எழுதிக் கொண்டது. வள்ளலார் போன்றவர்கள் ஓரங்கொள்ளுமளவுக்கு உயர்ந்தது. "மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம்" என்ற இலக்கணக் கொத்துச் சுவாமிநாத தேசிகர் கூறியிருப்பது உண்மையிலும் உண்மை.

Koviloor Digital Library

மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது போன்று திருவாசகமும் சிவமே. திருவாசகத்தின் பொருளைக் கேட்டபோது மாணிக்கவாசகர் இதன் பொருள் சிவனே என்று நடராசப் பெருமானைத்தான் சுட்டிக்காட்டினார். திருவாசகப் பூஜை என்றொரு பூஜை உண்டு. சிவபூஜைக்குச் சமமானது அது. சிவத்தைப் பூசிப்பது சிவபூசை. திருவாசகத்தைப் பூசிப்பது திருவாசக பூசை. திருவாசகத்தைப் பூசை என்பது போல வேறு திருமுறைகளுக்குப் பூசை சொல்லப் பெறுவதில்லை. செய்யப் பெறுவதில்லை. திருவாசகத்தின் சிறப்பு அளவற்றது. அதனால்தான் வள்ளலார் அதனை வழிபடு நூலகக் கொண்டார். அதில் ஊறம் வாய்ந்தவராக இருந்தார்.

பள்ளியறையில் திருவாசகம்
திருவாசகத் தேனிலவு

பிள்ளைப் பருவத்திலேயே மூவாசைகளையும் முற்றத் துறந்து துறவொழுக்கம் பூண்டொழுகிய வள்ளற்பெருமானுக்குத் திருமண வாழ்வில் சிறிதும் இச்சையில்லை. உற்றார் உறவினர் வற்புறுத்தித் திருமணம் செய்து வைத்தனர். சொந்தத் தமக்கையார் உண்ணாமுலையம்மையாரின் மகள் தனம்மாளுக்கும், பெருமானுக்கும் திருமணம் நிகழ்ந்தது. பெருமான் தொட்டுத் தாலி கட்டினாரே யன்றி இல்லற வாழ்வில் ஈடுபடவில்லை.

பால் உண்ணும் குழவிப் பருவத்திலேயே தமக்கு இல்லற வாழ்வில் இச்சையில்லையென்று வள்ளற்பெருமானே திருவருட்பாப் பாடலொன்றிற் கூறியுள்ளார்.

இன்னுமிங் கெனை மடந்தையர் முயக்கில்
எய்துவித் திடுதியேல் அதுவுன்
தன்னுளப் புணர்ப்பின் னெக்கொரு சிறிதும்
சம்மதம் அன்று நான் இதனைப்
பன்னுவ தென்னே இதில் அரு வருப்புப்
பால்உ ணும் காலையே உளதால்
மன்னும்அம் பலத்தே நடம்புரி வோய்என்
மதிப்பெலாம் திருவடி மலர்க்கே. - 3392

Koviloor Digital Library

தொட்டுத் தாலி அணிவித்ததே தவிர கலந்து இல்லறம் நடத்தவில்லை என்பதை,

முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ
தெரிந்திலேன் மோகமே யின்றித்
தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்
ஒருத்தியைக் கைத்தொடச் சார்ந்தேன்
குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக்
கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்த தோறும்உள் உடைந்தேன்
பகர்வதென் எந்தைநீ அறிவாய். - 3452

என்ற பாடலிற் கூறுகிறார். 'தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்' 'மற்று இது குறித்தே பனித்தனன்' 'நினைத்த தோறும் உள் உடைந்தேன்' என்றதைக் காண்க.

திருமண நாளில் முதல் இரவு வள்ளலாரையும் தனம்மாளையும் பள்ளியறைக்கு அனுப்பினர். பள்ளியறை புக்க வள்ளலார் கையில் திருவாசக நூலோடு புகுந்தார். உள்ளே சென்றதும் விளக்கைத் தூண்டி விட்டு அருகில் அமர்ந்து, மணப்பெண் தனம்மாளையும் எதிரே அமர்த்தித் திருவாசகம் முழுமையும் பாராயணம் செய்யத் தொடங்கினார். விளக்கைத் தூண்டிய பொழுதே தனம்மாளின் அறிவும் தூண்டப் பெற்றது. பெருமான் கண்ணீர்வரத் திருவாசகத்தை ஓத ஓத, அம்மையாரும கரணமெல்லாம் உருகக் கண்ணீர் ததும்பக் கேட்டுக் கொண்டிருந்தார். விடிய விடியத் திருவாசக முற்றோதல் நிகழ்ந்தது. திருவாசக முற்றோதலோடு முதலிரவு முடிந்தது. அதுவே அம்மையாருக்கு உபதேசமும் ஆயிற்று. வள்ளலாரின் இல்லறம் இவ்வளவே, இதன்பின் வள்ளலார் சென்னை வாழ்வை நீத்துச் சிதம்பரம் பக்கம் செல்லும்வரை ஒரே வீட்டில் இருவரும் தனித்தனியே வாழ்ந்தனர்.

வள்ளலார் திருவாசகத்திற்கே வாழ்க்கைப்பட்டவர். திருவாசகத்தோடு தேனிலவு கொண்டவர்.

எத்தனை மாப்பிள்ளைகள் முதல் இரவில் திருவாசகத்தைப் படித்திருப்பார்கள்? வள்ளலாரைத் தவிர வேறு யாரும் இலர். திருமண

Koviloor Digital Library

நாளில் முதல் இரவில் பள்ளியறையில் விடிய விடியத் திருவாசகத்தை ஓதிய ஒருவரே வள்ளலார். அதனால்தான் வள்ளலார் திருவாசகத்திற்கே வாழ்க்கைப்பட்டவர். திருவாசகத்தோடு தேனிலவு கொண்டவர் என்று கூறினோம்.

வள்ளலார் பாடிய ஆளுடைய அடிகள் அருண்மாலை

சமயகுரவர் நால்வர்மீது பெரிதும் ஈடுபாடு கொண்ட வள்ளலார் நால்வர் மீதும் நான்கு அருண் மாலைகளைப் பாடியுள்ளார்.

சம்பந்தர் மீது பாடியது ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை
அப்பர் மீது பாடிய்து ஆளுடைய அரசுகள் அருண்மாலை
சுந்தரர் மீது பாடியது ஆளுடைய நம்பிகள் அருண்மாலை
மாணிக்கவாசகர் மீது பாடியது ஆளுடைய அடிகள் அருண்மாலை.

இந்நான்கு மாலைகளும் 1866 இறுதியில் பாடப்பெற்றவை. 1867 – இல் வெளிவந்த திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளின் முதற்பதிப்பில் இந்நான்கும் நாலாந் திருமுறையின் ஈற்றில் இடம் பெற்றுள்ளன. கால வரிசைப்படி அடைவு செய்யப்பெற்ற நம்முடைய வரலாற்றுமுறைப் பதிப்பில் இந்நான்கு மாலைகளையும் நாம் ஐந்தாம் திருமுறையின் ஈற்றில் வைத்துள்ளோம். திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகள் கந்தகோட்ட முருகன் தெய்வமணி மாலையில் தொடங்கி, நால்வர் அருள்மாலையுடன் நிறைவு பெறுகின்றன.

இவற்றைப் பாடுகின்ற காலத்தில் வள்ளற்பெருமான் சன்மார்க்க சங்கத்தைத் தொடங்கி விட்டார் (1865). 1867 -இல் சத்திய தருமச்சாலையைத் தொடங்கியிருக்கிறார். சங்கம் தொடங்கிய பின்பும், சாலை தொடங்குவதற்கு முன்பும், இடைப்பட்ட காலத்தில்(1866) இந்நான்கு மாலைகளும் பாடியருளப் பெற்றன.

ஒவ்வொரு மாலையும் பத்துப் பத்துப் பாடல்கள். சம்பந்தருக்கு ஒரு பாடல் மிகுதி. வேறு சமயத்தில் பாடிய அப்பாடல் பொருத்தம் நோக்கிச் சம்பந்தர் மாலையுடன் பதினோராவது பாடலாகத் தொழுவூர் வேலாயுத முதலியாரால் சேர்க்கப் பெற்றது.

Koviloor Digital Library

இந்நான்கு மாலைகள் தவிரத் திருவருட்பாவில் முதல் ஐந்து திருமுறைகளில் ஆங்காங்கே, திருவருள் வழக்க விளக்கம், திருவடிப்புகழ்ச்சி, விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், திருவருள் முறையீடு ஆகியவற்றில் நால்வரைப் போற்றிப் பாடும் பாடல்கள் உள்ளன. சில இடங்களில் அவை ஒரு வரிசையில் தொடர்ச்சியாக இடம் பெற்றுள்ளன.

மாணிக்கவாசகர் மீது பாடிய ஆளுடைய அடிகள் அருள்மாலையை ஒவ்வொரு பாடலாக இனிக் காண்போம்.

திருவாசக அனுபவம் வேண்டல்

திருவாசக அனுபவத்தை நான் அனுபவிக்க அருள வேண்டும் என்று முதற் பாடலிலேயே மாணிக்கவாசகரை வேண்டுகிறார்.

தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே. -1(3257)

திருவாசகத்தைத் தமிழ் மாமறை என்று இப்பாடலிற் கூறுவதைக் காண்க.

நீ கலந்த தனிஉருவெளி

மாணிக்க வாசகர் தில்லைச் சிதம்பரத்தில் நடராச சந்நிதியில் நடராசரோடு கலந்து மறைந்தார், ஐக்கியமானார். சிதம்பரம் வெளி. மாணிக்கவாசகர் வெளியிற் கலந்தார். வாதவூர் மலையைச் சுத்த வெளியாக்கி ஆண்டு கொண்ட என்ற மகாதேவ மாலை (2122) யும் இங்கு கருதத்தக்கது.

கருவெளிக்குட் புறனாகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே. -2(3258)

Koviloor Digital Library

அன்புருவம் அருளுருவம் இன்புருவம்

மாணிக்கவாசகர் முதலில் அன்புருவம் பெற்று அதன்பின் அருளுருவம் அடைந்து பின்பு இன்புருவம் ஆயினார் என்பதை மூன்றாம் பாடலிற் கூறுகின்றார்.

மண்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர் இறையே -3(3259)

அன்புருவம் அருளுருவம் இன்புருவம் என்ற வரிசையிற் கூறுவதே படிமுறையைக் காட்டுகிறது. அன்பு உறின் அருள் உறும். அருள் உறின் இன்பு உறும். அன்புருவம் பெற்றால் அருளுருவம் பெறலாம். அருளுருவம் பெற்றால் இன்புருவம் பெறலாம்.

தமது வழிபடு குருவாகிய ஞானசம்பந்தப் பெருமான், உயிர் அனுபவம், அருள் அனுபவம், சிவ அனுபவம் எனும் மூன்று அனுபவங்களைத் தமக்கு உபதேசித் தருளியதாக ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையிற் பாடியுள்ளார் (3227 -3231).

பின்னாளில் சமரச சுத்த சன்மார்க்க அனுபவத்தைக் குரியனவாக, சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என மூன்று தேகங்களைக் கூறியுள்ளார். இம்மூன்று தேகங்களையும் வள்ளற்பெருமான் பெற்றார்.

அனுபவம், உருவம், தேகம் ஆகிய மூன்றும் மும்மூன்றாக உள்ளது.

மூன்று அனுபவங்கள்

1. உயிர் அனுபவம், 2. அருள் அனுபவம், 3. சிவ அனுபவம்

மூன்று உருவங்கள்

1. அன்புருவம், 2. அருளுருவம், 3. இன்புருவம்.

Koviloor Digital Library

மூன்று உருவங்கள்

1. சுத்ததேகம், 2. பிரணவதேகம், 3. ஞானதேகம்.

அனுபவங்கள் மூன்றும் ஞானசம்பந்தர் உணர்த்தியவை.

உருவங்கள் மூன்றும் மாணிக்கவாசகர் பெற்றவை.

தேகங்கள் மூன்றும் வள்ளற்பெருமான் பெற்றவை.

இவற்றையெல்லாம் ஒரு பட்டியலாக்கினால்,

	அனுபவம் 3	உருவம் 3	தேகம் 3
1.	உயிர் அனுபவம்	அன்புருவம்	சுத்த தேகம்
2.	அருள் அனுபவம்	அருளுருவம்	பிரணவதேகம்
3.	சிவ அனுபவம்	இன்புருவம்	ஞானதேகம்

என அமையும்.

உயிரனுபவம், அன்புருவம், சுத்ததேகம் ஆகிய மூன்றும் சமம்.

அருளனுபவம்,அருளுருவம்,பிரணவதேகம் ஆகிய மூன்றும் சமம்.

சிவ அனுபவம், இன்புருவம், ஞானதேகம் ஆகிய மூன்றும் சமம்.

முதலில் உயிரனுபத்தைப் பெற வேண்டும். அதன்பின் அவ்வுயிர் அனுபவத்தால் அருளனுபவத்தைப் பெற வேண்டும். அதன்பின் அவ்வருளனுபவத்தால் சிவ அனுபவத்தைப் பெற வேண்டும்.

முதலில் அன்புருவம் பெற வேண்டும். அதன்பின் அவ்வன்புருவத்தால் அருளுருவம் பெற வேண்டும். அதன்பின் அவ்வருளுருவத்தால் இன்புருவம் பெறவேண்டும்.

முதலில் சுத்ததேகத்தைப் பெறவேண்டும். அதன்பின் அச் சுத்ததேகத்தால் பிரணவ தேகத்தைப் பெறவேண்டும். அதன்பின் அப்பிரணவ தேகத்தால் ஞானதேகத்தைப் பெறவேண்டும்.

திருவண்டப்பகுதி எனும் திருஅகவல்

திருவாசகத்தில் மூன்றாவது பதிகமாகத் திகழ்வது திருவண்டப் பகுதி. 'அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்று தொடங்குவதால்

Koviloor Digital Library

திருஅண்டப்பகுதி எனப் பெயர் பெற்றது. அனேக மெய்ஞ்ஞான விஞ்ஞான நுட்பங்களை விளக்குவது இப்பகுதி. வள்ளலாருக்கு இப்பகுதியில் மிகவும் ஈடுபாடு உண்டு. திருஅண்டப்பகுதியில் 'என்னையும் இருப்பதாக்கினன்' என்று மாணிக்கவாசகர் கூறுவதில் வள்ளலார் ஒரு பெரிய உண்மையைக் காண்கிறார். வியந்து வியந்து அப்பகுதியை விதந்தோதி அப்பகுதியின் இரு என்ற தனி அகவலின் எண்ணம் என்ன? அதனை எனக்கு இயம்பு என்று மாணிக்கவாசகரையே கேட்கிறார்.

உருஅண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம் எனக் கியம்புதியே. -4(3260)

ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே

தில்லைச்சிற்றம்பலத்தில் நடராசப் பெருமான் ஆடி அருளுகின்றார். அவருடைய ஆடுகின்ற சேவடிக்கீழ், தூக்கிய திருவடியின்கீழ், மாணிக்கவாசகர் ஆடிக் கொண்டிருப்பதை வள்ளற்பெருமான் காண்கிறார். ஆடுகின்ற சேவடிக் கீழ் ஆடுகின்ற ஆரமுதே என்று மாணிக்கவாசகரை விளிக்கிறார். ஆடுகின்ற சேவடி - நடராசப் பெருமானின் திருவடி, ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுது - மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகர் தில்லையில் நடராசரோடு ஐக்கியமானவர். நடராசர் எங்கெல்லாம் இருக்கிறாரோ அங்கெல்லாம் அவருடைய தூக்கிய திருவடியின்கீழ் மாணிக்கவாசகர் இருக்கிறார்.

நடராசப் பெருமான் வலக்காலை ஊன்றி இடக்காலை உயர்த்தி ஆடுகின்றார். உயர்த்திய திருவடியைத் 'தூக்கிய திருவடி' என்றும் 'குஞ்சித பாதம்' என்றும் கூறுவதுண்டு. நடராசருக்கு இடப்புறத்தில் சிவகாமியம்மையார் நிற்க, வலப்புறம் தூக்கிய திருவடியின்கீழ், குஞ்சிதபாதத்தின் கீழ் மாணிக்கவாசகர் நிற்கிறார். நடராசர் சிலை உள்ள இடங்களிலெல்லாம் இக்காட்சியைக் காணலாம். இதனை 'மணிவாசகப் பேறு' என்பர்.

Koviloor Digital Library

நடராசர் எங்கெல்லாம் இருக்கிறாரோ அங்கெல்லாம் அவரது தூக்கிய திருவடியின்கீழ் மாணிக்கவாசகர் நிற்பதைக் காணலாம். இது மணிவாசகர் பெற்ற பேறு. இதற்கு 'மணிவாசகப்பேறு' என்றே பேர் அமைந்துவிட்டது.

சிவன் கோயில்களில் அறுபத்து மூவர் சந்நிதியில் அறுபத்து மூவர் வரிசையில் தேவார மூவரும் உள்ளனர். நால்வர் சந்நிதியிலும் தேவார மூவர் உள்ளனர். மாணிக்கவாசகர் நால்வர் சந்நிதியிலும் உள்ளார். நடராசரோடும் உள்ளார். இது இவர் பெற்ற தனிப்பேறு. அதுதான் மணிவாசகப் பேறு என்று விதந்தோதப் பெறுவது.

நடராசப் பெருமானின் ஆடுகின்ற சேவடிக்கீழ், ஆடுகின்ற ஆரமுதாக மாணிக்கவாசகர் திகழ்வதைக் கண்ட வள்ளலார்

தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே. -5(3261)

என்று பாடுகின்றார். நாடுகின்ற வாதவூர் நாயகனே நான் வாடுகின்ற வாட்டமெல்லாம் வந்தொரு(க்)கால் மாற்ற வேண்டும் என வேண்டுகின்றார்.

திருவாசகக் காதல்

திருவாசக இன்பம் எப்படிப்பட்டதென்பதை ஆளுடைய அடிகள் அருண்மாலையின் ஆறாவது திருப்பாட்டிற் கூறுகின்றார். திருவாசகத்தை எண்ணும்போது ஏற்படும் இன்பம், காதலி ஒருத்தி தன் அன்புக் காதலனின் கலவியை எண்ணும்போது ஏற்படும் இன்பம் எப்படி இருக்கிறதோ அப்படி இருக்கிறதாம். காதலனும் சாதாரணக் காதலன் அல்லன். காமமிகு காதலன். காதலியும் சாதாரணக் காதலி அல்லள். ஏமமுறு கற்புடைய காதலி. ஏமமிகு கற்புடைய காதலி ஒருத்தி, காமமிகு காதலன் ஒருவனின் கலவியைக் கருதும்போது ஏற்படும் இன்பம் எப்படி இருக்கிறதோ அப்படி இருக்கிறதாம் திருவாசகத்தை எண்ணும்போது

Koviloor Digital Library

ஏற்படும் இன்பம். இதுதான் வள்ளலாரின் திருவாசகக் காதல். இக்காதல்தான் அவரைத் திருமண முதலிரவு நாளில் பள்ளியறையிலும் திருவாசக முற்றோதல் செய்யச் செய்தது.

சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே. - (3262)

நான் கலந்து பாடுங்கால்

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனிந்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே. -7(3263)

என்பது வள்ளலார் திருவாசகத்தைப் பாடி அனுபவிக்கும் அனுபவம்.

இப்பாடலில், 'வான் கலந்த மாணிக்கவாசக' என்று எடுத்த எடுப்பே பெரியதோர் தத்துவ அனுபவத்தை உள்ளடக்கியது. மாணிக்கவாசகர் வானிற்கலந்தார். வான் = சிதாகாயம். தில்லைச் சிற்றம்பலத்தில், சிதாகாய வெளியிற் கலந்தவர் மாணிக்கவாசகர். அதனாற்றான் வான் கலந்த மாணிக்கவாசக என்றார்.

பொதுவாக மக்கள் அனைவருமே இறுதியில் மண்ணிற் கலக்கிறார்கள். மண்ணிற் கலந்தவர்கள் மீண்டும் மீண்டும் மண்ணுக்கே வருவர். வந்து பிறந்து இறந்து உழல்வர். மண்ணிற் பிறந்தார் பெறுதற்குரிய பயன் வானிற் கலத்தல். வான் கலந்தவர் மீட்டிங்கு வந்து வினைப்பிறவிசாரார்.

மண்ணில் விண், **Heaven upon the earth** இகத்தே பரம் என்பதெல்லாம் இம்மண்ணுலக வாழ்வையே வாழ்வாங்கு வாழும் வாழ்வாக, விண்ணுலக வாழ்வாக அமைத்துக் கொள்வதே. முடிவில் வான் கலப்பதே. மண்வெளியிற் பிறந்த மனிதர் விண்வெளியை நோக்கிச் செல்ல வேண்டும். மாணிக்கவாசகரின் அனுபவம் வெளி அனுபவம். வள்ளலார் அனுபவம் வெளி அனுபவம், ஒளி அனுபவம்.

Koviloor Digital Library

இக்காலம் விண்வெளிக் காலம். வள்ளலார் காலந்தந்த நற்காலம். எல்லாரும் வெளி அனுபவம். ஒளி அனுபவம் பெற முயல வேண்டும். 'வான்கலந்த' என்ற ஒரு சீரில் இதுபோன்ற இன்னும் எவ்வளவோ உண்மைகள் நுண்மைகள் உள.

வான்கலந்த மாணிக்கவாசகரின் திருவாசகத்தை வள்ளலார் 'நான் கலந்து' பாடுகின்றார். தன்னையே கலந்து பாடுகின்றார், நல்ல கருப்பஞ்சாற்றில், தேன்கலந்து, பால் கலந்து, செழும் கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்கிறது. கருப்பஞ் சாற்றைக் கலக்கலாம், தேனைக் கலக்கலாம், பாலைக் கலக்கலாம், கனிச் சுவையைக் கலக்கலாம். இவற்றையெல்லாம் கலப்பது எளிது. ஆனால் ஊனைக் கலப்பது (ஊன் - உடம்பு), உயிரைக் கலப்பது அரிது. நான் கலந்து பாடுங்கால் என்பது ஊன் கலந்து உயிர் கலந்து பாடுவதுதான். கலக்கும் பலவற்றுள்ளும் நான்கலந்து, என் ஊன் கலந்து, உயிர்கலந்து என்பது தான் உண்மைக்கலவை.

'வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால்' என்ற இப்பாட்டுடன் "தேன்படிக்கும் அமுதாம் நின் திருப்பாட்டைத் தினந்தோறும் நான் படிக்கும்போது" என்னும் ஆளுடைய நம்பிகள் அருண்மாலைப் பாட்டையும் சேர்த்துக் காணவேண்டும்.

தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே. -3253

ஊன் கலந்து உயிர் கலந்து என்பதுபோல் இப்பாடலிலும் ஊன் படிக்கும். உயிர் படிக்கும், உயிர்க்குயிரும் படிக்கும் என்று வந்துள்ளதைக் காண்க.

ஒரு மொழி

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என் உடையவனையும் (இறைவனையும்) ஒன்றுவிக்கப் போதும் என்றால் வேறு சாதகம் எதற்கு, சஞ்சலம் எதற்கு, குரு மொழியை விரும்பி வேறு அயலிடங்களை நாடுவது எதற்கு என்று கேட்கிறார்.

Koviloor Digital Library

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே - 8 (3264)

ஞானிகள் பலரும் ஒருமொழி, ஒருவார்த்தை என்பதைத் தாங்கள் பெற்ற பேரனுபவமாகக் கூறியுள்ளனர்.

புற்று மாய்மர மாய்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
மற்று யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னைஓர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பிரி யாஉடல் தன்னைச்
செற்றி லேன் இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. -397

என்று மாணிக்கவாசகர் ஒரு வார்த்தையைக் குறிப்பிடுகிறார். என்னை "ஓர் வார்த்தையுள் படுத்துப் பற்றினாய்" என்பது மாணிக்கவாசகருக்கு, குருவடியில் வந்த இறைவன் செய்தருளிய ஒரு வார்த்தை (ஒரு மொழி) உபதேசத்தைக் குறிப்பது.

பேசும் பொருளுக்கு இலக்கியமாம் பேச்சுஇறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. -632

முன் பாடலிற் குறிப்பிட்ட ஒரு வார்த்தையே இப்பாடலில் மணிவார்த்தை எனக் குறிப்பிடப் பெற்றது. இம்மணிவார்த்தை பேச்சிறந்த வார்த்தை. ஆனால் பேசும் பொருளுக்கு இலக்கியமான வார்த்தை.

நீண்ட உபதேசங்களும் உண்டு. ஒரு வார்த்தை, ஒருமொழி அளவுக்குக் குறுகிய உபதேசமும் உண்டு. நீண்ட உபதேசங்களைவிடச் சுருக்கமான ஒருமொழி ஒருவார்த்தை உபதேசமே ஞானிகள் பலராலும்

Koviloor Digital Library

விதந்து கூறப்பெறுகிறது. தாயுமானவரும், வள்ளலாரும் கூடக் கூறுகின்றனர்.

ஒருமொழி, ஒருவார்த்தை யாவது எது? பிரணவம்தான். ஓங்காரந்தான்.

உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே -1/33-35
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத் துட்பொருளை
ஐயன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!-656

என்பன மாணிக்கவாசகரின் ஓங்கார அனுபவம்.

மண்சுமந்து மாறன் பிரம்படியால் புண் சுமந்த பொன்மேனி

மாணிக்கவாசகரது வரலாற்றில் இறைவன் நரிகளைப் பரிகளாக்கியதும், பிட்டுக்கு மண் சுமந்ததும் இரண்டு பெரிய அற்புதங்கள். இவ்விரு பெரு அற்புதங்களிலும் வள்ளலார் பெரிதும் ஈடுபட்டு மனமுருகிப் பாடுகின்றார்.

பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே.

-9 (3265)

வள்ளலாரின் இத்திருவருட்பாப் பாடல் திருவாசகத்தில் "பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்" என்னும் திருஅம்மானைப் பாடலை அப்படியே அடியொற்றி அமைந்திருக்கிறது.

பண்சுமந்த பாடற் பரிசு படைத் தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்துஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்த கலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் -182

Koviloor Digital Library

மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல் ஆறு அடிகளிலும் வள்ளலாரின் திருவருட்பாப் பாடல் நான்கு அடிகளிலும் முதற் சீர்கள் 'சுமந்த, சுமந்த' என்று அப்படியே முற்றெதுகையாய் அமைந்துள்ள பாங்கைக் கவனிக்க வேண்டும். மாணிக்கவாசகர் பாடலைக் காண்போம்.

இறைவனைப் பற்றிய பாடல்கள் பண் சுமந்த பாடல்கள்.

அவன் பெண்சுமந்த பாகத்தன். (ஒரு பாகத்தில் பெண்ணை வைத்தவன்)

அவனுடைய கீர்த்தி விண்சுமந்த கீர்த்தி.
அவனுடைய நெற்றி கண்சுமந்த நெற்றி. (நெற்றிக்கண்)
அவன் செய்த அற்புதம் கூலிக்கு மண் சுமந்தது.
அரசன் பிரம்படியால் அவன் பொன்மேனி புண் சுமந்தது.

அடிதோறும் 'சுமந்து சுமந்து' என்று வரும் பண் சுமந்த பாடல் இது. இப்பாடற் பொருளிலும் சுவையிலும் ஈடுபட்ட வள்ளலார் இதனை அப்படியே அடியொற்றிப் பாடுகின்றார்.

பெண் சுமந்த பாகப்பெருமான்
எண் சுமந்த சேவகன்
மண் சுமந்து நின்றது.
புண் சுமந்து கொண்டது.

அதே சுமந்த, சுமந்து, பெண் சுமந்த பாகப் பெருமானாகிய சிவபெருமான் எண் சுமந்த சேவகன்போல், சேவகன் என எண்ணுமாறு, ஒரு மாமேல் (குதிரையின் மேல்) எய்தியதும் (வந்ததும்) வைகை நதியில் மண் சுமந்து நின்றதும், மாறன் (பாண்டிய மன்னனின்) பிரம்படியால் புண்சுமந்து கொண்டதும் யாருக்காக? நின் பொருட்டன்றோ? உனக்காக அல்லவா! என்று ஏங்கிக் கேட்கிறார் வள்ளலார். இவ்வளவும் நின்பொருட்டன்றோ புண்ணியனே?

மாணிக்கவாசகருக்காக இறைவன் கூலியனாய் வந்து பிட்டுக்கு மண் சுமந்தான். பிரம்படிப்பட்டான். அவனது பொன்பட்ட மேனி பிரம்படியால் புண்பட்டபோது, அதைப் பார்த்துக் கொண்டிருந்த மாணிக்கவாசகரின் நெஞ்சம் அன்று என்னபாடு பட்டிருக்கும்? இன்று

Koviloor Digital Library

நான் கேட்கின்றபோதே என்நெஞ்சம் இடிபடுகிறதே என்று வள்ளலார் பாடுகிறார்.

> வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
> பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவிநடையாம்
> துன்பட்ட வீரர்அந் தோவாத வூரர்தம் தூயநெஞ்சம்
> என்பட்ட தோஇன்று கேட்டஎன் நெஞ்சம் இடிபட்டதே. -2251

முன் பாடலில் சுமந்த, சுமந்த என்று வந்தது போன்று இப்பாடலில் எல்லாம் 'அட்ட அட்ட' என்று வருகிறது.

வன்பட்ட கூடல்	-	வன்பு அட்ட கூடல், வன்முறையைத் தவிர்த்த மதுரை
வான்பட்ட வையை	-	வான்மழை பெருகி வெள்ளம் வந்த வையை நதி
வரம்பிட்ட	-	கரையை அடைத்த
பொன்பட்ட மேனி	-	பொன்னான உடம்பு
புண்பட்ட போதில்	-	பிரம்படியால் புண்பட்டபோது
துன்பட்ட வீரர்	-	துன்பு அட்ட வீரர் துன்பத்தைத் தொலைத்த வீரர்
என்பட்டதோ	-	என்னபாடு பட்டதோ
இடிபட்டதே	-	இடிபட்டது.

பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டதை இன்று கேட்கும் போதே என் நெஞ்சம் இடிபடுகிறதே, அன்று நேரில் கண்ட வாதவூரர் நெஞ்சம் என்ன பாடு பட்டதோ? என்பது எப்பேர்ப்பட்ட சிந்தனை, எவ்வளவு ஈடுபாடு.

நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி, இறைவன் குதிரைச் சேவகனாக வந்த கோலத்தை வள்ளற்பெருமான் மனக் கண்ணால் எண்ணிப் பார்க்கிறார். எண்ணிப் பார்த்துப் பாடுகிறார்.

> ஏனப் பரிசெஞ் சடைமுத லானஎல் லாம்மறைத்துச்
> சேனப் பரிகள் நடத்திடு கின்றநல் சேவகன்போல்
> மானப் பரிபவம் நீக்கிய மாணிக்க வாசகர்க்காய்க்
> கானப் பரிமிசை வந்தன ரால்எம் கடவுளரே. -830

Koviloor Digital Library

இப்படி அடியவர்களுக்கு இரங்கி வந்தருளுவது அவனுக்கு (இறைவனுக்கு) வழக்கம். வள்ளலாரின் இப்பாடல் திருவருள் வழக்க விளக்கம் என்னும் பதிகத்துள் அமைந்துள்ளது.

இப்பாடலுக்கு முன் பின் பாடல்கள் சுந்தரர், நாவுக்கரசர் சம்பந்தமானவை.

மாணிக்கவாசகருக்காக, குதிரைமீது வந்ததைப் பாடிய இப்பாடலைவிட ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டும் இன்னொரு பாடலைப் பாடுகின்றார். திருவருள் முறையீட்டில் உள்ள அப்பாடலில், மாணிக்கவாசகருக்காகக் கொண்ட குதிரைச் சேவகன் கோலத்தை என் கனவிலாவது காட்டு என்று இறைவனைக் கேட்கிறார்.

திருவாத வூரெம் பெருமான் பொருட்டன்று தென்னன்முன்னே
வெருவாத வைதிகப் பாய்பரி மேற்கொண்டு மேவிநின்ற
ஒருவாத கோலத் தொருவாஅக் கோலத்தை உள்குளிர்ந்தே
கருவாத நீங்கக் காட்டுகண் டாய்என் கனவினிலே. -2304

திருவாதவூர் எம்பெருமான் பொருட்டு, அன்று தென்னன் (பாண்டியன்) முன்னே பரிமேற் கொண்டு மேவிநின்ற அக்கோலத்தை, மாணிக்கவாசகருக்காகக் கொண்ட குதிரைச் சேவகக் கோலத்தை, காட்டுகண்டாய் என் கனவினிலே என்று கேட்கிறார். ஏன் கனவில் காட்டுமாறு கேட்கிறார்? நனவில் காட்டினால் இவருடைய கண்திருஷ்டியே (கண்ணேறே) பட்டுவிடலாம். அதனால் காட்டக் கூசலாம். கனவில் காட்டினால் கண்திருட்டி படாது. ஆதலின் கனவிலாவது காட்டு என்கிறார். "பண் ஏறும் மொழி அடியர் பரவி வாழ்த்தும் பாதமலர் அழகினை இப்பாவி பார்க்கில் கண்ணேறு படும் என்றோ கனவிலேனும் காட்டென்றால் காட்டுகிலாய்"(103) என்னும் ஜீவசாட்சிமாலைப் பாடலை இங்கே கருதவேண்டும்.

பிட்டு வாணிகம் செய்த மூதாட்டியின் பெயர் வந்தி. வந்தியின் தேன் பிட்டை உகந்த வள்ளலே என்று வள்ளலார் இறைவனைப் பாடும் சிவநேச வெண்பாப் பாடலும் பிட்டமுது செய்ததை எண்ணி வியப்பது.

Koviloor Digital Library

வந்தித்தேன் பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்
சிந்தித்தேன் என்றல் சிரிப்பன்றோ – பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுளின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தல் மறந்து. - 1974

இதுவரை ஆளுடைய அடிகள் அருண்மாலையில் ஒன்பது பாடல்களைப் பார்த்தோம். தொடர்புடைய வேறு பதிகப் பாடல்கள் சிலவற்றையும் இணைத்துப் பார்த்தோம். இனி நிறைவுப் பாடலாகிய பத்தாம் பாடலைக் காண்போம். இதுவும் திருவாசகப் பொருட் பெருமையைக் கூறுவது.

திருவாசகம் பாடக் கேட்கும் அனுபவம்

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே. -10(3266)

'வான் கலந்த மாணிக்கவாசக' என்ற ஏழாம் பாடலோடு, 'வாட்டமிலா மாணிக்கவாசக' என்ற இப் பத்தாம் பாடலைச் சேர்த்துக் காண வேண்டும். அது போன்ற பாடல்தான் இதுவும். அது, தாமே பாடும் அனுபவம். இது பிறர்பாடக் கேட்கும் அனுபவம்.

வாட்டமில்லாத மாணிக்கவாசகப் பெருமானே உன்னுடைய திருவாசகத்தைக் கேட்டபொழுது அங்கே இருந்த கீழான பறவை இனங்களும் (பறவை வகைகளும்) வேட்கையுறும், பொல்லாத விலங்குகளும் ஞான நாட்டமுறும் என்றால், மனிதனாகிய நான் வேட்டமும் நாட்டமும் அடைதல் வியப்பல்லவே என்கிறார்.

கீழ்ப் பறவைச் சாதிகளும் வேட்டமுறும்
பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும்

என்பதில் கீழ்ப்பறவை என்பதையும், பொல்லா விலங்கு என்பதையும் கூர்ந்து நோக்க வேண்டும். மனிதரில்தான் சாதி இருக்கிறது. பறவையிலும் சாதி உண்டோ எனலாம். இங்கு சாதி என்பது வர்ணாசிரம சாதியன்று. தொல்காப்பியம் மரபியலில் "நீர்வாழ் சாதியும் அது

Koviloor Digital Library

பெறற்குரிய" , "நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே" (44;46) என்றும், பெரும்பாணாற்றுப்படையில் "பறவைச் சாதியன்ன"(229) என்றும் வருமிடங்களில் சாதி என்ன பொருளதோ அதே பொருளதுதான் வள்ளலார் திருவருட்பாவின் கீழ்ப்பறவைச் சாதி, ஓரறிவு உயிர்கள் முதலாக ஆறறிவுள்ள மக்கள் வரை எல்லாவற்றிலுமே குணத்தால் பழக்க வழக்க ஒழுக்கங்களால் கீழ், மேல் உண்டு. பிணந்தின்னும் கழுகு, செத்த எலியையும், சளி முதலிய அசுத்தங்களையும் தின்னும் காகம் போன்றவை கீழ்ப் பறவைச் சாதி. அன்னம் கிளி போன்றவை மேல் பறவைச் சாதி, புலி சிங்கம் போன்றவை பொல்லா விலங்குகள். பசு ஆடு போன்றவை சாதுவான விலங்குகள்.

திருவாசகத்தைக் கேட்டபோது கழுகு முதலிய கீழ்ப் பறவைச் சாதிகளும் புலி சிங்கம் முதலிய பொல்லா விலங்குகளுமே வேட்டமுறும், மெய்ஞ்ஞான நாட்டமுறும் என்றால் மனிதனாகிய நான் அடைவதில் வியப்பென்ன என்கிறார்.

கல்விக்கு அடுத்தது கேள்வி. 'கற்றிலனாயினும் கேட்க' என்பது திருக்குறள் (414). திருவாசகத்தைக் கற்க வேண்டும். கற்று ஓத வேண்டும். பாடவேண்டும், பாராயணம் செய்ய வேண்டும். கல்வியறிவு பெறாதவர்கள், திருவாசகம் ஓதுவதை, பாடுவதை, பாராயணம் செய்வதைக் கேட்கவாவது வேண்டும்.

திருவாசகத்தில் சோதியும் கருணையும்
வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

திருவாசகத்தில் மிகுதியாகப் பயின்றுவரும் சொற்கள் நான்கு. 1. சோதி, 2. கருணை, 3. தேன், 4. அமுது

"சோதி" நாற்பத்து இரண்டு (42) இடங்களிலும்

"கருணை" அறுபத்து இரண்டு (62) இடங்களிலும்

"தேன்" ஐம்பத்தொரு (51) இடங்களிலும்

"அமுது" நூற்று இரண்டு (102) இடங்களிலும்

Koviloor Digital Library

வருகின்றன. திருவாசகம் ஐம்பத்தொரு பதிகங்கள். பதிகத்திற்கு ஒரு தேன்; இரண்டு அமுது. திருவாசகமே தேன். "திருவாசகத்தேன்" என்பது ஆன்றோர் அனுபவ வாக்கு. தேன் இளமையைத் தரும்; முதுமையை விரட்டும். அமுது சாகாமையை (மரணமிலாப் பெருவாழ்வை)த் தரும்.

சோதியையும், கருணையையும் நாம் பற்றி கொண்டால் இளமையையும் மரணமிலாப் பெருவாழ்வையும் பெறலாம் என்பது திருவாசக அனுபவம்.

வள்ளலார் திருவாசகத்தின் சோதியையும் கருணையும் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை என்று ஒரு மகாமந்திரமாகவே ஆக்கிக் கொண்டார்.

மாணிக்கவாசகரின் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்ஜோதி" (திருவெம்பாவை-1) வள்ளலாரின் அருட்பெருஞ் ஜோதியாயிற்று.

மாணிக்கவாசகரின் கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை (திருவெம்பாவை-8) வள்ளலாரின் "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை" யாயிற்று.

திருவாசகம் – திருஅருட்பா ஒப்புமைப் பகுதிகள்

திருவாசகம் திருஅருட்பா ஒப்புமைப் பகுதிகள பல உண்டு. அவ்வளவையும் எடுத்துக்காட்ட இங்கு இடமின்மையின் ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துக் காட்டுவோம்.

ஆமாறுஉன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதிராலே சார்வானே. -18

என்ற திருவாசகப் பாடலில் ஆமாறு சாமாறு என்ற சொல்லாட்சி வள்ளற் பெருமானது உள்ளத்தைக் காட்டுகிறது.

ஆமாறு - ஆம்ஆறு - ஆகின்றவழி; உருப்படியாகின்ற வழி.

Koviloor Digital Library

சாமாறு - சாம்ஆறு - சாகின்ற வழி; செத்துப்போகும் வழி.

திருஅருட்பா அருட்பெருஞ்சோதி அகவலில் சாமாறு ஆமாறுகளை அப்படியே ஆள்கிறார்.

சாமா றனைத்தும தவிர்த்திங் கெனக்கே
ஆமா றருளிய அருட்பெருஞ் ஜோதி

என்பது வள்ளற் பெருமானது அருட்பெருஞ்ஜோதி அகவல் (அடி 205-6)

"பாதாளம் ஏழினுங்கீழ்" என்று தொடங்கும் திருவாசகத்தில் (104) "ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்" என்றொரு தொடர் வருகிறது. இத் தொடரை அப்படியே வைத்து வள்ளலார் ஒரு வெண்பாவைப் பாடுகிறார்.

ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
சாதல் ஒழித்தென்னைத் தனாக்கிப் - பூதலத்தில்
ஐந்தொழில்செய் என்றே அருட்சோதிக் கோலவித்தான்
வெந்தொழில் போய் நீங்க விரைந்து. -4828

என்பது வள்ளலார் திருஅருட்பா.

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊன நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. -99

என்ற திருவாசகமும்,

வான நாடரும் நாடரும் மன்றிலே வயங்கும்
ஞான நாடகக் காட்சியே நாம்பெறல் வேண்டும்
ஊன நாடகக் காட்சியால் காலத்தை ஒழிக்கும்
ஈன நாடகப் பெரியர்காள் வம்மினோ ஈண்டே. -5550

என்ற திருவருட்பாவும் ஒப்புநோக்கத்தக்கன.

Koviloor Digital Library

"மத்தேறி அலை தயிர்போல்" என்ற திருஅருட்பாவும் (2144), "மத்திடு தயிராகி", (44) "தயிரில் பொரு மத்துறவே"(133) , "மத்துறு தன் "தயிரில் புலன் தீக்கதுவக் கலங்கி" (134); "மத்திட உடைந்து தாழியைப் பாவு தயிர்போல்" (413) என்ற திருவாசகங்களும் ஒப்புநோக்கத்தக்கன.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார். வள்ளலாரும் திருவருட்பாவில் திருப்பள்ளி எழுச்சி பாடுகிறார். திருவுந்தியார் திருவாசகத்தில் ஒரு பதிகம். திருவருட்பாவிலும் திருவுந்தியார் என்ற ஒரு பதிகத்தை வள்ளலார் பாடியுள்ளார். இவையெல்லாம் திருவாசகத்தின் தாக்கங்கள்.

திருவாசக அனுபவங்கள் பலவற்றை வள்ளலாரும் பெற்றிருக்கிறார். மாணிக்கவாசகர் வள்ளலார் அனுபவ ஒப்புமைகள் பல உண்டு. இருவரும் சிலம்பொலி கேட்டவர்கள். பட்டிமன்றம் ஏறியவர்கள். இப்படிப் பல ஒற்றுமைகள்.

வாதவூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும் -திருவாசகம் 2-52:53

தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள்
செலுத்திய திருச்சிலம்பொலி நான்
கேட்டபோதிருந்த கிளர்ச்சியும் . . . . - திருஅருட்பா 3530

"எட்டும் இரண்டும் அறியாத என்னைப் பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை"என்று மாணிக்கவாசகர் பாடுகின்றார் (53). "எட்டும் இரண்டும் அறிவுறுத்த என்னைப் பட்டிபத்திற் பதித்த மெய்த் தந்தையே" என்று வள்ளலார் பாடுகின்றார். 4615 (1131-2)

இருவரது பஞ்சாக்கர அனுபவங்களும் ஒத்தன.

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்தஅடியேற்கு அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. (திருவாசகம் 55)

Koviloor Digital Library

நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமஎனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும்திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே. திருஅருட்பா 2260

இத்திருவாசமும் திருவருட்பாவும் ஒன்றை ஒன்று அடியொற்றி அப்படியே படி எடுத்தாற்போன்று அமைந்துள்ள அருமையே அருமை.

திருவாசகம் முதல் நான்கு அகவல்களும் திருஅருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவலும்

திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்களும் திருவாசகத்திற்குப் புகுமுகம் போன்று நுழைவாயில் போன்று அமைந்தவை. திருவாசகத்தின் முதல் நான்கு அகல்களில் மிகவும் ஈடுபாடுடைய வள்ளற்பெருமான் அதன் விரிவு போன்று அருட்பெருஞ்ஜோதி அகவலை அருளியுள்ளார். மாணிக்கவாசகர் ஓரிரு அடிகளிற் கூறுவனவற்றை வள்ளற்பெருமான் இருபது முப்பது அடிகளுக்கு விரிக்கின்றார். திருவாசக நான்கு அகவல்களின் தாக்கம் வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி அகவலில் உண்டு. வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி அகவலுக்குத் திருவாசக முதல் நான்கு அகவல்கள் ஒரு முன்னோடி.

திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலும் வடலூர் சத்தியஞான சபையும்

தேவாரம் பாடிய மூவரும் கோயில் கட்டவில்லை. முன்னரே உள்ள கோயில்களைப் பாடினார்கள். மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் ஆவுடையார் கோயிலைக் கட்டினார். வள்ளலார் வடலூரில் சத்தியஞானசபையைக் கட்டினார்.

திருப்பெருந்துறைக் கோயிலில் லிங்கம் இல்லை. லிங்கத்தின் இடத்தில் ஆவுடையார் (பீடம்) மட்டுமே உண்டு. ஆவுடையார் கோயில் என்றே அது பெயர்பெற்றது. கொடி மரம் இல்லை. பலிபீடம் இல்லை, நந்தி இல்லை, இப்படிப் பல மாற்றங்கள், புதுமைகள். திருப்பெருந்துறைக் கோயில் ஆகம அடிப்படையில் அமைந்ததன்று. அனுபவ ஞான அடிப்படையில் அமைந்தது. வழிபாட்டு முறைகளிலும் மாற்றங்கள்.

Koviloor Digital Library

புதுமைகள். திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் முழுமையும் தத்துவ அமைப்பு; தத்துவ அனுபவம்.

வடலூரில் வள்ளலார் அமைத்தருளிய சத்தியஞான சபையும் அப்படியே. முழுவதும் தத்துவ அமைப்பு. அனுபவ ஞானஅமைப்பு. வடலூர் சத்தியஞான சபைக்குத் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் முன்னோடி.

மாணிக்கவாசகரின் சைவ சன்மார்க்கமும் வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கமும்

சைவத்தில், தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு மார்க்கங்கள் உண்டு. நான்கு மார்க்கங்களையும் விளக்கியருள சமயகுரவர் நால்வரும் வந்தனர்.

தாசமார்க்கத்தை விளக்கியருளியவர் திருநாவுக்கரசர்(அப்பர்) – ஞான சரியை

சற்புத்திர மார்க்கத்தை விளக்கியருளியவர் திருஞானசம்பந்தர் – ஞானக்கிரியை

சகமார்க்கத்தை விளக்கியருளியவர் சுந்தரமூர்த்திகள் – ஞானயோகம்

சன்மார்க்கத்தை விளக்கியருளியவர் மாணிக்கவாசகர் –ஞானத்தில் ஞானம்

மாணிக்கவாசகர் விளக்கியருளிய (சைவ)சன்மார்க்கத்தைச் சமரச சுத்த சன்மார்க்கமாக விளக்கியருளியவர் சைவ சமயகுரவர் நால்வருக்குப்பின், ஐந்தாவதாக வந்த சமரச சன்மார்க்க குரவராகிய வள்ளலார்.

"நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே"
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

வள்ளல் பெருமான்
இயற்றி அருளிய

ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை
ஆளுடைய அரசுகள் அருண்மாலை
ஆளுடைய நம்பிகள் அருண்மாலை
ஆளுடைய அடிகள் அருண்மாலை

அருட்பாடல்கள் தொகுப்பு

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும் உற்றிலாச் சிறியஓர் பருவத்
திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில் ஏற்றவுந் தரமிலா மையினான்
விலகுறுங் காலத் தடிக்கடி ஏற விடுத்துப்பின் விலகுறா வண்ணம்
அலகிலா உணர்ச்சி அளித்தனை உன்றன் அருட்சுடற் பெருமைஎன் புகல்
திலகநற் காழி ஞானசம் பந்தத் தெள்ளமு தாஞ்சிவ குருவே. -1

உயிர்அனு பவம்உற் றிடில் அதனிடத்தே ஓங்கருள் அனுபவம் உறும்அச்
செயிரில்நல் லனுப வத்திலே சுத்த சிவஅனுபவம்உறும் என்றாய்
பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப் பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைத் துறவைத் தருளிய ஞான பந்தன்என் றோங்குசற் குருவே -2

தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித் தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி உற்றிடல் உயிரனு பவம்என்
றித்துணை வெளியில் என்னைஎன் விடத்தே இறந்தவா றனித்தனை அன்றோ
சித்தநற் காழி ஞானசம் பந்தச் செல்வமே எனதுசற் குருவே. -3

தனிப்பர நாத வெளியில்மேல் நினது தன்மயந் தன்மயம் ஆக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப் பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய் இருந்ததே அருளனு பவம்என்
றெனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன் என்னும்என் சற்குரு மணியே -4

உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல் உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய் நவிற்றுருந் தானதாய் இன்ன
வின்னொணா அப்பால் அப்படிக் கப்பால் வெறுவெளி சிவஅனு பவம்என்
றுள்ளுற அளித்த ஞானசம் பந்த உத்தம சுந்தசற் குருவே -5

பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும் பொருள் அரு ளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப் பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் எனஎன் தனக்கருள் புரிந்த தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின் முதலர சியற்றிய துறையே -6

Koviloor Digital Library

அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ அருட்சிவ மதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம் பார்த்தரு ளால் எழுந்தருளி
மிடியற் எனைத்தான் கடைக்கணித் துனக்குள் விளங்குவ அடிமுடி என்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று வயதினிலே அருள்பெற்ற மணியே -7

செவ்வகை ஒருகால் படுமதி அளவே செறிபொறி மனம்அதன் முடிவில்
எவ்வகை நிலையும் தோற்றும்நீ நினக்குள் எண்ணிய படிஎலாம் எய்தும்
இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன் றெனக்குள் புரிந்தசற் குருவே
தெவ்வகை அமண இருளற எழுந்த தீபமே சம்பந்தத் தேவே. -8

முன்புறு நிலையும் பின்புறு நிலையும் முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண் டையநீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண் டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே என்னுயிர்க் குயிர்எனுங் குருவே -9

வருபகற் கற்பம் பலமுயன் றாலும் வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறஅளித் தனைநின் உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப் பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தனித் உயர்தனிக் கவுணிய மணியே -10

உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும் உற்றிலாச் சிறயஓர் பருவத்
திலகமி எனக்குள் இருந்தருள் நெறியில் ஏற்றவுந் தரமிலா மையினான்
விலகுறுங் காலத் தழக்கடி ஏறு விடுத்துப்பின் விலகுறா தனித்தாய்
திலகநற் றாழி ஞானசம் பந்தத் தென்னமு தாஞ்சிவ குருவே.

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சீரார் சண்பைக் கவுணியர்தம் தெய்வ மரபில் திகழ்விளக்கே
தெவிட்டா துளத்தில் தித்திக்கும் தேனே அழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என்இரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில்உமை இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே என்ஆ ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமா னேநின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்தில் பிறங்குவரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய அரசுகள் அருண்மாலை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

திருத்தகுசீர் அதிகைஅருள் தலத்தின் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத் திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் உணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனித னேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே. -1

வாய்மையிலாச் சமணாதர் பலகாற் செய்த
வஞ்சமெலாம் திருவருட்பேர் வலத்தால் நீந்தித்
தூய்மைபெறும் சிவநெறியே விளங்க ஓங்கும்
சோதிமணி விளக்கேஎன் துணையே எம்மைச்
சேய்மைவிடா தனிமையிடத் தாள வந்த
செல்வமே எல்லையிலாச் சிறப்பு வாய்ந்துள்
ஆய்மையுறு பெருந்தகையே அமுதே சைவ
அணியேசொல் லரசெனும்பேர் அமைந்த தேவே. -2

தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பும் ஞான
நாயகனே நல்லவர்க்கு நண்ப னேஎம்
பாவமெலாம் அகற்றிஅருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்
மேவவிருப் புறும்அடியர்க் கன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகைநீ விதித்தி டாயே. -3

விதிவிலக்கி தென்றறியும் விளைவொன் றில்லா
வினையினேன் எனினும்என்னை விரும்பி என்னுள்
மதிவிளக்கை ஏற்றிஅருள் மனையின் ஞான
வாழ்வடையச் செயல்வேண்டும் வள்ள லேநற்
பதிமலர்த்தாள் நிழலடைந்த தவத்தோர்க் கெல்லாம்
பதியேசொல் லரசெனும்பேர் படைத்த தேவே.

Koviloor Digital Library

கதிதருகற் பகமேமுக் கனியே ஞானக்
கடலேஎன் கருத்தேஎன் கண்ணு ளானே. -4

கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன்என் றனையாள வேண்டுங் கண்டாய்
ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற
உத்தமனே சித்தமகிழ்ந் துதவு வோனே. -5

ஓங்காரத் தனிமொழியில் பயனைச் சற்றும்
ஓர்கிலேன் சிறியேன்இவ் வுலக வாழ்வில்
ஆங்காரப் பெருமதமால் யானை போல
அகம்பாவ மயனாகி அலைகின் றேன்உன்
பாங்காய மெய்யடியார் தம்மைச் சற்றும்
பரிந்திலேன் அருளடையும் பரிசொன் றுண்டோ
தீங்காய செயலனைத்தும் உடையேன் என்ன
செய்வேன்சொல் லரேசேஎன் செய்கு வேனே. -6

செய்வகைஒன் றறியாத சிறியேன் இந்தச்
சிற்றுலக வாழ்க்கையிடைச் சிக்கி அந்தோ
பொய்வகையே புரிகின்றேன் புண்ணி யாநின்
பொன்னடியைப் போற்றிலேன் புனித னேநான்
உய்வகைஎவ் வகையாது செய்வேன் நீயே
உறுதுணைஎன் றிருக்கின்றேன் உணர்வி லேனை
மெய்வகையிற் செலுத்தநினைத் திடுதி யோசொல்
வேந்தேஎன் உயிர்த்துணையாய் விளங் குங்கோவே. -7

விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி
மேவியமெய்ப் பொருளைஉள்ளே விரும்பி வைத்துக
களங்கறுமெய் யன்பரெல்லாங் களிப்ப அன்றோர்
கற்றுணையாற் கடல்கடந்து கரையிற் போந்து
துளங்குபெருஞ் சிவநெறியைச் சார்ந்த ஞானத்
துணையேநந் துறையேநற் சுகமே என்றும்
வளங்கெழும்ஆ கமநெறியை வளர்க்க வந்த
வள்ளலே நின்னருளை வழங்கு வாயே -8

Koviloor Digital Library

அருள்வழுங்குத் திலகவதி அம்மை யார்பின்
அவதரித்த மணியேசொல் லரசே ஞானத்
தெருள் வழங்கும் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறிய னேனை
இருள்வழங்கும் உலகியல்நின் றெடுத்து ஞான
இன்னருள்தந் தாண்டருள்வாய் இன்றேல் அந்தோ
மருள்வழங்கும் பவநெறியிற் கழல்வேன் உய்யும்
வகைஅறியேன் நின்னருட்கு மரபன் றீதே. -9

தேர்ந்தஉளத் திடைமிகவும் தித்தித் தூறும்
செழுந்தேனே சொல்லரசாம் தேவே மெய்ம்மை
சார்ந்துதிகழ் அப்பூதி அடிகட் கின்பம்
தந்தபெருந் தகையேஎம் தந்தை யேஉன்
சுவர்ந்தமதி நிறைவேஎன் குருவே எங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்
தீர்ந்தபெரு நெறித்துணையே ஒப்பி லாத
செல்வமே அப்பனெனத் திகழ்நின் றோனே. -10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய நம்பிகள் அருண்மாலை

கொச்சகக் கலிப்பா

மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுள்நடம் புரிமருந்தைத்
துதியணிசெஞ் சுவைப்பொருளில் சொன்மாலை தொடுத்தருளி
விதியணிமா மறைநெறியும் மெய்ந்நிலைஆ கமநெறியும்
வதியணிந்து விளங்கவைத்த வன்தொண்டப் பெருந்தகையே. 1

நீற்றிலிட்ட நிலையாப்புன் னெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத் தியங்குற்றேன் தனைஆளாய்
ஏற்றிலிட்ட திருவடியை எண்ணிஅரும் பொன்னையெல்லாம்
ஆற்றிலிட்டுக் குளத்தெடுக்க அருட்டலைமைப் பெருந்தகையே. 2

இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன் வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குயர்பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உறா வன்தொண்டப் பெருந்தகையே. 3

வேதமுதற் கலைகளெலாம் விரைந்துவிரைந் தனந்தமுறை
ஓதஅவைக் கணுத்துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம்யா துரைத்தருளாய் வன்தொண்டப் பெருந்தகையே 4

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைத் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்
தூழியல்இன் புறுவதுநான் உயர்கருணைப் பெருந்தகையே 5

வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்
தான்காண இறைஅருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூரப் பெருந்தகையே. 6

தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் பொதென்னை நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே 7

Koviloor Digital Library

இன்பாட்டுத் தொழிற்பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போல் ஊர்பாட்டுக் குவந்திலர்என்
றென்பாட்டுக் கிசைப்பினும்என் இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகாண் அருட்பாட்டுப் பெருந்தகையே 8

பரம்பரமாம் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத்தோ ழமைகொண்ட உன்பெருமை தனைமதித்து
வரம்பெறநற் றெய்வமெலாம் வந்திக்கும் என்றால்என்
தரம்பெறஎன் புகல்வேன்நான் தனித்தலைமைப் பெருந்தகையே. 9

பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

ஆளுடைய அடிகள் அருண்மாலை

நரவு கொச்சகக் கலிப்பா

தேகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவலான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே. 1

கருவெளிக்குட் புறனாகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்கால பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே. 2

மண்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர் இறையே. 3

உருஅண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்நின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே. 4

தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே. 5

சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே 6

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே. 7

Koviloor Digital Library

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே 8

பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே. 9

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library



திலகவதியார் திருவருள் ஆதீன முகப்புத் தோற்றம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்து'. புதுக்கோட்டையில் அவதாரம் செய்தருளிய அன்னை சாயிமாதா சிவ பிருந்தாதேவி அவர்கள். தமிழகத்திலேயே முதன் முதலாக மகளிர் பெயரில் திருமடம் நிறுவிய சாதனையாளர்.

வேறு சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றியப் பெருமைக்குரிய மகளிர் திலகவதியாரும். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாருமே. இவர்களில் எளிய குலப் பெண்ணரசியான திலகவதியார் பெயரில் திருமடம் ஏற்படுத்தி. சமயப்பணியும். சமுதாயப்பணியும் ஆற்றியவர் அருளன்னையார் அவர்கள்.

'பாலறாவாயனாய்' ஓர் இளம் அகவைச் சிறுவன் அன்னையாரின் அருட்பார்வையால் ஆட்கொள்ளப் பெற்றுத் திருமகனாய் ஏற்கப் பெற்றான். கருவிலே ஆன்மீகத் திருவுடையவனாய் இலங்கிய தயானந்த சந்திரசேகரன். அன்னையார் ஈசனடி எய்திய பின்னர். தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகளாகத் திருநாமம் பெற்றுத் திருமடத்தை ஒரு முன்னோடி ஆன்மீக பீடமாக இயக்கி வருகிறார்கள்.

நம் ஞானபூமியின் அழிவற்ற ஆன்மீகச் செல்வங்களான. தேவாரம். திருவாசகம். திருமந்திரம் போன்ற வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் நூல்களில் உள்ள அருட்பாடல்களை ஒப்பித்தல் போட்டியாக நடத்தி சுற்றுப்புறங்களிலுள்ள. ஆயிரக்கணக்கான பள்ளிக்குழந்தைகள் பயனுறும் வண்ணம் பதக்கங்களும். பரிசுகளும் கொடுத்து வருவதைத் தமிழ்ச் சமுதாயம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. தமிழறிவும். மொழித்திறனும் குறைந்து வரும் நிலையில். பழமையான நூல்களில் உள்ள சிந்தனை ஆழமும். கருத்து நுட்பமும் செறிந்த விளக்கங்களை தமிழாய்ந்த அறிஞர்களைக் கொண்டு எளிய உரைநடையில் எழுதச் செய்து நூல்களாக வெளியிடுவது 'அரியவற்றுளெல்லாம் அரிய செயல்' என்பேன்.

திருவாசகம். திருமந்திரம் ஆய்வு நூல்களையும். அருள் அன்னையார் சாயிமாதா. பல 'முதல்' களுக்கு உரிய சாதனைப் பெண்மணியான டாக்டர்.முத்துலெட்சுமி ஆகியோரது வரலாறுகளையும் வெளியிட்டதோடு. இப்போது 'வள்ளலார் நோக்கில் நால்வர் பெருமக்கள்' என்னும் தொகுப்பு நூலையும் அழகிய வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள்.

பொருள் வளத்திலும். சொத்து அளவிலும் மிகச்சிறிய திருமடத்திலிருந்து முகிழ்க்கும் இப் பெரிய பணிகளைப் பாராட்டுவதோடு. நின்று விடாமல். அவற்றைப் போற்றி பொருளுதவித் துணைசெய்ய வேண்டியது தமிழ்ச் சமய அன்பர்களின் தலையாய கடப்பாடு ஆகும்.

திருமடத்தின் பணிக்கு நாமும் கைகொடுத்து உதவுவோம்.
சேர வாருங்கள் ஜெகத்தீரே!.....

- டாக்டர் அய்க்கண்

திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120, மச்சுவாடி, புதுக்கோட்டை - 622 001.
தொலைபேசி: 04322-228024
விலை ரூ. 40.00

SURYA SVK 04562 223315